ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிய

செந்தமிழாராய்ச்சி.

இது,

ஸ்ரீமத் ராவ்ஸாஹிப். மு. இராகவையங்காரவர்கள்
செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிட்டுவரும்
அருளிச்செயற்பாடவமைதி யென்னும் கட்டுரைகள்
பூர்வாசார்ய அபசார புஞ்ஜமென்றும்
அஸங்கதமென்றும் பரக்க நிரூபிப்பது.

பண்டித. அ. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்காரால்

காஞ்சீபுரம்
யுனைடெட் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

2-11-43

சுபாநுஹு ஐப்பசியில் திருமூலம்.

விலை 0—8—0.

ஸ்ரீ:

திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை

மதிப்புரை.

(மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளிவந்தது.)

திவ்யப்பிரபந்தங்கட்கு, 'திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை' என்னும் பெயரால் ஒரு தமிழுரை, காஞ்சீபுரம் **ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ உ. வே. அண்ணங்கராசாரியர்** ஸ்வாமிகளால் எழுதப்பட்டுப் பதிப்பித்துப் பிரசுரம்செய்யப்பட்டு வருகிறது. இவ்வுரையாசிரியர் இளமைப் பருவம் பொருந்தியவராயினும் வடமொழியிலும் தென்மொழியிலும் தெளிந்தஞானம் பெற்று சாஸ்திர ஸம்ப்ரதாயங்களையும் களங்கமறக்கற்று உபந்யாஸ வகையிலும் தேர்ச்சிபெற்றுள்ளாரென்பதை யாம் ஆராய்ந்துணர்ந்துளோம். அன்றியும் இவர் தம்முடைய புலமையினுற் பலரும் பயன்பெறுமாறு பல நூல்களையெழுதி வெளியிட்டு வருகின்றார். ஸம்ஸ்கிருதபாஷையிலும் திராவிடபாஷையிலும் வியாக்கியானங்கள் உபந்யாஸங்கள் முதலியவையெழுதுவதில் இவர் மிக்க வல்லமை பெற்றிருக்கின்றாரென்பது இவர் வெளியிடும் கிரந்தங்களால் வெளியாகின்றது.

ஆழ்வார்களின் அருளிச்செயல்களுக்கு இவரால் எழுதி அச்சிடுவிக்கப்பட்டு வருகின்ற 'திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீபிகை' என்னும் தமிழுரையை நோக்குங்கால் இவர் செந்தமிழ்ச்செல்வரென்னும் சிறப்புப்பெயர் பெறுதற்குரியரென்பது தெற்றென விளங்கும். அவ்வுரையில் பிரதிபதார்த்தம், தாத்பரியார்த்தம், விசேஷார்த்தம், ஸ்வாபதேசார்த்தம், இலக்கணக்குறிப்பு முதலியவை மிகவும் எளியதாயுந் தெளிவாயுமுள்ள நடையில் எழுதப்படுகின்றன.

மிக்க ஆராய்ச்சியுடன் எழுதப்படுகின்ற இவ்வுரை ஸம்ஸ்கிருதத்தில் மிகப்பயிற்சியில்லாத தமிழர்களும் பொருளுணருமாறெழுதப்பட்டிருத்தலால் ஆத்திகர் அனைவர்க்கும் இது ஆவச்யகமேயாம்.

செந்தமிழ்ப் பத்திராதிபர். (1914வரு)

ஸ்ரீ:

முன்னுரை.

ஸ்ரீ வைஷ்ணவ ஸத்ஸம்ப்ரதாய ரஸிகர்களான மஹான்களை அடி பணிந்து நீசனேன் நிறையொன்றுமிலேன் செய்யும் விண்ணப்பம்.

நமது ஸம்பிரதாயத்தில் தமிழ் வேதமென்று போற்றப்படுகின்ற திவ்யப்பிரபந்தங்களுக்குப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த வியாக்கியானம் ஒப்புயர்வற்றதென்று உலகமெல்லாம் புகழ நின்றது. இதன் பெருமையை மணவாளமாமுனிகள் உபதேசரத்தினமாலையில் "பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்குந்தெரிய" என்ற பாசுரத்தினால் அருளிச்செய்துள்ளார். மற்றுஞ்சில பூருவாசாரியர்களும் திவ்யப்பிரபந்த வியாக்கியான கர்த்தாக்களாக அமைந்துள்ளார்கள். பெரியாழ்வார் திருமொழியில் நானூற்றுச் சொச்சம் பாசுரங்களுக்குப் பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானம் கரையானுக்கிரையாகி லோபித்துவிட அதனை மணவாளமாமுனிகள் பூர்த்திசெய்தருளினர்.

இங்ஙனம் திவ்யப்ரபந்த வியாக்கியான கர்த்தாக்களாக அமைந்த நம் பூருவாசாரியர்கள் ஸர்வதோமுகமான ஞானம்படைத்த ஸர்வஜ்ஞர்களாதலால் அவர்களிட்டருளின உரைகளில் ஒருவகையான குற்றங்குறையும் சொல்வதற்கில்லை. பரமப்ராமாணிகர்களான அவர்களுடைய ஸ்ரீஸூக்திகளே நமக்குத் தஞ்சமாகின்றன.

உண்மை இங்ஙனமிருக்க, ஸ்ரீமத். ராவ்ஸாஹிப் மு. இராகவையங்காரென்பவர் அந்தப் பூருவாசார்யவியாக்கியானங்களில் குற்றங்குறைகள் இருப்பனவாக உலகுக்குக் காட்ட முயன்று சில கட்டுரைகளையெழுதி மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிடத் தொடங்கி ஸ்ரீ வைஷ்ணவவுலகுக்கு மஹத்தான மனவருத்தத்தை உண்டுபண்ணினார்.

அவருடைய நிரூபணங்களைப்பற்றி லோகோபகாரார்த்தமாக ஸ்ரீ ஸ்வாமி அண்ணங்கராசாரியர் எழுதவேண்டிய பதிலை யெழுதித் தம்முடைய அம்ருதலஹரீ பத்ரிகையில் வெளியிட்டிருக்கின்றார். மூன்று நான்கு வியாஸங்களாக வெளிவந்திருக்கின்ற அவற்றைத் தனிப்புத்தகமாக அச்சிட்டு உலகுக்கு உதவவேணுமென்று பல பெரியார் நியமித்தருளியதனால் இப்புத்தகம் பிரசுரஞ்செய்யப்படுகின்றது.

ஷை மு. இராகவையங்காரவர்கள் 14-10-43உ ஸ்ரீ அண்ணங்கராசாரியர்ஸ்வாமி ஸன்னிதிக்கு ஒரு கார்ட்டு எழுதியிருந்தார். அதற்கு ஸ்ரீ ஸ்வாமி யெழுதி விடுத்த பதில் திருமுகம் அன்றே அடியேன் பார்க்க

சேர்ந்தது. உடனே அதற்கு ஒரு பிரதி எடுத்துக்கொண்டேன். அதை மூன்றாற முன்னம் வாசித்துவிட்டால் அனைவர்க்கும் விஷயவுண்மை செவ்வனே தெரியுமென்றுதோன்றவே முன்னம் அதனையிங்கு வெளியிடுகின்றேன்.

ஷை ஐயங்காரவர்கள் தாமெழுதிய விமர்சன மென்கிறவொரு வியாஸத்தை சென்ற ஆவணிமாதத்து அம்ருதலஹரியில் வெளியிடுவித்துள்ளார். அதில் மிகவும் ஸாஹஸமான வொருவார்த்தை யெழுதியுள்ளார். "ஆழ்வார்கள் திருவாக்குக்களில் தமிழ் வளமில்லையென்றும் இலக்கணப் பிழைகள் காட்டியும் இழித்துக் கூறிவரும் புறச்சமயிகள் பலருளர்" என்றெழுதி, ஆகவே ஆசாரியர்களின் வியாக்கியானங்களை யொதுக்கித் தாம் காட்டும் திருத்தங்கள் மிகவும் அவசியமானவையென்று முடித்துள்ளார். இதனால் தேறினது என்ன? தமிழறியாத பூருவாசாரியர்கள் தவறான பாடங்களைப் புகுத்தி வியாக்கியானம் செய்ததினாலேயே ஆழ்வார்களின் திருவாக்குக்களில் தமிழ்வளமில்லையாகி இலக்கணப்பிழைகளும் ஏற்பட்டு விட்டனவென்றும், அக்குறைகளைத் தமது திருத்தங்களே தீர்ப்பவையென்றும் ஸபஷ்டமாகக் கூறினமையன்றோ தேறிற்று. இங்ஙனம் வரம்புகடந்து வரைகின்ற ஐயங்காருடைய ஞானப்பெருமையை இப்புத்தகத்தினால் உலகமறிக.

இங்கு ஒருவார்த்தை முக்கியமாக விஜ்ஞாபிக்கின்றேன்.

ராகவையங்கார் கைபோனபடியெல்லாமெழுதிச் செந்தமிழில் வெளியிடுவித்துவரும் கட்டுரைகளை ஆழ்ந்து நோக்கவல்ல தமிழ் வித்வான்கள் உலகில் இல்லையா? மதுரையில் இல்லையா? நேற்று ஆவணிமாதத்தில் வெளிவந்த பகுதியில் காணும் விபரீதங்களை மாத்திரம் வித்வான்களுக்கு ஈண்டெடுத்துக்காட்டுகிறேன்.

நான்முகன் திருவந்தாதி 26-ஆம் பாசுரத்தில் 'கண்டுகொள்கிற்குமாறு' என்ற ஈற்றடியிலும், சிறிய திருமடலில் 'பேராயிர முடையானென்றாள்பேர்த்தேயும்' என்ற அடியிலும் தளைசிதைவதாகவும், இதை அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அறியாததனால் திருத்தம் குறிப்பிடவில்லையென்றும் எழுதித் தாம் திருத்திவிட்டார். அந்தோ! இப்படியும் ஒருமருளுண்டோ? மேற்குறித்த அடிகளில் தளைச்சிதைவு எது? என்று கேட்கவல்ல வித்வான்கள் இல்லையா? (கண்டுகொள்—கிற்குமா-று) (பேரா - யிரமுடை-யானென்றாள் - பேர்த்தேயும்) என்று சீர்பிரிக்கும் வகையை மாணாக்கர்களுமறியக்கூடுமே. மணவாளமாமுனிகளின் திருவாய்மொழி நூற்றந்தாதியிலுள்ள (பாசுரம் 85-ல்) * உன்னுமவர்க்குள்ள முருகும் * என்ற ஈற்றடியும் * கண்டுகொள்கிற்குமாறு * என்ற இவ்வடியும் ஒக்குமன்றோ.

மூன்றாந்திருவந்தாதி 67-ஆம் பாசுரத்தில் * ஓங்குகமலத்தி னொண் போது - ஆங்கை * என்றவிடத்திலும் தளைச்சிதைவுகாட்டி, ஆங்கையைத் தாங்கையாகத் திருத்தியுள்ளார். தமிழ்ப்பண்டிதரான சே. கிருஷ்ணமாசாரியார் மூலப்பதிப்பில் இவ்விடத்தில் 'வெண்டளை சிதையுமென்று குறிப்பெழுதி 'கமலத்தினொண்போது' என்பதை 'கமலத்தினதொண்போது' என்று திருத்தியுள்ளார். இவர் ஒருவிதமாகத் திருத்துகிறார்; இன்னொருவர் இன்னொருவிதமாகத் திருத்துவர். குரங்கின் கையிலகப்பட்ட பூமாலையின் கதியா தமிழ்வேதத்திற்கு.

இன்னுமொரு ஆச்சரியம் காண்மின்: ஸ்ரீ ஸ்வாமி இராமானுச நூற்றந்தாதி திவ்யார்த்த தீபிகையில் (பக்கம் 12-ல், தனியன் உரையில்) கலித்துறையந்தாதி யென்றவிடத்து கட்டளைக்கலித்துறையின் இலக்கணத்தைப் பூர்த்தியாக எழுதியுள்ளார். ஐயங்கார் அதைப்பாராதவரல்லர்! பார்த்திருந்தே செந்தமிழில் (பக்கம் 317-ல்) இவ்விலக்கணத்தை அண்ணங்கராசாரியர் தெரிந்து கொள்ளவேண்டு மென்றெழுதியுள்ளார். ஷை நூற்றந்தாதியில் 48-ஆம் பாசுரத்தில் * நிகரின்றி நின்றவென்னீசதைக்கு; உன்னருளின் கணன்றி * என்றிருந்த பாடத்தை அண்ணங்கராசாரியர் 'நின்னருளின் கணன்றி' என்று திருத்திப் பாடங்கொண்டுள்ளார்; ஆகவே அவர் இவ்விலக்கண மறியாரென்று தெரிகின்றது - என்கிறார். உன் என்றிருந்த பாடத்தை நின் என்று ஸ்ரீ ஸ்வாமி திருத்தி விட்டாரென்பது மாச்சரியப்பேச்சு. பிராமாணிகரான சே. கிருஷ்ணமாசாரியர் பதிப்பில் இங்கு நின் என்றே மூலம் பதிப்பித்துவிட்டு, கீழே [உன் என்றபாடம் கட்டளைக்கலித்துறையிலக்கணத்துக்குச்சேரும்] என்று குறிப்புரை கொடுத்திருப்பது ப்ரஸித்தம். ஆகவே, ஸ்வாமி முன்னிருந்த பாடத்தைப் பதிப்பித்துள்ளாரேயன்றித் த"மாகத்திருத்தம் செய்திலரென்பது தெளிவாகும் இங்குத் திருத்த வேண்டிய அவசியமில்லையா? என்பரேல், அது வேறுவார்த்தை. ஐயங்கார் அஸம்பத்தமாக எழுதுகிறாரென்பது இவற்றால் மூதலிக்கப்பட்டது. "நான்முகன் திருவந்தாதி எழுபதாம் பாசுரவுரையிலும் திவ்யார்த்த தீபிகையில் இத்திருத்தப்பாடத்தை மேற்கோள்காட்டியிருப்பது காணலாம்" என்றெழுதியுள்ளார். இதுவும் ஒரு ப்ராந்தி. எழுபதாம் பாசுரவுரைத் தீபிகையை எடுத்துப் பார்க்கலாமே. இனி அடுத்த செந்தமிழில் பிழைதிருத்தம் வந்து தோன்றும். இவ்வளவு அஸங்கதமாகவும் மருள்மிகுந்தும் எழுதுகின்றவர் நமது ராகவையங்கார் என்பது தமிழுலகுக்குத் தெரிந்திருக்கவேணும்.

மதராஸ்
20-10-43

இங்ஙனம்:

பண்டித. ஏ. கிருஷ்ணஸ்வாமி.

ஸ்ரீ:

ஸ்ரீ ராகவையங்காரவர்கள் 14—10—43உ ஸ்ரீ அண்ணங்கராசாரியர் ஸ்வாமிக்கு எழுதியனுப்பிய கார்ட்டுக்கு ஸ்ரீஸ்வாமி அருளிய பதில் கடிதம்.

மூன்று நாளாக அடியேன் சென்னைக்குப் போயிருந்து இன்று மீண்டு வந்து தேவரீருடைய கார்ட்டு திருமுகத்தைக்கண்டேன். புக்போஸ்ட் ஒன்றும் வந்திருந்தது. அதை இனிப்பார்ப்பதில்லையென்று லஹரியிலேயே தெரிவித் திருக்கிறேனே. எதற்காக அதை அனுப்பியது? "வம்பார்வினைச் சொல்லவோ எம்மைவைத்ததிவ்வான் புனத்தே." இனியனுப்பவேண்டா வென்று வணங்கி வேண்டிக்கொள்ளுகிறேன். இப்போது வந்திருப்பதை அடியேன் பார்க்கவில்லை. அடியேன் உலகுக்குச் செய்யவேண்டிய காரியங்கள் பலபலவுள்ளன இதுகாறுஞ்செய்தது சிறுபான்மை, இனி ஆகவேண்டியதே பெரும்பான்மை. பூருவாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளை அலக்ஷியஞ் செய்து— லாகவப்படுத்தி— தேவரீர் எழுதிவரும் கட்டுரைகட்கு மறுப்பு எழுதுவதும் உலகுக்குச் செய்யு முதவிகளிலொன்று — முக்கியமானது — என்றுகொண்டே இதில் கைவைத்தேன். இதுவரையில் செய்த வெளியீட்டிலுள்ள உதவியே போதுமானதென்றும், வேறுவகையான நல்லுதவிகளை யினிச் செய்யவேணுமென்றும் மதுரை முதலான விடங்களிலிருந்து பல ஆப்தர்கள் தெரிவித்ததனால் இதினின்று அடியேன் விலகியாயிற்று.

இன்று கண்ட தேவரீரது கார்ட்டில் "என்விஷயத்தில் தேவரீர் பிரவேசிக்கத் தொடங்கியது முதல் தேவரீரது அபத்தங்களைத் தொடர்ந்து காட்டுவதே பணியாக மேற்கொண்டுளேன்" என்றெழுதியுள்ளது. தேவரீர் விஷயத்தில் அடியேன் பிரவேசிக்கத்தொடங்கியது இன்று நேற்றல்ல; பதினைந்து ஆண்டுகட்கு முன்னமே யென்பதை உலகமறியும். * தரித்திருந்தேனாகவே * என்ற திருமழிசைப்பிரான் பாசுரவுரையில் (தீபிகையில்) முன்னமே கண்ட தில்லையாதேவரீர். "வைகாசிமாதத்து லஹரியில் எடுத்துக்காட்டின பின்னரே அஃதறியலானேன்" என்று ஸாதித்தாலும் ஸந்தோஷமே. அப்போதாவது கண்டதுண்டே. கண்டு செய்யவேண்டிய காரியமென்ன? செய்ததென்ன?

"தேவரீருடைய வாதவீழ்ச்சியை" என்றும், "அபஜயப்பட்டீர்" என்றும்இங்ஙனே சிறார்களைப்போன்று கார்ட்டில் எழுதுகின்ற தேவரீர் முந்துற முன்னம் செய்திருக்கவேண்டியதென்ன? "தரித்திருந்தேன் பாசுரத்தில் பெரியவாச்சான்பிள்ளையின் வியாக்கியானம் தவறென்று நான் க்ரஹித்திருந்ததற்கு அநுதபிக்கிறேன்" என்றோ, "பெரியவாச்சான்பிள்ளை

தவருகத் தானெழுதிவிட்டாரென்பதை ஸ்தாபித்தே தீருகின்றேன் காண்மின்" என்று நிரூபித்துக் காட்டியோ வரைந்திருக்கவேணுமே. இரண்டுமில்லையே. இதைப்பற்றிக் கடிதத்திலும் விஜ்ஞாபித்தேன். வசவுதான் பதில் கிடைத்தது. லஹரியில் மீண்டும் நினைப்பூட்டினேன். அதற்கும் வசவுதான் பதில் கிடைத்திருக்கிறது.

இது முதன்மையான விஷயமாயிற்றே யென்று தேவரீருக்குத் தோன்றவில்லையா? பிறரை சிக்ஷிக்க வருகிறவர் மூர்த்தற முன்னம் தாம் ஸுசிக்ஷிதராயிருக்கவேண்டுமே. எடுத்த விஷயத்திற்கு பதில் செவ்வனே எழுதுவதில்லையென்று அடியேன்மீது ஆரோபணமான தூஷணையை யெழுதாநின்ற தேவரீர் முதன்மையான இவ்விஷயத்திற்கு இன்னமும் பதிலெழுதாமலும் எழுத முடியாமலு மிருப்பதனால் நிஜபராஜயத்தை முன்னம் இசைந்து தீரவேண்டாவா?

"தரித்திநந்தேனுரையில் அடியேன் நிரூபித்த ஸமாதானங்களைத் தேவரீர் அங்கீகரிக்கவேணுமென்று நான்விரும்பவில்லை. கண்டிக்கவேணுமென்றுதான் விரும்புகிறேன். அந்தக்கண்டனத்தையாவது எழுதிப் பெரியவாச்சான்பிள்ளைக்கு த்ரோஹி நானேயென்று ஸ்தாபித்துக்கொள்வதோ, கண்டன மெழுத முடியவில்லையே யென்று கைகூப்பி நின்று பராஜயத்தை ஒப்புக்கொள்வதோ இரண்டத்தொன்று செய்து முடிக்க வேண்டிய அவசியம் நேர்ந்துள்ளமையை இன்னமு மறிகின்றிலீரோ?

இதற்குத் தேவரீர் தக்கபதில் எழுதியான பின்பு மற்றவிஷயங்களைப் பற்றி யெழுதுகிறேனென்று நான் இவ்வளவோடு நிற்பது யுக்தம். ஆனால், விஷயத்தை விட்டு எதையாவது வம்புதும்புகளை யெழுதுவதே தேவரீருக்குப் பணியாயிருப்பதால், ஷை விஷயத்திற்கு பதில் தேவரீரிடத்தில் சிறிதும் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாதென்று திண்ணமாக வெண்ணி, என் விவக்ஷிதங்களை யெல்லாம் வரைந்தேவிடுகிறேன்.

"என் விஷயத்தில் தேவரீர் ப்ரவேசிக்கத் தொடங்கியது முதல் தேவரீரது அபத்தங்களைத் தொடர்ந்து காட்டுவதே பணியாக மேற்கொண்டுளேன்" என்றது மிகவும் தகுதியற்ற வார்த்தை. இதை நன்கு, மிக நன்கு நிரூபிக்கிறேன்.

தேவரீர் விஷயத்தில் அடியேன் பிரவேசித்தது எதற்காக? என்பதை உலகமறியும்; தேவரீருள்ளமு மறியும். ஆசார்யர்களின் வியாக்கியானங்களுக்கு விருத்தமாகவும் அவர்களுக்கு அஜ்ஞான அந்யதாஜ்ஞானங்களைக் காட்டியும் தேவரீர் எழுதிவருகிறபடியால் இங்ஙனம் எழுதுவது பிசகு என்று நிரூபிக்கின்ற விதுதானே அடியேனது வியாஸத்தின் ஸாராம்சம்.

இதுவன்று என்று தேவரீரால் ஸாதிக்கமுடியாதே. இங்ஙனம் தேவரீர் விஷயத்தில் ப்ரவேசித்த அடியேனைக்குறித்து தேவரீர் ருஜுவாக நடந்து கொள்ளவேண்டிய வழி என்ன? "உன்னைப்போலவே நானும் ஆசார்ய திவ்யஸூக்திகளைச் சேமவைப்பாகக் கொள்ளவே கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஸதாசார்ய பரிசர்யாவிமுகனாய்க் காலங்கழித்து விட்டேனாகையால் வழிபிசகிப்போனேன்; இனிச் செவ்விய வழிக்குவந்திடுகிறேன். என்மேல் அம்புதொடுக்காதே" என்று எழுதியிருக்கவேண்டும். அல்லது "நான்கற்ற கல்வியை ஆசாரியர்கள் கற்றிலராதலால் அவர்களுடைய கல்விக்குறையை நான் உலகுக்குக் காட்டித் தான் நிற்பேன்; ஸ்ரீ வைஷ்ணவர்கள் உகவாவிட்டால் எனக்கென்ன? ✻ உத்பத்ஸ்யதே மம து கோபி ஸமாநதர்மா ✻ என்று பவபூதிகவி சொன்னகணக்கிலே எனக்கேற்றவர்கள் இனியொருகாலத்தில் தோன்றுவார்கள், அவர்கள் உகக்கக்கூடும்; இதில் நீ தலையிடாதே" என்றாவது பதிலெழுதியிருக்கவேண்டும்.

இனி, மூன்றாவது வழியுமொன்றுண்டு; "நான் பூருவாசாரியர்களின் ஸ்ரீ ஸூக்திகளுக்கு மாறாக ஒரு அக்ஷரமும் எழுதிற்றில்லை: அங்ஙனமெழுதியதாகச்சொல்வது தவறு" என்று மெழுதலாம். அந்தோ! உலகம் உறங்கவில்லையே. இந்த இந்திரஜாலம் எங்கு விலைச்செல்லும். 'இப்படி நாமெழுதினால் நமதுப்ரதிஜ்ஞையே பாழாகிவிடுமே.' என்று சிக்கனத் தெரிந்துகொண்டே தேவரீர் இவ்வழியிற்புகவில்லை. ஆனால் விஷயவுண்மையறியாத சிலரிடத்தில் இப்படிப்பட்ட வஞ்சகவார்த்தைகளைச் சொல்லி வருகின்றீர்.

அவ்வளவேயோ? 14-9-43ல் எனக்கெழுதியனுப்பிய பகிரங்கலிகிதத்தில்— "ஆசாரியாபசாரக்குற்றங்களை அடியேன்மேற் சுமத்தி அதனை விளம்பரப்படுத்தும் பெரியகைங்கரியத்தில் தேவரீர் முனைந்து விட்டதால்" என்று கூசாமலெழுதியும் போந்ததே. ஆசாரியாபசாரக்குற்றம் உண்மையில் தேவரீரிடத்து உள்ளதா? அல்லது அடியேன் சுமத்துவதா? என்கிற விதனை நிஷ்கர்ஷிப்பதுதானே இங்கு முக்கியமான விஷயம். ஆசாரியாபசாரக் குற்றமாவது என்ன? என்பதை முன்னம் நிஷ்கர்ஷிக்கவேண்டும். ஆசாரியர்கள் கொண்டபாடங்களையும் பொருள்களையும் இலக்கண விலக்கியங்களுக்குப் பொருந்ாதவையென்று நிரூபிப்பது தானே ஆசாரியாபசாரக் குற்றம். இது ஒருவராலும் மறுக்கமுடியாதவார்த்தை. பலநூற்றாண்டுகட்குமுன்பு திருநாட்டுக்கெழுந்தருளிய பூருவாசாரியர்கள் திறத்தில் இன்றுள்ளவர்கட்கு வேறு எவ்விதமான அபசாரக்குற்றம் நேரக்கூடும்? அவர்களுடைய திருவாக்குக்களைத் திரஸ்காரம் செய்கிற குற்றமொன்றுதான் அபசாரமாக நேரக்கூடும். அது மிகக்கொடிய அபசாரமென்பதை மணவாள மாமுனிகள் உபதேசரத்தினமாலையில் முன்னோர்மொழிந்த வென்னும் பாசுரத்தினால் நன்கு காட்டியுள்ளார்.

இத்தகைய அபசாரக்குற்றம் தேவரீரிடத்திலுள்ளதா இல்லையா என்பது இனி விமர்சிக்கப்படவேண்டியவிஷயம். இதை ச்ரமப்பட்டு விமர்சித்தா நிச்சயிக்கவேண்டும். கையிலங்கு நெல்லிக்கனியாகவன்றோவுள்ளது. இதற்குத்தேவரீர் ஒன்று சொல்லக்கூடும்; "பூருவாசாரியர்களின் திருவாக்குக்களை நான் திரஸ்காரம் செய்யவில்லை. அவற்றை மிகவும் கௌரவிப்பதாகவே என்னெண்ணம். அப்பூருவர்களுக்குத் தெரியவராத பாடங்களையும் பொருள்களையும் நான் தெரிந்து பிரமாணங்களுடனு மெழுதுகின்றேன். இவ்வளவு தானே; இது பூருவர்களை யாவது அவர்களது திருவாக்குக்களையாவது திரஸ்கரித்ததாகுமோ?" என்று

இந்த வார்த்தையினால் சில பாமரர்கள் வஞ்சிக்கப்படலாமேயொழிய விவேகிகள் ஒருநாளும் வஞ்சிக்கப்படார்கள். "நான் காட்டுகிறபாடந்தான் ஆழ்வார்களது திருவாக்கில் வந்தது. நான் கூறுகிற பொருள்தான் ஆழ்வார்கள் திருவுள்ளம்பற்றியது; ஆசாரியர்கள் காட்டியுள்ள பாடமும் பொருளும் அக்காலத்தில் தவறாகப்பிறழ்ந்து வழங்கின பாடங்களில் நம்பிக்கையினால் ஏற்பட்டவை; பாடங்கள் பிறழ்வதற்குக் காரணம் ஏட்டுப்பிரதிகளிலுள்ள சில கோளாறுகளே" என்று விரிவாக நிரூபிக்கின்ற வாக்கியங்களைஎழுதியுள்ள தேவரீர் விவேகிகளை வஞ்சிக்க முடியுமாவென்று பார்க்கவேணும்.

இனி, "ஆசாரியர்கள் கொண்ட பாடமுமிருக்கலாம். நான்காட்டுகிற பாடமு மிருக்கலாமென்று எனக்கு எண்ணமேதவிர ஆசாரியர்கள் வியாக்கியானித்த பாடம் ஸர்வாத்மநா பிசகு என்று என்னபிப்ராயமில்லை" என்று சொல்லிச் சிலரை வஞ்சிக்கப் பார்க்கலாம். இதுவாவது உண்மையாகத் தேறி விட்டால் ஸத்யமாய் தேவரீர் திருவடிகளில் அபசாரக்ஷாமணம் செய்துகொண்டு, 'பராஜயப்பட்டேன், பங்கப்பட்டேன்' என்று பறைசாற்றிக்கொண்டு ஊர்தோறும் வீதியாரவருவேன். 'பூருவர்கள் கொண்ட பாடத்தில் அநுபபத்தியில்லை, உபபத்தியே மலிந்துள்ளது' என்றுஅடியேன் நிரூபித்தெழுதியுங்கூட விஷயமில்லாமலே இன்னமும் அதனை மறுத்து வருகின்ற தேவரீரது எண்ணம் ரஹஸ்யமாக இல்லையே. பெரியதிருமொழியில் (10-2-4) அஞ்சலோதி யென்ற பாடம் தமிழ்வழக்குக்கு ஒவ்வாதது, அஞ்சிலோதியென்றே யிருக்கவேண்டும். என்று தேவரீர் எழுதிற்று. பெரியவாச்சான்பிள்ளை கொண்டபாடம் பிசகென்று காட்டிற்று. இதற்குமேல் அடியேன் எழுதும்போது ஆழ்வார் திருவுள்ளம் பற்றினபாட மேதான் பெரியவாச்சான்பிள்ளை கொண்டதென்று ஸப்ரமாணமாக நிரூபித்தேன். அதற்குமேல் தேவரீர் எழுதியிருப்பதாவது, "அஞ்சிலோதிக்குத்தான் தமிழ்ப்பிரமாண முள்ளது; அஞ்சலோதிக்கு அது இல்லை: தமிழுலகம் நன்கறிந்த தொடர் அஞ்சிலோதியே. இருந்தமிழ் நூற்புலவரான ஆழ்வார் இதனையறியாதவரல்லர்" என்று.

தேவரீர் இப்படி யெழுதியுள்ள விடங்கள் பல பல கிடந்தாலும் ஸ்தாலீபுலாக நியாயமாக இந்த வோரிடத்தை யெடுத்துக்கொண்டு தேவரீரது எண்ணத்தை உலகறியச் செய்து விடலாம். இருந்தமிழ்நூற் புலவரான ஆழ்வார் தமிழுலகம் நன்கறிந்ததான * அஞ்சிலோதியைத்தான் அருளிச்செய்தார். தமிழறியாத பெரியவாச்சான் பிள்ளையே அஞ்சலோதியைக் கொண்டு புகுத்தினார்—என்பது தவிர இங்கு தேவரீருடைய விவக்ஷிதம் வேறென்ன விருக்கிறது.

இனி, பெரிய வாச்சான் பிள்ளையைத் தமிழறியாதவரென்று நான் அணுவளவாகிலும் எழுதியிருப்ப துண்டா? என்மேலப்படி அபாண்டம் ஏற்றலாமா? என்று பேசத் தொடங்குவீர்; அது பாமரர்கள் பக்கலிலும் பயன்பெறாது. ஏனென்றால், கேளீர்.

"இருந்தமிழ் நூற்புலவரான ஆழ்வார் அஞ்சிலோதியை அறியாதவரல்லர்" என்று கல்வெட்டாக எழுதி வைத்திருக்கின்றீர். பெரிய வாச்சான் பிள்ளை அஞ்சிலோதியை அறிந்திலர் என்றும் ஸ்பஷ்டமாகக் காட்டியிருக்கின்றீர். தமிழுலகம் நன்கறிந்த தொடர் அஞ்சிலோதியே என்று மெழுதியிருக்கின்றீர். இவற்றால் தேறினது என்ன? பெரிய வாச்சான்பிள்ளை இருந்தமிழ் நூற்புலவரல்லர், தமிழுலகில் நடையாடினவரல்லர் என்று சொல்லிற்றாகத் தேற வில்லையா? வேறென்ன தேறும்?

"தேறினால் தேறட்டும்: என் கையினால் அப்படி ஸுஸ்பஷ்டமாக எழுதவில்லையே" என்கிற அசட்டு வாதத்தில் கைவைப்பது பயனற்றதாம் அலங்கார சாஸ்த்ரத்தில் * நமஸ் தஸ்மை க்ருதௌ யேந முதா ராஹு வதூ குசௌ * என்றொரு இலக்கியம் காட்டுகிறார்கள். ராஹுவின் மனைவியினுடைய தனங்களைப் பயனற்றவையாகச் செய்த வொருவர்க்கு நமஸ்கார மென்றது இதில், ராஹுவைப் பங்கப் படுத்தினவர்க்கு நமஸ்கார மென்றபடி. இதில் ராஹுவின் மனைவியின் கொங்கைகளைப்பற்றி ஏதோ சொல்லியிருக்கின்றதேயன்றி ராஹுவின் பங்கத்தைப்பற்றின பேச்சே யில்லையே என்பராம் சிலர். அப்படிப்பட்ட மேதாவிகளை தேவரீர் நன்கு வஞ்சிக்கலாம். அவ்வளவு அணிபெற எழுதினீருமல்லீர். இதில் இன்னமும் பன்னியுரைப்பது பயனற்றதே.

ஆக இவ்வளவாலும், ஆசார்யாபசாரக்குற்றத்தை தேவரீர் மநஸ்கரித்துத் தாங்கிக் கொண்டு உவந்திருக்கிறீரென்றும், இது நான் சுமத்தின தன்றென்றும் மூதலிக்கப்பட்டது. இதை இன்னமும் ஒரு மஹாபாரத மாக விரித்து மூதலிக்கப் போதுமான கட்டுரைகள் சுமை சுமையாக தேவரீருடையவை யிருக்கின்றன. விவேகிகட்கு ஈதொன்று காட்டினதே போதுமென்றுநிற்கின்றேன். இத்தகைய தேவரீரது உண்மையை நிரூபிப்பதுதான்

அடியேன் தேவரீர் விஷயத்தில் பிரவேசித்தது. இதற்குப் பிரதியாக தேவரீர் அடியேனது அவத்தங்களைத் தொடர்ந்து காட்டத்துணிந்ததாக எழுதியருளிற்று ஹாஹா! என்ன பொருத்தம்! என்ன பொருத்தம்!! என் அபத்தங்களை வெளியிட்ட தனால் உமது குற்றத்திற்கு என்ன பரிஹாரம் ஆயிற்று? உமது குற்றம் ஊர்ஜிதம் என்றதாயிற்று. "நான் ஆசார்யாபசாரக் குற்றவாளியே" யென்று தேவரீர் தாமே சிலா சாஸன மிட்டுக் கொண்டதாக முடிந்து நின்றதத்தனை.

நான் ஒரு அல்பஜ்ஞன். என் உரைகளில் அளவுகடந்த அவத்தங்கள் இருக்கும். நான் திவ்யார்த்ததீபிகையிலேயே

குற்றங் குறைகண்டு கூறுங் குரவர்கட்கு
எற்றைக்குங் கைம்மாறு மென்தலையே-கற்றூர்கள்
கல்லா வடியேனைக் கண்ணுற் றிகழாரேல்
எல்லா மெளிதா மெனக்கு.

என்று ஒரு வெண்பா இயற்றி வெளியிட்டிருப்பது உமது கண்ணிலும் பட்டிருக்குமே. அங்ஙனம் எனது உரைகளில் குற்றங்குறை கண்டு கூறுங்குரவராக தேவரீர் வாய்த்தால் *தலையல்லாற் கைம்மாறிலேனே* என்று கைகூப்பி வணங்கும் ஸ்வரூபத்தை ஒருகாலும் இழவேன். என்னுரைகளில் தேவரீர் காட்டும் குற்றங்குறைகள் எனது அஜ்ஞாந அந்யதாஜ்ஞானங்களடியாக இருக்குமேயல்லது வேறுவிதமாக இராது. இது ஆசார்யாபசாரக் குற்றமாகாது. ஆகுமானல் அதை நிரூபித்து வெற்றிபெறுவீராக. பெரியவாச்சான்பிள்ளை முதலிய பூருவாசாரியர்களுக்கே அஜ்ஞானமும் அந்யதாஜ்ஞானமும் மலிந்திருந்ததாகக் கல் வெட்டா யெழுதியச்சிட்டிருக்கின்ற தேவரீர் எனக்கு அஜ்ஞாநாதிகளிருப்பதாக எழுதுவதில் என்ன வியப்பு.

தமிழறியாமையையும் வியாக்யானப் பொருளறியாமைகளையும் இப்போதே உலகங்கண்டு சிரிப்பதாகவும், இன்னமும் சிரிக்கச்செய்ய முயல்வதாகவும் காட்டி (கார்ட்டு) எழுதியிருக்கின்றீர். பெரியவாச்சான்பிள்ளையையே இருந்தமிழ் நூற்புலமையற்றவரென்றும் தமிழுலகில் நடையாடாதவரென்றும் உலகங்கொள்ளுமாறு எழுதியுள்ள தேவரீர் என்விஷயத்தில் எது எழுதினல்தான் என்ன? ஆனல் ஒன்று மாத்திரம் நிச்சயமாகச்சொல்லுவேன். ஏற்கனவே என் உரைகளை யெல்லாம் அல்லும் பகலும் அநுபவித்து ஞானம் பெற்றிருக்கின்ற தேவரீர் இப்போது அபத்தங்கள் காட்டுவதற்கென்று அவ்வுரைகளை அதிகமாக ஆராய்ச்சி செய்ய நேர்ந்தால், உண்மையில் இதனல் உமக்கு எவ்வளவோ ஞானவளர்ச்சி விளையும். பக்தியும் ஏற்படும். இப்பேற்றுக்கு உவக்கத்தீதட்டில்லை. இங்ஙனே பேறுபெற்றூர் மற்றும் பலருளர். "லோகோபகாரார்த்தமாக அண்ணங்கராச்சாரியர் ஸ்வாமி அருளியுள்ள தீபிகையுரை" என்று எழுதியுள்ள தேவரீர் இத்தீபிகையுரையினல் அடைந்தவுபகாரம் உமதுள்ள மறிந்ததே. அவ்வுபகாரத்திற்குக் கைம்மாறு ஈதல்லால் வேறுண்டோ?

தேவரீர் பதினைந்து வருஷமாக எனது உரைகளை ஓயாமல் சிந்தனை செய்து வந்து, இத்தகைய வாதவிவாதங்கள் நமக்குள் நேர்வதற்குமுன் (நாலைந்து மாதங்களுக்குமுன்) என்னைப்பற்றிச் செந்தமிழில் உமது கையால் எழுதியிருப்பதை உலகமறியும். அது பேர்க்கவும் பேராது. அதாவது "செந்தமிழும் வடமொழியும் திகழ்ந்த நாவினரான அண்ணங்கராசாரிய ஸ்வாமி" என்று எழுதியுள்ளீர். இவ்விவாதம் நேர்ந்த பிறகு விடையளித்த போழ்தும் அந்தப்ரதிபத்தி குன்றாமலே மனச்சாட்சியை மீறாமல் என்ன 'எழுதியிருக்கின்றீரென்பதை மறந்திருக்கமாட்டீர்.

> " அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருமையாகக்கண்ட பாடாந்தரங்களும் அர்த்தாந்தரங்களும் சிறிதும் விருத்தமானவையல்ல; பாடத்தாலும் பொருளாலும் சீரியவைகளே."

என்று எழுதியிருக்கின்றீரே; இது ஆவணிமாதத்து அம்ருதலஹரியில் வெளிவந்த தேவரீரது வியாஸத்திலுள்ளதன்றோ. ஏற்கனவே இப்படியெல்லாம் எழுதிவெளியிட்ட தேவரீர் இப்போது வாதத்தில் திக்குமுக்கலாடித் தணறி நின்று பட்டபரிபவத்திற்கு ஏதேனுமொருவழியில் போக்குவீடு செய்துகொள்ளவேணுமென்று பார்த்து, முன்னெழுதியவற்றிற்கு முரணாக இனி எது எழுதினாலும் காசுக்குதவுமோ. ஆத்திசூடி கூடவாசியாதவனாக அடியேனைத் தேவரீர் எழுதினாலும் எனக்குச் சீற்றம் விளையாது. எதிரம்புகோக்க வரமாட்டேன். உள்ளதையுணர்ந்து வெளியிட்டீரென்று உவப்பேனத்தனை. உலகமறிய உபகாரஸ்ம்ருதியும் காட்டுவேன். ஸ்ரீவசனபூஷண திவ்யசாஸ்த்ரத்தில்

> ' குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும்
> சிரிப்பும்உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்."

என்றருளிய ஸ்ரீஸூக்தியின்படி யதாசக்தி நடந்து கொள்வேன். அடியேனைப்பற்றி தேவரீரெழுதிய (மேலேயெடுத்துக் காட்டிய) வார்த்தைகளுக்கு நேர்விரோதமாக இனி எங்ஙனமெழுதினாலும் அடியேன் தேவரீரைப்பற்றி யெழுதியுள்ள கௌரவவார்த்தைகளை ஒரு நாளும் மாற்ற நினையேன். தேவரீர்க்கு உள்ள யோக்யதை எதுவோ அதை அன்றுமெழுதினேன். இன்றுமெழுதுகிறேன், என்றுமெழுதுவேன்.

ஆசார்யாபசாரக் குற்றவாளர் தேவரீர் என்பதைப் பதினைந்து ஆண்டுகட்கு முன்னமே நிரூபித்தவனடியேன். அதையே இப்போதும் விளக்கினேன். எப்போதும் விளக்குவேன். ஆகவே என்னிடத்தில் ஸ்வபாவமாறாட்டம் ஒருகாலும் காணநேராது. * அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா * என்று முதலில் மிக அழகாகச் சொன்ன மாரீசன் உடனே அதற்கு முரணாக நடந்து கொள்ளவேண்டிய தலைவிதிக்கு ஆளாகி அப்படி நடந்து கொண்டதனால் பெற்றபேறு ப்ரஸித்தம். அதை மெய்ப்பிக்கவோ நினைப்பூட்டவோ தேவரீர் எவ்வளவு முயன்றாலும் தகும். தாராள

மாக முயல்க. பூருவாசாரியர்களை தூஷிப்பதில் நின்றும்விலகி என்னைதூஷிப்பதில் ஊன்றிநின்றீராகில் ஸத்யமாய் என் உகப்பு அளவுகடந்தே. இன்னமும் அந்த அபசாரந்தன்னிலும் நைவைத்தீராகில் உய்யும் வகையில்லை கிடீர்.

நற்பெரும்புகழாளரான ஸேது ஸம்ஸ்தான வித்வான் உ. வே. ரா. இராகவையங்கார் ஸ்வாமி அடியேனுடைய திவ்யார்த்த தீபிகையைப் பற்றியெழுதிவருகையில்

> "திவ்யப்பிரபந்தப் பேராசிரிய ரென்று சிறப்பித்துக் கூறத்தக்க இந்த அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் செய்துவரும் இவ்வரிய வித்யாதானத்திற்குப் பெருநன்றி பாராட்டுதல் கடப்பாடேயாகவும், அங்ஙன மில்லாது பொறாமையால் ஏலாத குறைகளை ஏற்றி இழிக்கப்புகுவாருளராயின் அச்செயல் அவர்கள் தமது உளக்குறைபாட்டைப் புலப்படுத்துவதன்றி வேறாகாது"

என்று ஆங்கீரஸஸூ கார்த்திகைமீ 6உ எழுதியருளி ஹரிஸமய திவாகரத்தில் வெளியிட்டுள்ளார்; அதற்கு இலக்கு அமையுமாறு, அந்த மஹநீயருடைய ஸமீபத்திலேயே வாழும் தேவரீர், குறைகளை யேற்றி யிழிக்கப் புகவேண்டியது மிக அவசியமேயென்றும் விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறேன்.

அன்றியும் 1914-ஆம் வருஷத்தில் செந்தமிழ்ப் பத்திரிகையில் பத்திராதிபர் உவே. திரு. நாரணையங்கார் ஸ்வாமி

> "ஆழ்வார்களின் அருளிச்செயல்களுக்கு இவ்வண்ணங்கராசாரியர் ஸ்வாமிகளால் எழுதி அச்சிடுவிக்கப்பட்டு வருகின்ற 'திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகை' என்னும் தமிழுரையை நோக்குங்கால் இவர் செந்தமிழ்ச் செல்வர் என்னும் சிறப்புப்பெயர் பெறுதற்குரிய ரென்பது தெற்றெனவிளங்கும்"

என்றெழுதியுள்ளார். அந்தச் செந்தமிழ்ப் பத்திரிகையிலேயே இப்போது தேவரீர் எனது அபத்தங்களை யெல்லாம் வெளியிடுவித்தலும் ஏற்புடைத்து.

14-9-43உ எனக்கு தேவரீர் விரிவாக வரைந்த கடிதத்தின் முடிவில் ஒரு பஹிரங்கலிஹிதம் என்று மூன்றுற எழுதிப் பின்னர் (லிஹிதம் என்றதில்) 'ஹி'யை அடித்து 'கி' எழுதியுள்ளீர். 14-10-43உ எழுதியகார்ட்டிலும் அச்சொல்லை ப்ரயோகிக்கு மிடத்து அப்படியே முதலில் ஹி எழுதிப் பிறகு அடித்து கி ஆக்கியிருக்கின்றீர். லிஹிதமென்று சிலபள்ளர்கள் வழங்குகிற சொல் தேவரீரிடத்தில் எவ்வளவு ஊறிக்கிடக்கின்றதென்பது சொல்ல வேணுமோ? வடமொழி நாற்றமேயறியாதவர் பாவம்! என்ன கின்றீர். உபயபாஷைகளிலும் ஸமமான ஞானம் பெற்று ஸதாசார்யஸேவா நிரதராயு

மிருந்த ஸ்ரீ வை. மு. சடகோப ராமாநுஜாசாரியர் ஸ்வாமியை அடியேன் புகழ்ந்து எழுதியதால் சீற்றம் வளரப்பெற்ற தேவரீர் அதையெல்லாம் வசவு மாலை யாகத் திருவுள்ளம் பற்றுவது ஸஹஜமே. ஸ்ரீபாஷ்யத்திலும் வசவுகளுண்டு; அவை விஷயத்தைப்பொறுத்து நிற்பன. திருவாய்மொழி யில் * தேவனெம் பெருமானுக்கல்லால் பூவும் பூசனையும் தகுமே * என்ற விடத்து நம்பிள்ளை "சிக்குத்தலையனுக்குப் பூத்தகாது; பிச்சையுண்ணிக்குப் பூசனைதகாது" என்றருளிச் செய்துள்ளார். இது வசவல்லாது வாழ்த்து தலா? விஷய அடைவில் சொல்லித் தீரவேண்டியது அவர்ஜநீயமன்றோ.

எனது தீபிகையுரையில் அபத்தங்கள் பல இருப்பது உண்மையே யானாலும் தேவரீ ரெடுத்துக்காட்டக் கூடிய நிலைமையில் ஒரு அபத்தமும் தேறாது. ஏனென்றால், தீபிகையில் பரமபக்தி தலையெடுத்திருந்த தேவரீர் இப்போது காரணார்த்தமாக ஏறிட்டுக்கொண்ட மாச்சரியத்தினால் அபத்தங் காட்டப் புகுந்திருக்கின்றீரென்பது வெளிப்படை. மாச்சரியம் மதியைக் கெடுக்குமாதலால், உண்மையில் உள்ள அபத்தம் தோன்றாது இல்லாத அபத்தம் தோன்றித்தீரும். ஆகவே தேவரீர் காட்டும் அபத்தங்கள் தீபிகை யில் சிறிதும் ஸம்பந்தப்படாதவை யென்பதில் விவேகிகள் ஸந்தேஹப்பட மாட்டார்கள். இது, நேற்று ஆவணிமாதத்துச் செந்தமிழில் வெளிவந்த தேவரீரது கட்டுரையினால் மெய்ப்பிக்கவும் பட்டது. * கண்டுகொள்கிற்கு மாறு * பேராயிரமுடையா னென்றாள் பேர்த்தேயும் * என்ற திவ்ய ஸூக்தி களில் இலக்கணப்படி திருத்தவேண்டிய அவசியம் சிறிது மில்லாமலிருக்க வும், இவற்றிலே திருத்தங்காட்டியும், தீபிகையில் திருத்தாதது குறை யென்று கூறியும் தேவரீர் எழுதியிருப்பது மாச்சரியத்தினாலான மதியிழ வினாலன்றோ. தேவரீர் எழுதுவதெல்லாம் இப்படியே தானிருக்கு மென்ப தில் ஐயமுண்டோ?

முடித்திடுகின்றேன். ஆசார்யாபசாரக் குற்றத்தில் தப்பிப்பிழைக்க நினைவிருந்தால் அதற்குரிய பிராயச்சித்த மொழிகளைப் பிரசுரஞ்செய்வது பாங்கு. மேன்மேலும் வாழ்நாளுள்ளவரையிலும் அந்தப்பாதகத்தையே யீட் டப் பாரித்திருக்கின்ற தேவரீரைப்பற்றி * சீலமில்லாச் சிறியேன் இனி ஒன்றும் பேச இடம் பெறாது உய்வேனாக.

ஓம் சாந்திச் சாந்திச் சாந்தி:.

ஸ்ரீ காஞ்சி. P. B. அண்ணங்கராசாரிய தாஸன்.

18—10—43

ஸ்ரீ ராகவையங்கார் 14—9—43உ ஸ்ரீ ஸ்வாமிஸன்னிதிக்கு அனுப்பிய பஹிரங்கலிகிதத்திற்கு ஸ்ரீ ஸ்வாமி யெழுதிய விடையளிப்பு.

"தேவரீருக்குள்ள ஆசார்யப் பிரதிபத்தியின் பெருமையையும் அதனில் அடியேனுக்குள்ள சிறுமையையும் பற்றிய விசாரத்தில் அடியேன் இறங்கவில்லை; அப்பெருமை முழுதும் தேவரீர்க்கே உரிமையாதுக"

என்கிறார் ஐயங்கார். எது முக்கியமான விஷயமோ அதில் நான் இறங்கவில்லை யென்னலாமோ? ஆசார்யப்பிரதிபத்தியில்லாதவர் திவ்ய ப்ரபந்தத்தினருகு வருவதற்கும் அர்ஹரல்லர் என்பது கல்வெட்டு. ஆசார்ய தூஷகரானவிவர் திவ்யப்ரபந்தங்களில் ஆராய்ச்சி செய்ய அநதிகாரி என்று ஒதுக்கியானபின்பு இவர்செய்ய வேண்டிய காரியமென்ன? நான் ஆசார்ய தூஷகனல்லேன் என்று வரவேண்டும். அப்படி வருவதற்கு ஔசித்ய மில்லாமையாலே, இறந்தகுற்றத்திற்கு அநுதாபமாவது காட்டி அஞ்ஜலி செய்ய வேணும். இரண்டு மின்றிக்கே இங்ஙனம் ஸ்ரீமத் கம்பீரவார்த்தை யெழுதுவது என்னே!. "அத்ரைவர்ணிகனை நீ வேதத்தினருகுவாராதே" யென்று சொல்லி ஒருவனைவிலக்கினால் பின்னை அவன் செய்யவேண்டியதென்ன? நான் த்ரைவர்ணிகனேயென்று மூதலிக்கவாவது வேண்டும்; வேதத்தினருகு வாராமே இதோ அகல்கின்றேனென்று சொல்லி விகைவாவது வேண்டும். இரண்டு மின்றிக்கே 'எனது வருணம் எதுவானாலென்ன?' என்று அவன் வாதித்தானாகில் அதனின் மிக்க அசட்டுத்தன முண்டோ?

"அடியேனது பாடவமைதிகளில் நான்கு பெரிய ஆக்ஷேபணைகளைக் கிளப்பிவிட்ட தேவரீர் அவைபற்றி அடியேனெழுதிய ஸமாதானங்கட்கு நேர்மையான விடைதாராமலே நெகிழ்ந்ததேன்?"

என்கிறார் ஐயங்கார். ஆரியர்காள்! கேண்மின். செத்துப்போன பாம்பின்மேல் எந்த விவேகியாவது மேன்மேலும் தடியெடுத்தடிக்க விரும்புவனோ? * அஞ்சலோதியில் பங்கப்பட்டொழிந்தாரிவரென்பது வெளிப்படை. ஆசார்யாபசாரக் குற்றத்தை அவ்விஷயந்தான் நன்கு ருஜூப்படுத்தியது. பெரியாழ்வார் திருமொழி முதற் பாசுரத்தில் 'பிறந்தினில்' என்று மணவாள மாமுனிகள் ஸ்வயக்கமாகக் காட்டியருளியுள்ள பாடத்தைப் பொருந்தாதென்று தள்ளி ஈனில் என்று ஆபாஸமான பாடத்தைக் கற்பனை செய்து ப்ரஸவக்ருஹமென்று அதற்குப் பொருளுங்காட்டினாரிவர். ப்ரஸவக்ருஹத்தில் பிறந்தானென்று பேசவேண்டிய அவசியமேயில்லை யென்றும் அங்ஙனம் பேசுவது அஸமஞ்ஜஸ மென்றும் பாலர்களுமறிவர் அதுகிடக்க. இதற்குமேல் அடியேன் நன்கு காட்டியுள்ள ஆபத்தியைச் சிறுமாணுக்கனும் எளிதிற்செவ்வனேயறிந்து கொள்வனே. அதை க்ரஹிக்கமாட்டாத விவரா ஸர்வஜ்ஞர்களான ஆசார்யர்களின்மீது அம்புதொடுப்பவர். இச்சிறுவிஷயத்

தில் இப்பெரியார் யருண்டிருப்பதொன்றை மாத்திரமானது செந்தமிழா சிரியர்கள் குறிக்கொள்ளுமாறு கோருகின்றேன். நன்கு விவரிக்கிறேன். 10-9-43ல் வெளிவந்த அம்ருதலஹரியில் இடம்பெற்றுள்ள இவரது விமர்சன வியாஸத்தில் எழுதியுள்ளதைப் பாருங்கள் ;

> "பிறந்தீனில் என்கிற அடியேன் பாடத்தில் இரண்டு எழுவாய்கள் வருவதைக் குறிப்பிட்டார் ஸ்வாமி (அண்ணங்கராசாரியர்); மேற் கூறியபடி பேய்ரேச்சமாகக் கொண்டு ஸ்வாமி யெழுதிய பொருளிலும் அவ்வாறுதானே வருகிறது அங்கே உருபைவிரித்த ஸ்வாமி அடியேன் பாடத்திலும்விரித்துரைக்கத் தடையென்ன?"

என்றெழுதியுள்ளார். அந்தோ! ஈதென்ன மருள்! இரண்டு எழுவாய்கள் வருகின்றன வென்று நான் தூஷணம் காட்டியிருக்கவில்லையே. இல்லாததை ஏன் எழுதுகிறாரிவர். என் வியாஸத்தைக் கண்ணுடையார் காணலாமே :

> "ஈனில் என்பது எழுவாய்ாக இருக்கத்தகுதியற்றதாகையாலே ஏழனுருபு தொக்கதாகக் கொள்ளுகிறேமென்பர்; எண்ணெய்சுண்ண மெதிரெதிர்தூவுவது ப்ரஸவக்ருஹத்தில் அஸம்பாவிதமென்பதை யார்தாம் உணரார்?"

என்று நான் கண்ணாடிபோலெழுதி யிருக்கிறேனே. இவர் சொல்லக் கூடிய ஸமாதானத்தை முன்னமே நானே சொல்லிக்காட்டி அதன் மேலும் தூஷணமுரைத்திருக்கின்றேனே. அதைச்சிறிதும் நோக்காது எழுதுவது என்னே!. உருபைவிரித்துரைக்கத் தடையென்ன? என்கிறாரே; அதற்கு யாதொருதடையும் சொல்லிற்றிலேனே. உருபைவிரிப்பதனால் தேறுமது ஏழாம் வேற்றுமைப்பொருள்; ப்ரஸவக்ருஹத்திலே என்றதாயிற்று. அங்கே என்ன நிகழ்ந்ததாக ஆழ்வாரருளிச் செய்கிறார்? இதை இப்போதாவது சொல்லட்டுமே ஐயங்கார். எண்ணெய்சுண்ண மெதிரெதிர் தூவினதாக் மேலேயுள்ளது அது ப்ரஸவக்ருஹத்திலா நடக்கும்? பேதையரும் பேசாரேயிது "எண்ணெய்சுண்ண மெதிரெதிர் தூவுவது ப்ரஸவக்ருஹத்தில் அஸம்பாவித மென்பதை யார்தாம் உணரார்?" என்று நான் எழுதியிருப்பதன்மேல் இவர் என்ன விஷயமுரைத்தார் ? ஸம்பாவிதமே அது என்கிறாரா? அதையாவது எழுதியிருக்கவேண்டுமே இவர். 'ஈனில் பிறந்து' என்று அந்வயித்துக் கொள்கிறேனென்பதற்கும் இடமில்லாதபடி யெழுதி விட்டாரே. அதாவது, "அடியேன்பாடப்படி, பிறந்த ஈனில்— பிறந்த ஸூதிகாக்ருஹம்என்பது பொருளாம்" என்று இவர் எழுதியாயிற்று.

ஆரியர்காள்! இவ்வளவு அஸம்பத்தமான விஷயத்தில் இன்னமும் அடியேன் எழுதிக்கொண்டே போகவேணுமாம். எழுதாதது பராஜயமாம். ஆசார்ய ஸ்ரீஸூக்திவிருத்த மென்று ஒன்றேதான் அடியேன் உபபாதிக்க வேண்டுவது. அதில் சேஷமில்லை.

'ஈனில் என்கிற பதமும், அதற்கு ப்ரஸவவீடு என்கிற பொருளும் மிகவும் ப்ரஸித்தமென்றெழுதுகிறார் ஐயங்கார். இதன் கருத்து என்ன? "இவ்வளவு ப்ரஸித்தமான விஷயம் பூருவாசாரியர்களுக்குத் தெரியவில்லையே,! அவர்களா வியாக்கியானஞ்செய்வது!" என்று ஏசுவதன்றோ உள்ளுறை. * அஞ்சலோதி விஷயத்திலும் இப்படியே எழுதியுள்ளார். ஆகவே இவரோடு வாதப்போர் நமக்கு மிகவும் ஹேயம் என்பதே முடிவு.

"பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான விருத்தமாகத் தேவரீர் எழுதியுள்ளவற்றை" என்று அடிக்கடி யெழுதுகிறார். இது காப்புவியாஸத்தில் பரிபூர்ணபங்க மடைந்தொழிந்ததே. மீண்டு மீண்டும் அதையெழுதுவது பெரியார்க்குற்ற பணியன்று. ஆசாரியர்கள் கொண்டருளின பாடத்தைச் சிறிதளவும் மாற்றாமல். அவர்களருளிச்செய்த பொருளை முக்கியமாக எழுதி வேறுபொருள்களையும் எழுதுவது ஆசார்யாபசாரக் குற்றத்தின் பாற்படாதென்று பண்டே இதைப் பரக்க நிரூபித்தாயிற்று. ஐயங்காருடைய வஞ்சனையின்படியே நானும் ஆசார்யாபசாரக் குற்றவாளனே யென்று வைத்துக் கொள்வோம். இக்குற்றம் உனக்குத்தகாது என்று என்னையிவர் கண்டித்தால் அது பாங்காகுமேயல்லது உன்னைப் போலே நானும் குற்றவாளனாகிறேன்காண் என்பது விவேகிகளின் வார்த்தையாகாது. பூருவாசார்ய வியாக்கியானவிருத்தமான பாடங்கள் உலகில் நேர்ந்து விட்டன வென்றும், அவற்றை செந்தமிழும் வடகலையுந் திகழ்ந்த நாவினரான அண்ணங்கராசாரியர் ஸ்வாமி தீபிகையுரையில் திருத்தியுள்ளாரென்றும் ஐயங்கார் தமது பாடவமைதியின் தலைப்பிலே யெழுதியுள்ளாரென்பது மறக்கத் தக்கதன்று. அப்போது அங்ஙன மெழுதிய கையைக்கொண்டு இப்போது இங்ஙன மெழுதினால் இதன்போக்கை உலகம் உணர்ந்துகொள்ளாதோ?

"தம் பெரியபோதமுடன்" என்ற உபதேசரத்தின மாலைப் பாசுரத்திற்கு அடியேன் வெளியிட்டுள்ள பொருள் பெரியார்களது பரம்பரையில் எங்கும் ப்ரஸித்தமானது. ஆழ்வார் திருநகரி, வானமாமலை, ஸ்ரீவில்லிபுத்தூர், கோயில் முதலான விடங்களில் ஸத்ஸம்ப்ரதாயமுறையில் காலக்ஷேபம் கேட்ட ஆசிரியர்கள் பலரும் ஆதரித்த பொருள் இதுவே வாதிகேஸரி ஜீயர் ஆசார்யக்ருபாதீனமான போதமுடையவரல்ல ரென்றும், ஸ்வதந்த்ரமான போத முடையவ ரென்றும் காட்டுதற்கே மணவாள மாமுனிகள் அங்ஙன மருளிச்செய்தாரென்பது சீலமில்லாச் சிறியேனான நானொருவன் இன்று சொல்வதன்றுகிடீர்.

திருவிருத்தத்தில் (18) * கடல்கொண்டெழுந்தது வானம் * என்ற பாசுரத்தைக் காலமயக்காக வைத்து நம்பிள்ளையும் பெரியவாச்சான்பிள்ளையும் வியாக்கியானித் தருளியிருப்பது விசதம். வாதிகேஸரி ஜீயர் தம்முடைய ஸ்வாபதேசவுரையிலே "இது ஆற்றுதலுக் குறுப்பான காலமயக்கமன்று" என்று எழுதிப்போந்தார். இது போன்ற பலமறுப்புரைகளைக் கடாக்ஷித்தருளின மணவாளமாமுனிகள் தம்முடைய பரமஸாத்விக ப்ரக்ருதிக்குச்

சேர வெகு அழகாக அங்ஙனமருளிச் செய்தாரென்றால் இதில் ஆக்ஷேபம் ஜீவிக்குமோ ?

"வாதிகேஸரியிடம் மாமுனிகள் மனம் நொந்து எழுதிய இடங்களைக் காட்டப்போவதாக முழங்கிப்புறப்பட்டு, சம்பந்தமற்ற விஷயமொன்றைக் காட்டி முடிவு கட்டியிருக்கிறதே!"

என்கிறார் ஐயங்கார். அஸம்பத்தங்களை யெழுதும் பழக்கம் ஒருநாளும் அடியேனிடம் குடிபுகுந்ததன்று. அடியேன் வாதிகேஸரி ஜீயரைப்பற்றி யெழுதிவந்த விடத்தில் ஆசார்யஹ்ருதய வியாக்கியான ஸ்ரீஸூக்திகளை யெடுத்துக் காட்டியிருப்பது மாமுனிகளின் பொதுவான வொருதிருவுள்ளத்தை விசதீகரிப்பதற்காக. இதை இன்னமும் விவரிப்பது ஊமையரோடு செவிடர் வார்த்தையாம்.

"திருவனந்தபுரஸம்ஸ்தான ஸரஸ்வதீ பண்டாரத்தில் பிராசீன வட்டெழுத்தில் அமைந்த திருவாய்மொழி ஸ்ரீ கோசமொன்று அரும் பொருள்களுள் ஒன்றாகச் சேமிக்கப்பட்டுள்ளதென்று தெரிய வருகிறது. அதனை ஆராய்ந்தால் மிகப்பிராசீனமான பாடங்கள் பல விளங்கவுங்கூடும்" என்றெழுதுகிறார் ஐயங்கார்.

நம்மாழ்வாரோ மதுரகவிகளோ கைப்படவெழுதிய பத்தகமென்று ஒன்றுகிடைத்தாலும் நம்பூருவாசாரியர்கள் கொண்டபாடத்திற்கு மாறாக ஒரு ரேகையிருந்தாலும் கொள்வோமல்லோம்.

"தேவரீர் வியாக்கியானப் பொருத்தமான பாடங்களை நூல்கள் மூலமும் உபந்யாஸங்கள் மூலமும் எத்தனைமுறை விளக்கிக் காட்டினாலும் அவற்றை எற்று ஓதுபவர் அரியர் என்பது திருவுள்ளம் அறிபயே"

என்றும், "தேவரீர் திருத்திக்காட்டியவற்றையெல்லாம் அப்படியே அங்கீகரித்துக் கோயில் கிருஹங்களில் நம்மனோர் ஓதப்போகும் நாள் ஸமீபத்தில் இல்லை" என்றும் எழுதுகின்றார் ஐயங்கார்.

இங்ஙனம் மருளவேண்டா. பூருவர்களின் வியாக்கியானங்களுக்குப் பொருத்தமாகவே அடியேன் பாடத்திருத்தங்கள் செய்து காட்டியிருக்கின்றேனென்பதை ஆராய்ந்தறிந்த [மறதியற்ற] அத்யாபகர்களெல்லாரும் பத்திருபது வருஷகாலமாக அடியேனுடைய தீபிகையின் படியே பாடங்களைத் திருத்திக்கொண்டே ஸேவித்து வருவதும் சந்தைசொல்லி வருவதும் இவர்க்குத் தெரியப்ரஸக்தியேது? தீபிகையின்படி பாடங்களைத் திருத்திக் கொண்டாலும் மறதியினால் பழைய அபத்தபாடங்களே தொடர்ந்து வருகின்றனவேயென்று நிர்வேதங்காட்டுவாருமுளர். அதுவும் ஒரு மஹாகுணமே.

"வியாக்கியானத் தொடர்பற்ற பாடங்களை ஓதிவரும் அத்யாபக ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் தேவரீர் திருவுள்ளப்படி பார்த்தால் ஆசார்யாபசாரத்துக்கு உட்பட்டவர். தேவரீரும் அந்த கோஷ்டியை விட்டு விலகிவிட முடியாது" என்றெழுதுகிறார் ஐயங்கார்.

இது மிகவும் அஸம்பத்தமான வார்த்தை. வியாக்கியானத் தொடர் பற்ற பாடங்களை ஓதிவரும் அத்யாபக ஸ்வாமிகள் பலர் இருக்கலாம் ஆனால் அவர்கள் வியாக்கியான விருத்தமென்று தெரிந்து தப்புப்பாடங்களை ஆதரிப்பவர்களல்லர். (பெருமாள் திருமொழியின் முதற்பாசுரம்) இருளிரிய என்பதை 'இருளொரிய' என்றே பல ஸ்வாமிகள் ஸேவித்து வருவதுண்டு. அவ்வளவு தூரம் போவானேன்; "பெல்லாண்டு பெல்லாண்டு" என்றே பலர் ஓதுகிறார்கள். தெரியாமையினால் வருகின்ற இந்தத் தவறுகள் ஒருகாலும் ஆசார்யாபசாரக் குற்றத்தின் பாற்படா. "வியாக்கியான விருத்தமான பாடம் இது" என்று தெரிவித்தால், அதற்கு "வியாக்கியானத்தைப் பற்றி எனக்கு அவசியமில்லை; அவர்கள் தப்பாக வியாக்கியானஞ் செய்தால் நானும் அந்தத் தப்பையே கொள்ள வேணுமோ?" என்று ஒருவர் வாதஞ் செய்தால் அவரே ஆசார்யாபசாரக் குற்றவாளராவர். அப்படிப்பட்ட அத்யாபக ஸ்வாமி எந்தவூரிலும் ஒருவருமில்லை அப்படிப்பட்டவர்களது கோஷ்டியில் அடியேனுக்கு அந்வயமுமில்லை

ஜ்ஞாதியின் ஜனனமரணங்களினால் நேர்ந்த தீட்டைத் தெரிந்து கொள்ளாத வொருவர் வைதிககாரியங்களில் அந்வயித்தொழுகுகின்றார். அவரை வரம்புகடந்தவரென்று யாரும் சொல்வதில்லை. 'உமக்குத்தீட்டு' என்று தெரிவித்தபின்பும் அவர் கோணலான வாதம் செய்வரேல் உடனே அவர்க்குப் பங்கமேற்படும். இந்த த்ருஷ்டாந்தமே ஐயங்கார் நன்கு குறிக்கொள்ளத்தக்கது.

"ஆயிரமாண்டுகட்கு முந்திய நூல்களன்றோ அடியேனால் ஆளப்பட்டுவருகின்றன" என்றெழுதுகிறார் ஐயங்கார். நாலாயிரமாண்டுகட்கு முந்தி அவதரித்த அருளிச்செயல்களுக்கு ஆயிரமாண்டுகட்கு முந்திய நூல்களினின்று தமிழ்ச்சொற்பொருள் வழக்குகளை விளக்குவதனால் என்ன பயனாகும் என்பதையறிந்திலரே இவர். இவர் கையாளும் நூல்களுக்கு எவ்வளவோ முற்பட்டவை அருளிச்செயல்கள்; "படைத்தான் கவியென்றபோதே இதுவும் யதாபூர்வகல்பனமாமே" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸூக்தியின் வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் அருளியுள்ள திருவாக்குக்காணீர்;—

> "ஸ்ருஷ்டிதோறும் சந்த்ரஸூர்யாதி ஸகலபதார்த்தங்களும் யதாபூர்வ கல்பனமாய் வருமாபோலே த்ராவிடவேதமான இப் ப்ரபந்தமும் ஸ்ருஷ்டிதோறும் யதாபூர்வகல்பனமாய் வரும்" என்பதாம்.

திருவாய்மொழியில் (6-8-11) * தோற்றங்களாயிரம் * என்றவிடத்து (ஐயங்காருகந்த) வாதி கேஸரி ஜீயர்

"பகவத்தாவிர்ப்பாவம்போலே வேதாவிர்ப்பாவரூபமான திருவாய்மொழி"

என்று உரையிட்டுள்ளார். ஆகவிப்படி சந்த்ரஸூர்ய நிர்விசேஷமாக எந்த யுகத்திலும் எக்காலத்திலு முள்ளதான நம் தமிழ் வேதத்திற்கு ஆயிரமாண்டுகட்கு முற்பட்ட வழிப்போக்கர்களின் தமிழ்நூல்மேற்கோள்களைக்

கொண்டு திருத்தஞ்செய்வதும் இன்று நேற்று உதித்த தமிழ்நூல்களின் மேற்கோள்களைக் கொண்டு திருத்தஞ்செய்வதும் நூல்யமே. இதைப்பற்றி விரிவான நூல் வேறொன்று வெளிவரும். ஆகவே இங்கு ஸம்க்ஷேபித்துக் கொண்டபடி.

'வழிப்போக்கன் தமிழ். பள்ளர் தமிழ் என்றதொடர்கள் அடிக்கடி தேவரீரால் உபயோகப்படுத்தப் படுகிறதே......இங்குத் திருவுள்ளமான பொருள் தெரிந்திலேன், தெரிவித்தருளவேணும்''

என்றெழுதுகிறார் ஐயங்கார். தெளிவிக்கின்றேனிங்கு. "ஆகஸ்த்ய மமநாதி'' என்று ஆசார்ய ஹ்ருதயத்திற் போற்றப்பட்டதும், *அந்தமிழின் பப் பாவினை *செந்திறத்த தமிழோசை* என்றிங்ஙனே பல பாசுரங்களினால் ஆழ்வார்களாலும் பெருமைப் படுத்தப்பட்டதுமான தமிழ் மொழிக்கு ஒரு குறைகூறப்பேதையனும் நினையான். ஐயங்கார் எந்தத்தமிழ்நூல்களை ஆதாரமாகக்கொண்டு அருளிச்செயற் பாடங்களைத் திருத்துகின்றாரோ அந்தத் தமிழ்நூல்கள் யாவும் வழிப்போக்கருடையவை, பள்ளருடையவை என்பதில் யார்க்கும் ஐயமிராது. பகவத்விஷயத்தினருகும் வாராமல் சில ஸ்த்ரீகளின் கதைகளையே யெழுதிக் காலங்கழித்த தமிழர்களின் வாக்குக்களே ஐயங்கார்க்குத் தஞ்சமாயிருப்பதால் அத்தகைய நூல்கள் யாவும் உண்மையில் வழிப்போக்கர்களுடையவும் பள்ளர்களுடையவுமேயாதலால் யாமெழுதியது சாலப் பொருந்தும்.

ஆழ்வார்கள் 'இருந்தமிழ்நூற்புலவன்' என்றும் 'பெருந்தமிழன்' என்றும் தங்களைத் தமிழால் பெருமைப்படப்பேசி மகிழ்ந்தார்களென்பதில் யார்க்கு என்ன விவாதம். அநாதியான தமிழ்மொழியின் கௌரவத்திற்கு என்ன குறைகூறினோம். இத்தமிழேயன்றோ நமக்கு நவநிதியாகவுள்ளது. தமிழில்லையென்றால் தெய்வமேயில்லை, உலகமேயில்லை என்றன்றோ எமது ஸித்தாந்தம். ஆகவே, நாம் தமிழ்ப்பாஷைக்கே ஏதோ குறைகூறுகிறோமாக ஐயங்கார் பிரசாரஞ்செய்வது பொய்ம்மை அவ்யபதேச்யர், வழிப்போக்கர், பள்ளர் என்னுஞ் சொற்களால் நாம் விவக்ஷித்தவர்கள் ஹேய காம நூல்களையேயெழுதி அதனால் தமிழர்களென்று ப்ரஸித்தி பெற்றவர்களே யாவர்.

திருவாய்மொழியில் (10-10-11) * அவாவிலந்தாதிகளால் என்றவிடத்திற்கு வியாக்கியானமருளாநின்ற நம்பிள்ளை,

'ஆழ்வார்க்குப் பின்பு நூறாயிரம் கவிகள் போருமுண்டாய்த்து; அவர்கள் கவிகளோடு கடலோசை யோடு வாசியற்று அவற்றைவிட்டு......''

என்றருளிச் செய்திருப்பது ப்ரஸித்தம். அந்த ஸ்ரீஸூக்தி யடியாகவே அடியேனெழுதியது. நம்பிள்ளை கடலோசையென்று கழித்த கவிதைகளே ஐயங்கார்க்கு வேதமாகவிளங்குகின்றன. இல்லையேல், எவனோவொருபள்ளன் அஞ்சிலோதியென்று சொல்லி வைத்ததைக் கொண்டு அருளிச் செயலைத் திருத்தத் துணிவரோ? * வம்பார்வினைச் சொன்னது இம்மட்டோடு போதுமென்று நிறுத்திக்கொள்ளுகிறேன். ப்ர. அண்ணங்கராசாரியர்.

ஸ்ரீ

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நம்பிள்ளை பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

செந்தமிழாராய்ச்சி.

(ஸ்ரீகாஞ்சி. அண்ணங்கராசாரியர் எழுதியது.)

இராமநாதபுரத்தில் வாழும் புகழாளரான தமிழ் வித்வான் (ராவ்ஸாஹிப்) மு. இராகவையங்கார் அவர்கள் "அருளிச்செயற் பாடவமைதி" என மகுடமிட்டு மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையில் சில மாதங்களாக எழுதிவருகின்ற வியாஸங்களைக் காணப் பெற்றோம். அந்த வியாஸத்தின் முன்னுரை இங்ஙனேயுள்ளது;—

"மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் அருளிய திவ்யப் பிரபந்தங்களுக்குப் பூர்வாசாரியர்கள் எழுதியுள்ள வியாக்கியானங்கள் அருமை பெருமை வாய்ந்தவை. அப்பேருரைகள் இல்லையேல் அருளிச் செயல்களின் உண்மைப் பொருள்களை நம்மனோர் உணர்ந்துகொள்ள இடமே இல்லை. அவற்றை நன்கறிந்து போற்றுவதால் திவ்ய ப்ரபந்தங்களை யாவரும் சுத்தமாகவே ஓதி உய்யலாகும். அவ்வாறு அறிந்தோதாக் குறையால், பிறழ்ந்த பாடங்கள் பலவிடங்களில் அமைய நேர்ந்தன. இவற்றையெல்லாம் *செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவினரான ஸ்ரீ. உப. வே. அண்ணங்கராசாரிய ஸ்வாமியும் பிறரும் உரைநூல்களிலும் பத்திரிகைகளிலும் விளக்கி வருகிறார்கள். பழமையான நூல்களிலே பாடாந்தரங்கள் அமைதல் எம்மொழியிலுமுண்டு. பின் வந்த உரையாசிரியர்கள் அவற்றுள் ஏற்புடையவற்றைக் கொண்டு ஏலாதவற்றை விலக்கியுள்ளதை அறிஞர்கள் நன்கறிவர். அம்முறையில் அருளிச்செயல் வ்யாக்யாதாக்கள் காலத்திலும் பாடாந்தரங்களாக வழங்கியவை பலவுள. ... ... அத்யாபகர்களின் பாடபேதங்கள், வியாக்யான பாடங்கள், அவ்வியாக்யானங்களிற்

கண்ட பக்ஷாந்தர பாடங்கள் என முக்கியமாக மூன்றுவகைப் பாடங்கள் இப்போது அறியப்படுகின்றன. வேறுவகையும் இருக்கலாம். இவற்றுள் எதனையும் பற்றி எழுத யான் முன்வரவில்லை. இவற்றின் வேறான நான்காம் வகை ஒன்றையே இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன்." இத்யாதி.

அருளிச் செயல்களுக்கு வியாக்கியானம் செய்தருளிய பூருவாசாரியர்கள் கொள்ளாது கைவிட்ட பாடங்களைத் தாம் ஆராய்ந்து எடுத்துரைப்பதாக அவதாரிகை கூறி அங்ஙனமே சில பாடங்களை [பாடப்பிறழ்வுகளை] நிரூபித்து வருகின்றார் இவ்வாசிரியர். சில தமிழ்நூல்மேற்கோள்களை ஆங்காங்கு எடுத்துக் காட்டி திவ்வியப்பிரபந்த பாடங்களில் திருத்தம் இன்றியமையாததென்று உபபாதனம் செய்து வருகின்றார்.

இவ்வாசிரியர் தமிழறிஞர் என்பதும், ஆராய்ச்சியில் ஊற்றமுடையவர் என்பதும் ப்ரஸித்தமான விஷயம். சிலர் நன்கு ஆராய்ந்து பாடத்திருத்தங்களைத் தெரிவித்தால் உவந்து இசையாது மனச்சாட்சியை மீறி வாத விவாதங்களையே மிக மிக வளர்ப்போர் பலருளர். அன்னாரது வகுப்பில் அடியேன் ஒருபோதும் சேர்ந்தவனல்லேன். பிராமாணிகர்களான ஆராய்ச்சியாளர்கள் சிரமப்பட்டுக் கண்டறிந்து எடுத்துக்காட்டும் திருத்தங்கள் யுக்தமாயிருந்தால் இசையத்தக்கவை என்பதே அடியேனுடைய துணிபு.

இம்முறைமையில் இவ்வாசிரியரது திருத்தங்களை உவந்து ஆதரிக்குமாவலுடையவனே யாவேன். இருள் துயக்கு மயக்கு மறப்பென்பவை மானிடர் யாவர்க்கும் பொதுவாதலால் அவற்றால் இவ்வாசிரியர் காட்டும் திருத்தங்கள் மறுக்கத்தக்கனவேயாம். சில திருத்தங்கள் கொள்ளற்பாலனவாம்.

முதலில் ஒரு முக்கியமான விஷயம் விவேகிகள் உய்த்துணர வேண்டுமென விவரித்துக் காட்டுகின்றேன். அருமை பெருமை பொலிய வியாக்கியானஞ் செய்தருளிய மஹர்ஷிப்ராயர்களான பூருவாசாரியர்கள் கொண்ட பாடத்தை மறுத்து வேறு பாடத்தை ஊகித்துத் திருத்தம் காட்டுகின்ற இப்பெரியார்க்கு சில தமிழர்களின் கட்டுரைகள் ஆதாரமாகின்றனவேயன்றி மஹர்ஷிகளின்

திருவாக்காகிய பிரமாணமொன்றும் ஆதாரமாகின்றதில்லை யென்பது திண்ணம். ஆனாலென்ன? என்று கேட்கலாம். கேண்மின். வடமொழி வேதத்தோடொப்ப இத்திவ்வியப் பிரபந்தங்களும் தமிழ் வேதமென்று போற்றப்படுமவை. வடமொழி வேதத்தை இரண்டுபாஷ்யங்களுடன் பூர்த்தியாக அடியேன் பலகால் ஆராய்ச்சி செய்துளேன். இவ்வாசிரியர் தமிழ் வேதத்தில் காட்டும் திருத்தம்போல் வடமொழி மறையிலும் காட்டக்கூடிய திருத்தங்கள் பல கண்டேன். ஆனால் அவற்றை அடியேன் காட்டினேனாயின் வியாகரணம் வல்ல மஹா வித்வான்கள் உகப்பர்களேயல்லது வைதிகர் ஒருவரும் உகவார். அத்தகைய விஷயங்களை நூற்றுக் கணக்காகவே அடியேன் காட்டவல்லேன். ஸம்ஸ்க்ருதபாஷையின் சுவடறியாதார் திரளிலே அவற்றைக்காட்டிப் பயனொன்றும் தேருதாம். ஆயினும் ஸ்தாலீபுலாகந்யாயேந ஒன்றேகாட்டுவேன்;

கிருஷ்ண யஜுர்வேதத்தில் முதல்காண்டத்தில் இரண்டாம் ப்ரச்நத்தில் * க்ருணுஷ்வ பாஜ: * என்னும் முடிவான அநுவாகத்தில் * அஸ்வப்நஜஸ் தரணயஸ் ஸுசேவா அதந்த்ராஸோவ்ருகா அச்ரமிஷ்டா: * என்பதொரு வாக்கியம். இதில், அஸ்வப்நஜ:, தரணய:, ஸுசேவா:, அதந்த்ராஸ:, அவ்ருகா:, அச்ரமிஷ்டா: என்கிற பதங்களெல்லாம் பன்மைப்பொருளன. இவற்றுள் முதற்பதமாகிய [அஸ்வப்நஜ:] என்னுஞ் சொல் ஒருமைச்சொல்போல் தோன்றினும் அது பன்மைச்சொல்லேயாகும்.] [பஹுவசநாந்த பதமேயாகும்]. எங்ஙனேயெனின், [அஸ்வப்நக், அஸ்வப்நஜௌ, அஸ்வப்நஜ:] என்பது ரூபப்ரக்ரியை. (ஸ்வப்நக்) என்பதற்கு— உறங்குமவன் என்று பொருள். அஸ்வப்நக் என்பது உறங்காதவன் என்று பொருள்படும். இச்சொல்லின் மேல் பஹுவசநப்ரத்யயம் ஏறி அஸ்வப்நஜ: என்று கிடக்கிறது. இச்சொல்வடிவம் உலகத்தில் ப்ரஸித்தமன்று. ஆனாலும், பாணிநியின் வியாகரண சாஸ்த்ரத்தில் 3-2-172. * ஸ்வபித்ருஷோர் நஜிங் * என்கிற ஸூத்ரத்தால் இச்சொல் சிறப்புப்பெற்றது. கௌமுதியில் க்ருதந்த ப்ரக்ரியையில் காணலாம். ஸ்வப்நக் என்று ஸ்பஷ்டமாக உதாஹரணம் கொடுக்கப்பட்டுளது. ஆகவே வேதத்திலுள்ள அஸ்வப்நஜ: என்னுஞ் சொல்லுக்கு மேலே காட்டிய பாணிநிஸூத்ரத்தை யடியொற்றிப் பொருள் கூறவேண்டுமேயல்லது வேறுவகைகூறுவது சிறவாது.

வேதபாஷ்யகாரரான வித்யாரண்யர் இங்குச் செய்திருக்கிற பாஷ்யம் வேறு வகைத்து. "ஸ்வப்நஜந்மாநோ மித்த்யாபூதா ந பவந்தீதி அஸ்வப்நஜ:. வ்யத்யயேந ஏகவசநம்" என்பது அவருடைய பாஷ்ய பங்க்தி. ஸ்வப்நாத் ஜாயதே இதி ஸ்வப்நஜ:' ஸ்வப்நஜோ ந பவதீதி அஸ்வப்நஜ: என்றுகொண்டு அர்த்தம் செய்தார். இப்போது இச்சொல் ஏகவசநாந்தமாயிற்றேயல்லது பஹுவசநாந்தமாகவில்லை. மேலோடு சேர பஹுவசநாந்தமாகியேயிருந்து தீரவேண்டும். ஏகவசனம் பொருந்த வழியில்லை. இதை அந்த பாஷ்யகாரரே சங்கித்துக்கொண்டு 'வேதமாகையாலே பஹுவசனப்பொருளில் ஏகவசனம் வந்ததாகக் கொள்க' என்று எழுதிவிட்டார். "வ்யத்யயேந ஏகவசனம்" என்றதின் பொருள் இதுவே.

நிரூபகர்கள் இங்கு ஆராயவேண்டும். முந்துற முன்னம் நாம் விவரித்துக் காட்டியபடி சாஸ்த்ர ஸித்தமாய்ப் பொருட்பொருத்தமுற்றதாய் பஹுவசநாந்த ரூபமாகவே இச்சொல் அமைந்திருக்க எதற்காக இங்ஙனே பாஷ்யம் செய்யவேணும்? பாஷ்யகாரர் செய்த இப்பொருள் மிகவும் மேட்டுமடையாகவன்றோ இருக்கின்றது. 'வியாகரணமறியப் பெறாதவராதலால் இங்ஙன முரைத்திட்டார் போலும்' என்றன்றோ சொல்ல வேண்டியதாகின்றது. சாஸ்த்ரஜ்ஞர் ஒருவராவது இப்பொருளை மெச்ச இடமுண்டோ?.

இங்கு உண்மை யென்னவெனில்; வேதத்திற்குப் பதபாடம் அவதரித்திருக்கின்றது. அது ஒரு வியாக்கியானம் போன்றது. பலவிடங்களில் அந்தப் பதபாடமே வியாக்கியானம் பண்ணித்தருகின்றதென்பதில் ஐயமில்லை. அத்தகைய பதபாடத்தில் ப்ரக்ருதஸ்தலத்தில் (அஸ்வப்நஜ இத்யஸ்வப்ந—ஜ:) என்று வேஷ்டநம் ஓதப்பட்டு வருகின்றது. வியாகரண சாஸ்த்ரரீதியாய் 'அஸ்வப்நக்—அஸ்வப்நஜ:' என்றிருக்குமானால் இதற்கு முற்கூறிய வேஷ்டநம் சிறிதும் பொருந்தாது. இதை நாம் விவரிக்கவேணுமோ? வடமொழிவேதம் நடையாடும் தேசத்திலுள்ளார்க்கு இது தெளிவாம். அஸ்வப்நஜ இதி அஸ்வப்ந—ஜ: என்று வேஷ்டநபாடம் ஏற்பட்டுவிட்டதனால் சாஸ்த்ரவழியை விட்டு விலகியே பாஷ்யம் செய்யவேண்டியது விதியாயிற்று. பட்டபாஸ்கரனென்கிற மற்றொரு பாஷ்யகாரர் இதை நன்கு விளக்கியுமிருக்கிறார்.

இனி அடுத்த விசாரம் என்னவென்றால், பதகாரருக்கு வியாகரணம் தெரியாதா? அவர் ஏன் சாஸ்த்ர விருத்தமாகப் பதபாடம் கற்பித்தார்? என்கிற விசாரமே ப்ராப்தமாகும். உ. வே. மு. இராகவையங்கார் ஸ்வாமியின் ஸ்தானத்தில் அடியேனிருந்தால், ஆமாம், பதகாரர் சாஸ்த்ரமறியாமலோ அதை மறந்தோ பிறழ்வாகப் பதபாடமோதுவித்தார் என்றே சொல்லிவிடுவேன். ஆனால் அடியேன் அங்ஙனம் சொல்லகில்லேன். 'இந்த விசாரத்தில் நமக்கு அதிகாரமில்லை' என்று கைகூப்பி நிற்பதே எம்மனோர்க்குப் பணியாம். இங்ஙனே காட்டக்கூடிய விடங்கள் மற்றும் பல பலவுளவெனினும் ஈண்டு இவ்வொன்றோடு நிற்கின்றேன். மஹர்ஷி ப்ரணீதமான வியாகரண சாஸ்த்ரமே தள்ளுண்டபோது வழிப்போக்கர்களின் தமிழ் வாக்கு எவ்வளவிலே?

பதகாரருடைய ஸ்தானத்தில் பெரியவாச்சான் பிள்ளையைக் கொள்க. வித்யாரண்யாதி பாஷ்யகாரர்களின் ஸ்தானத்தில் இவ்யார்த்ததீபிகை யுரைகாரனை அடியேனைக்கொள்க. பாஷ்யகாரர்கட்கும் மற்றும் வைதிக வுலகுக்கும் பதபாடமே சரணமாகிறாப்போலே அடியேனுக்கும் ஸ்ரீ வைஷ்ணவ வுலகுக்கும் பெரியவாச்சான்பிள்ளை திருவாக்கே சரணமாகும். பதபாடத்தோடு முரண்படுமாறு கூறும் பொருள் [பதபாடத்தை மாறுபடுத்தி உரைக்கும் பொருள்] உண்மையில் சாஸ்த்ரஸம்மதமாக இருந்தாலும் வைதிகர்களால் அவசியம் இகழத்தக்கதேயாவதுபோல, பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானத்திற்கு விருத்தமாகக் காட்டும் பாடங்களோ பொருள்களோ இலக்கண விலக்கியங்களோடு சிறிது பொருந்துவனவாக இருந்தாலும் அவை அவைஷ்ணவத் திரளில் பரிசு பெறுமேயல்லது ஸதாசார்ய பரிசர்யாரஸிகர்களான சுத்த ஸாத்விக ஸ்ரீவைஷ்ணவர்களின் கோஷ்டியில் தலைகாட்டப் பெறுவென்பது திண்ணம்.

கருவிலே திருவிலாத சில பள்ளர்கள் பேசி வைத்தவற்றோடு ஆழ்வாரருளிச்செயல்கள் ஒற்றுமை பெற்றிருத்தல் வேண்டுமென நினைப்பது தானும் இகழ்த்தக்கது.

ஸ்ரீராகவையங்கார் ஸ்வாமிகள் காட்டியுள்ள திருத்தங்கள் ஆசாரியர்களின் திருவுள்ளத்திற்கு இசையாதவை என்பது மாத்

திரமேயல்ல: ஆழ்வார்களின் திருவுள்ளத்திற்கு மிசையாதவை யென்பதைச் சிறிது காட்டுகின்றேன்.

"பெரிய திருமொழியில் 10-2-4. * மாமயிலன்ன அஞ்சலோதியைக் கொண்டு நடமின் * என்ற தொடரில் அஞ்சலோதி என்பது வ்யாக்யான பாடம். அஞ்சு—இருட்சி சுருட்சி நீட்சி குளிர்ச்சி அழகு என அஞ்சுவகைப்பட்டிருக்கை. ஓதி என்று மயிர்முடி. என்பது வியாக்கியானபங்தி. இப்பாடத்தின் பழம் பொருளை நாம் கௌரவிப்போமாக. ஆயினும் 'அஞ்சிலோதி' என்பது பழைய தமிழ் வழக்கான பாடம் என்பதை நாம் மறக்க முடியாது. சங்கச் செய்யுட்களிலும் பின்னூல்களிலும் அழகிய பெண்பாலைக் குறிக்குமிடத்து இத்தகைய தொடரே வழங்குவதாகும்......அம் சில் ஓதி—அழகிய சிலவாகிய கூந்தலையுடைய பெண்......" இத்யாதியை ஸ்ரீராகவய்யங்கார் எழுதியுள்ளார். வழிப்போக்கர்களான சில தமிழர்கள் அஞ்சிலோதி யென்று பிரயோகித்திருந்தாலென்ன? ஆழ்வாரும் அப்படியே பிரயோகித்தாக வேண்டுமென்று யாரிட்ட கட்டளை. இத் திருமங்கையாழ்வார் தாமே இப்பெரிய திருமொழியிலேயே 7—5—3 *கொம்பிலார்ந்த மாதவிமேல் கோதிமேய்ந்த வண்டினங்கள், அம்பராவுங் கண்மடவார் ஐம்பாலணையு மழுந்தூரே* என்றும், திருவெழு கூற்றிருக்கையில் *ஐம்பாலோதியை யாகத்திருத்தினை* என்றும் அருளிச் செய்துள்ளாரென்பது குறிக்கொள்ளத்தக்கது. இருட்சி சுருட்சி முதலிய ஐந்து குணங்களுடைமையைத் திருவுள்ளம்பற்றியே கூந்தலுக்கு ஐம்பால் என்ற விதனைப் பெயராக்கி யருளிச்செய்தும், இதனை ஓதிக்கு (ஓதி—கூந்தல்,) அடைமொழியாக்கி யருளிச்செய்தும் போந்த திருமங்கையாழ்வாரது திருவாக்கில் 'அஞ்சலோதி' என்கிற சொல்வடிவந்தான் அவதரித்ததென்று அறுதியிடுவதில் ஆயாஸமுண்டோ? ஓதிக்கு அஞ்சுடைமையை அடிக்கடி யருளிச் செய்பவர் இவ்வாழ்வார் என்று உணரப்பெற்றார்க்கு அஞ்சிலோதி யென்கிற அபத்தபாடம் ஆதரிக்கத்தகாததே.

பெரிய திருமொழியில் 6—6—6. *மின்னூடு வேலேந்து விளைந்த வேளை* என்ற விடத்தும் ஷை 6—5—4. *வெங்கண் மாகளிறுந்தி விண்ணியேற்ற* என்ற விடத்தும் இப்பெரியார் காட்டியுள்ள திருத்தங்களில் எவர்க்கும் இறையும் விவாதமில்லை.

இத்திருத்தங்கள் தொன்று தொட்டுப் பல பெரியார்களால் போற்றப்படுமவையே. அடியேனும் இவற்றைத் தீபிகையுரையில் காட்டியிருக்கின்றேன். இத்திருத்தங்கள் இந்த ஸ்வாமி தம்மாலேயே கண்டு பிடிக்கப்பட்டவையென்றாலும் எமக்கு அழுக்காறில்லை.

ஷை திருமொழி 7—7—2. *பரனே பஞ்சவன் பௌழியன் சோழன்* என்ற விடத்து பௌழியன் என்று ஓதும்பாடம் பூழியன் என்று திருத்தற்குரியது என்று நிரூபிக்கிறாரிவ்வாசிரியர். இது தன்னிலும் விவாதப்படாமல் இசையலாம்.

ஷை திருமொழி 8—10—2,7.ஆம் பாசுரங்களிலும் 5-2-ம் திருமொழி முழுதினும்—*நமன்றமர் பற்றாது காத்திபோல்* நமன்தமர் கள்ளர்போல்* என வருந் தொடர்களிலே 'போல்' என்பவை 'காத்தி போன்ம்' 'கள்ளர் போன்ம்' என்றே ஓதற்பாலன என்று நிரூபிக்கிறாரிவ்வாசியர். இத்தகைய விடங்களில் பூருவாசார்ய வியாக்கியான விரோதம் காணாமையின் பிராமாணிகர்கள் விவாதப்பட விஷயமில்லை. பெரியவாச்சான்பிள்ளை கொண்டதாக நன்கு தெரியும் பாடங்களை இவர் திருத்துவதொன்றே ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டீ பஹிஷ்டமென்று இகழத்தக்கது.

இப்பெரியார் பதினைந்து வருஷங்கட்கு முன்பு வெளியிட்ட 'ஆழ்வார்கள் காலநிலை' என்னுமோர் புத்தகத்தில் * தரித்திருந்தேனாகவே தாராகணப்போர் விரித்துரைத்த வெந்நாகத்துன்னை* (நான்முகன் திருவந்தாதி-63.) என்கிற திருமழிசைப்பிரான் பாசுரத்தையெடுத்துக்கொண்டு அதில் ஒரு திருத்தம் காட்டியிருந்தார். அது பெரியவாச்சான் பிள்ளைக்கு அங்கதா ஜ்ஞானத்தைக் காட்டுவதில் பர்யவஸித்து நிற்பதாதலால் ஸ்ரீவைஷ்ணவவுலகம் மிகமிக வருந்த நின்றது. அச்சமயம் அடியேன் நான்முகன் திருவந்தாதிக்குத் தீபிகையுரை வரைந்து கொண்டிருந்தேனாதலால் இப்பெரியாருடைய மருளை மாற்ற வேண்டி அப்பாசுரத்தின் உரையில் விரிவாக எழுதியுள்ளவற்றையும் ஈண்டெடுத்துக் காட்டுகின்றேன்.

["தாராகணப்போர் விரித்துரைத்த வெந்நாகத்துன்னை."] இக்காலத்துப் புதிய ஆராய்ச்சிக்காரர் சிலர் வெளியிட்டுள்ள 'ஆழ்வார்கள் காலநிலை' என்னுமோர் புத்தகத்தில் இப்பாசுரத்தை ஆராய்ச்சி செய்யப் புகுந்து,

"இதன் முதலிரண்டடிகட்கு-'நக்ஷத்ர கதியாயிருக்கிற ஜ்யோதிஸ்-சாஸ்திரத்தைச் சொன்ன திருவனந்தாழ்வானுக்கு ஆத்மாவாயிருக்கிற உன்னை' என்பது பூர்வவியாக்கியானம். இதன்படி 'தாராகணப்போர் விரித்துரைத்த' என்ற விசேடணம் ஆதிசேடனுக்கு உரியதாகும். ஆனால் அவனை இவ்வாறு விசேடிப்பதற்குரிய நேரான பொருத்தமொன்றுங் காணப்படவில்லை. ஆதிசேடன் செய்த சோதிடநூல் இன்னதென்பதுந் தெரிந்திலது. அதனால், 'வெந்நாகத்துன்னை' என்றுள்ளபாடம் 'விரித்துரைத்த வென்னாகத்துன்னை' என்றிருந்த பழம் பாடத்தினின்றும் மாறியதோ என்று கருத இடந்தருகின்றது. '(சோதிட நூல்) விரித்துரைத்த (என் × ஆகத்து =) எனது நெஞ்சிடமாகவுள்ள, உன்னை' —என்பது இப்பாடப்படி பொருளாகும்.........இங்ஙனம் 'தாராகணப்போர் விரித்துரைத்த' என்பது ஆழ்வார்க்குரிய விசேடணமாயின், தம்மாற் செய்யப்பெற்ற சோதிடநூலொன்றைப்பற்றி அவர் குறிப்பிட்டனராவர். அத்தகைய நூல் யாது என்பது ஆராய்ந்து அறிதற்குரியது."

என்று எழுதியுள்ளார். இதனாற் சொல்லிற்றாகிறதென்னென்னில், பகவத்கிருபையாலும் ஸதாசார்ய கடாக்ஷத்தாலும் ஆழ்வார்களருளிச்செயல்களின் உண்மைப்பொருள்களை நன்குணர்ந்து அருளிச்செய்தவரும், ஸர்வஜ்ஞராய்ப் புகழ்பெற்று விளங்கினவருமான பெரியவாச்சான்பிள்ளை பிழையான பாடமொன்றைக் கொண்டனரென்றும், அப்பாட்ப்படி உரைக்கும் பொருள் பொருத்தமற்றதென்றும் சொல்லிற்றாகிறது. "வெந்நாகத்து" என்பது பெரியவாச்சான் பிள்ளை உரைசெய்தருளின பாடம். "என் ஆகத்து" என்பது இப்புதிய புலவர் கற்பிக்கும் பாடம். பழையபாடத்திற் பொருத்தமின்மை கூறப் புகுமவர் தாங்கூறும் பாடத்தில் ஒரு பொருத்தம் காட்டித் தீரவேண்டும். ஆதிசேஷன் செய்த சோதிடநூல் இன்னதென்று தெரியவில்லை யென்னுமிவர் திருமழிசைப்பிரான் செய்த சோதிடநூல் இன்னதென்று தெரிந்து கொண்டவராதல்வேண்டும். "பார்க்கவம், பிருகு சூத்திர முதலிய கணித சோதிட கிரந்தங்கள் உள்ளன; இவைபோன்றதொன்றே பிருகு வமிசத்தவரான ஆழ்வார் அருளிச்செய்ததாக வேண்டும்" என்று அநுமானங் கூறுகின்றார். இத்தகைய அநுமானம் ஆதிசேஷன் பக்கல் கூடாமைக்குக் காரணமறிகின்றிலோம். வேதாங்கங்களுள்

ஒன்றான ஜ்யோதிஷத்திற்கு ஆதிசேஷன் ப்ரவர்த்தகன் என்னு மிடத்தை*பபாஸே ஜ்யௌதிஷீ வித்யா யதுபஜ்ஞம் தராதலே, தமநந்த மநந்தஸ்ய தல்ப்ம் ஸங்கல்பயே ஹ்ருதி" இத்யாதிகளான பல பிர மாணங்களினால் நன்கறிந்தே பூருவர்கள் மிகப்பொருத்தமாக வியாக்கியானஞ் செய்தருளினர். இவ்விஷயமாகச் சில ஆண்டுகட்கு முன்னர் நாம் பல விடங்களிலும் பல பெரியோர்களை விசாரித்து வருகையில், மலைநாட்டில் திருவனந்தசயனத்தில் மலையாளிச் சோதிட நிபுணரொருவர் எடுத்துரைத்த ச்லோகம் மேற்குறித்தது. புராதநமான சோதிடநூலொன்றின் வியாக்கியானத்தில் மங்கள ச்லோகமாக அமைந்ததாமிது. இன்னமும் ஊன்றி ஆராயப்புகில் இத்தகைய ஆதாரங்கள் ஆகரத்துடன் பல கிடைக்கக்குறையில்லை. இதுநிற்க. திருமழிசைப்பிரான் பல மதங்களிலும் புகுந்து அந் தந்த மதங்கட்குச் சார்பாகப் பலநூல்களுமியற்றினரென்னும் ப்ர ஸித்தியிருந்தாலும் சோதிடநூல் இயற்றியருளினராக எங்குங் கூறப்படவில்லை. அங்ஙனே ஏதேனுமொருநூல் தாம் செய்தருளி யிருந்தாலும் அதனை இங்கு அநுவதித்தருளிச்செய்தற்கு ப்ரஸக்தி யொன்றுமில்லை. இவ்வண்ண மருளிச்செய்யும் வழக்கம் ஆழ்வார் களின் திவ்யப்ரபந்தங்களி லொன்றிலுமில்லை. ஆகவே 'என் ஆகத்து' என்று பாடத்தை மாறுபடுத்தல் பயனற்றது. ஸர்வஜ்ஞர்களான பூர்வாசார்யர்களின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளில் அல்பஜ்ஞரான நாம் குறைகூறுதற்குச் சிறிதுமதிகாரமுடையோமல்லோம். பூரு வர்கள் ப்ரமித்தார்களெனினும் அந்த ப்ரமமே நமக்கும் தஞ்சமாகத் தக்கது. ஸ்ரீமந்நாதமுனிகள் தொடங்கி நம் மணவாளமாமுனிகள் வரையிலுள்ள ஸதாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் வேதவாக்கினுஞ் சிறந்து பிரமாணமாவன வென்று திண்ணிதாகக் கொள்வாரது திருவடிகளே சரணம். பூருவர்களருளிச்செய்த பொருள்கட்கு முரண்படாமல் விசேஷார்த்தங்களை விவேகித்துக்கூறின் குறை யொன்றுமில்லை. இதுவே கலையறக்கற்ற மாந்தர்பணியாம்."என்று எழுதியுள்ளேன்.

ஆளவந்தார் அருளிச்செய்த ஸ்தோத்ரரத்நத்தில் ஆதிசேஷ னைப்பற்றிக் கூறும் ச்லோகத்தில் .*ப்ரக்ருஷ்ட விஜ்ஞாந பலைக தாமநி * என்றவிடத்து பாஷ்யம் செய்தருளாநின்ற ஸ்ரீமத் வேதாந்ததேசிகர் "பஞ்சவித ஜ்யோதிஸ் ஸித்தாந்த ப்ரவர்த்தகத்வேந

ஜ்ஞாந ப்ரகர்ஷ: அஸ்ய ப்ரஸித்த:" என்று கையிலங்கு நெல்லிக் கனியாக வெழுதியுள்ளார். இத்தகைய பிராமாணிக ஸ்ரீஸூக்தி களை இப்பெரியார் பாராமையினாலன்றோ "ஆதிசேடன் செய்த சோதிடநூல் இன்னதென்பது தெரிந்திலது" என்று ஸஹஸா வரைந்து போந்தார். ஆகவே மஹர்ஷி ப்ராயர்களான பேராசிரியர் களின் வியாக்கியானங்களைப் புறக்கணித்து எழுதுவது பண்டித க்ருத்ய மன்றென்று பதினைந்து வருடங்களுக்கு முன்னமே இப் பெரியார் கொள்ளுமாறு அடியேன் செய்திருந்தும் அந்தோ! பய னில்லையாயிற்று. நிற்க.

ஸர்வஜ்ஞ ஸார்வ பௌமர்களான நம் ஆசாரியர்கள் பக்கலில் விப்ரதிபத்தியும் வழிப்போக்கர்களான சில தமிழர் திறத்தில் ப்ரதிபத்தியும் தோன்றுவது என்னோ.! ஒன்று காண்மின். பொய் கையாழ்வார் பணித்த முதற்றிருவந்தாதியிலுள்ள (51) *எளிதி லிரண்டடியுங் காண்பதற்கு * என்னுஞ் செய்யுள் ஒரு தமிழனு டைய நூலொன்றில் மேற்கோளாகக் கொள்ளப்பட்டுளதென்று இப்பெரியார் எடுத்துக் காட்டியுள்ளார். இவர்தாம் உதாஹரித்துள்ள வகையில் அப்பாசுரமே நூதன ஸ்ருஷ்டியாகக் காணப்படுகின்றது. ஆசாரியர்களால் வியாக்கியானிக்கப்பட்டு வழங்கிவருமதான பாடம் இப்பாட்டிற் பெரும்பாலும் திரிந்திருக்கின்றது. இதில் மூன்று மடியை "பொருந்தாதவனைப் பொரலுற்றரியாய்" என்று ஸ்ரீவைஷ ணவவுலகம் ஓதிவருகின்றது. இவரெடுத்துக் காட்டும் பாடமோ "பொருந்தாரிரணியனைப் பொரலுற்றரியாய்" என்றுள்ளது. மற்ற அடிகளிற்காணும் விபரீதம் ஒரு புறமிருக்க இவ்வடியிற்காணும் விபரீதத்தை விவேகிகள் நன்கு நோக்கவேணும். "இரணியனைப் பொரலுற்று" என்ற விடத்து வெண்டளை பிறழ்ந்திருப்பது எளி தில் தெரியக்கூடியதே. இப்பெரியார்க்கு அக்குற்றம் புலப்பட்டி ராதா? என்ன சுவையுள்ளதென்று அதனை யெடுத்துக் காட் டினரோ! அறியோம். நம் ஆசாரியர்கள் கொண்டதற்கு முரணாகத் தமிழர்கள் கொண்டது எதுவாயிருந்தாலும் எங்ஙனே யிருந்தாலும் பொன்னே போற் போற்றவுரியதென்று திருவுள்ளம் போலும். இப்பாட்டின் ஈற்றடி 'இருந்தான் திருநாமமெண்' என வழங்கிவரு கிறபடியன்றிக்கே எண்ணு என முற்றுகரமாய் முடிந்ததாக இருத்தல் வேண்டுமென்கிற இவ்விஷயமொன்றே ஈண்டு இப்பெரி யார்க்கு விவக்ஷிதமாகில் அதைமாத்திரம் எழுதிப்போகலாம்.

பெரியாழ்வார் திருமொழி முதற்பாசுரத்திலும் மூன்றும் பாசுரத்திலும் 'பிறந்தினில்' என்றிருக்குமிடத்தில் 'பிறந்தீனில்' என்று திருத்த வேண்டுமென்கிறார் இப்பெரியார். "ஈன் இல்-பிரஸவ வீடு" என்று பொருளும் விவரித்துள்ளார். இப்பொருளும் இதற்கேற்ற பாடமும் * வண்ணமாடங்கள் சூழ்* என்ற செய்யுளில் பொருந்தக்கூடியதா வென்பதை அறிஞர்கள் சிறிது ஆராயவேண்டும். இப்பாட்டில் 'கண்ணன் முற்றம்' என்று தனியே எழுவாய் உள்ளது. ஆகவே ஈனில் என்பது எழுவாயாக இருக்கத் தகுதியற்றதாயிற்று. இனி ஏழனுருபு தொக்கதாகக் கொள்ளுகிறோமென்பர். எண்ணெய் சுண்ண மெதிரெதிர் தூவுவது ப்ரஸவக்ருஹத்தில் அஸம்பாவிதமென்பதை யார்தாம் உணரார்? ஆகவே இவரது முதல் திருத்தமே சுவையற்றதென முடிந்து நின்றது. இத்திருமொழியின் ஈற்றுச் செய்யுளில் * செங்நெலார் வயல்சூழ் திருக்கோட்டியூர் மன்னு நாரணன் நம்பி பிறந்தமை * என்றருளிச் செய்திருத்தற்கேற்ப முதலிலும் நம் ஆசிரியர்களின் பக்ஷாந்தர வியாக்கியானத்தின்படி 'பிறந்தினில்' என்றிருப்பதே பெரிதும் தகுதியுடைத்து. [பிறந்தினில்—பிறந்தவளவில்.] ஷை 4-5-3. *சோர்வினாற் பொருள் என்ற பாசுரத்தில் (ஆர் வினவிலும்) என்பது ஓசை குன்றுதலால் (ஆர் வினவிலும்) என்ற பாடமே கொள்ளத்தகுமென்கிறார். அங்ஙனமே கொள்க. விரோதமில்லை, விவாதமில்லை. பூர்வாசார்ய வியாக்கியான விரோதம் காணாத விடங்களில் இசைவோமென்று பண்டே சொன்னோம்.

மூன்றாந்திருவந்தாதியில் 12-ஆம் பாசுரத்தில் * பைங்கோத வண்ணன்படி * என்பது ஈற்றடி. இங்குப் பைங்கோத மென்பதற்கு அடியேன் திவ்யார்த்த தீபிகையில் எழுதியுள்ளவற்றை இப்பெரியார் அப்படியே யெடுத்துக்காட்டி "இச் சொற்புணர்ப்பும் பொருளும் ஏற்கத் தக்கனவாகா" என மறுத்துள்ளார். பைங்கோதம் என்ற இவ்விடத்து ஓதம் என்று பிரிப்பதற்கு ஔசித்யமில்லை யென்றும், பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் ஓதமென்பதற்குரிய பொருள் காணப்படவில்லை யென்றும் எழுதுகின்றார். "ச்ரமஹரமான வடிவை யுடையவன்" என்று பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானித்தருளி யிருப்பதாகத் தாமே எடுத்துக்காட்டியுமுள்ளார். சடல் உண்ணன் என வருமிடங்களிற்

பெரும்பாலும் "ச்ரமஹரமான வடிவையுடையவன்" என்று ஆசாரியர்கள் அருளிச் செய்திருத்தலை அறிஞர் அறியப்பெறுவர். 'பைங்கோலவண்ணன்' என்று இவர் திருத்தும் பாடத்திற்குப் பூருவர்களின் வியாக்கியானம் அமையவில்லை. அதைப்பற்றி எனக்கு விசாரமில்லையென்பர்.

உபாத்யாயர் மாணாக்கனுச்கு ஸந்த்யா வந்தந மந்த்ரம் கற்பிக்கும்போது *'ஹிரண்யயேந' ஸவிதா* என்று கற்பித்தார். மாணாக்கன் வியாகரணம் வாசித்தவனாதலால், 'ஹிரண்யயேந' என்று அபசப்தமாக வோதுவதெங்ஙனே? ஹிரண்மயேந என்ன வேணுமென்று திருத்தினனாம். இத்தகைய பல கதைகள் நினைவுக்கு வருகின்றன.

பாடத்திருத்தப்பணியில் அடியேனும் நெடுநாளாகவே யீடுபட்டவன். ஆனால் இப்பெரியார்க்கும் அடியேற்குமுள்ள வாசியை விவேகிகள் உய்த்துணரவேண்டும். பூருவாசாரியர்களின் வியாக்கியானத்தை நிதியாகக்கொண்டு அவற்றுக்கு விரோத லவலேசமின்றியே 'அவற்றுக்குச் சேர்ந்த பாடங்களைப் பரிஷ்கரித்துக் காட்டுபவன் அடியேன். இதனை இப்பெரியாரு மிசைந்துள்ளார். இவர் காட்டும் திருத்தங்கள் பூர்வாசார்ய அபசார மாகவே முடிந்து நிற்றலால்* ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல்வாழி, தாழ்வாதுமில் குரவர் தாம் வாழி—எழ்பாருமுய்ய அவர்களுரைத்தவைகள் தாம் வாழி" என்று காப்பிடும் பேராசிரியரது பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை உன்னிச் சிரத்தாலே தீண்டி நின்றுய்வார்க்கு விலக்காமத்தனே.

நாலடியார் திருக்கோவையார் கலித்தொகை குறுந்தொகை முதலான நூற்களைப் படித்து ஞானம் பெற்று ஆழ்வார்கள் கவி பாடினர்கள் என்று மிகவும் ஹேயமான கருத்தைக்கொண்டு இக்கருத்தை நிலைநாட்டவும் பாரிக்கின்ற இக்காலத்தவர்களது ஆராய்ச்சியினல் பரம ஸாத்விகர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பயனொன்றுமில்லை யென்பது கல்வெட்டு.

சங்க நூல்களிலும் மற்றும் இலக்கண இலக்கியங்களிலும் தமக்குப் பரிசயமும் பாண்டித்யமுமுண்டென்று காட்ட விருப்ப

முடையார் பூர்வாசார்ய திரஸ்கார ஸரணியில் நெஞ்சு செலுத்தாது வேறுவழிகளில் காட்டிக்கொள்ளுதல் நலமென்று கைகூப்பி விஜ்ஞாபிக்கின்றேன். உபதேசரத்தினமாலையில் "பூருவாசாரியர்கள்" என்ற பாசுரத்தை அநவரதம் அநுஸந்திப்பது நலம்.

ஸ்ரீராகவையங்காரவர்கள் எடுத்துக்காட்டியுள்ள மற்றுஞ்சில திருத்தங்களைப்பற்றி ஈண்டு அடியேன் ஒன்று மெழுதாமையால் அவற்றை ஆமோதித்ததாக அபிப்ராயமோ? வேறோ? என்று சிலர் அறிய விரும்பக்கூடும். கேண்மின்; அந்த ஸ்வாமி ப்ரம ப்ரமாதங்களாலே சில விஷயங்களை யெழுதியுள்ளாரெனினும் சில விஷயங்களைத் தாம் நம்பிய நூல்களுக்கிணங்க எழுதியுள்ளாரென்னத் தட்டில்லை. இந்த வியாஸத்தின் தொடக்கத்தில் அஶ்வப்நஜ:என்கிற வடமொழிவேதபதமொன்றைக் காட்டி அடியேன் விபுலமாக நிரூபித்திருக்குமது பிராமாணிகர்களது நெஞ்சில் மிகமிக உலாவும். அந்த நியாயம் தமிழ் வேதத்திற்கு மொக்கு மாதலால் மஹர்ஷிகளினும் மேம்பட்ட நம் ஆசாரியர்கள் கொண்டருளினபாடமே ஆழ்வார்களது திருவாக்கில் அவதரித்த பாடமென்று குடப்பாம்பில் கையிட்டுரைப்பேன். மீண்டும் அவசியமானபோது இன்னமும் பல விஷயங்களைப் பன்னியுரைப்பேனாக. (10-5-43)

முதல் வியாஸம் முற்றிற்று.

இரண்டாவது வியாஸம்
செந்தமிழாராய்ச்சியின் காப்பு.

முன் செந்தமிழாராய்ச்சி வியாஸத்தில் "மஹர்ஷிகளினும் மேம்பட்ட நம் ஆசாரியர்கள் கொண்டருளின பாடமே ஆழ்வார்களது திருவாக்கில் அவதரித்த பாடமென்று குடப்பாம்பில் கையிட்டுரைப்பேன், மீண்டும் அவசியமானபோது இன்னமும் பலவிஷயங்களைப் பன்னியுரைப்பேனாக" என்றெழுதித் தலைக்கட்டியிருந்தேனாதலால் அங்ஙனமே பலவிஷயங்களைப் பன்னியுரைக்கவேண்டிய ஸந்தர்ப்பம் ஸமீபித்துவிட்டது.

மு. ரா. ஐயங்காரவர்கள் காட்டும் அருளிச்செயற் பாடத்திருத்தங்கள் பூர்வாசார்ய அபசாரமாகவே முடிந்து நிற்குமென்றும்,

"பேராசிரியரது பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை உன்னிச் சிரத்தாலே தீண்டி நின்றுய்வார்க்கு விலக்காமத்தனை" என்றும், "ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டீ பஹிஷ்டமென்று இகழத்தக்கது" என்றும் அடியேன் கூசாது எழுதியிருந்ததனால் ஐயங்கார் ஏதேனுமொரு பதில் எழுதியே தீரவேண்டியதாகுமன்றோ. ஆகவே ஒரு பதில் வியாஸம் எழுதி வெளியிடுவித்தார் ஐயங்கார். [அந்த வியாஸம் (விமர்சனம்) அம்ருதலஹரி தொகுதி 6. பகுதி 3ல் வெளிவந்திருப்பதைக் காணலாம்.] அதற்கு மறுப்பு இது காண்மின்.

"அடியேன் பெரியோர்களை அடியொற்றியே பெரும்பாலும் நடப்பவன்" என்று ஐயங்கார் எழுதியுள்ளார். இஃது உண்மையென்று தேறிவிடுமானால் அடியேனது வியாஸம் அஸங்கதமேயென்று அஞ்ஜலி செய்து நிற்கத் தட்டில்லை. ஐயங்காரின் ப்ரவ்ருத்தி ஸர்வஸ்வமும் நமது பூருவாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளை லாகவப்படுத்துவதற்கே யென்று அடியேனும் மற்றும் ஸத்ஸம்ப்ரதாய ஸித்த ஸ்ரீவைஷ்ணவவுலகமும் கொண்ட கொள்கை. இதுகாறும் ஐயங்கார் எழுதி வெளியிட்டுள்ள வியாஸங்களிலோ நூல்களிலோ நம் பூருவாசாரியர்களின் வியாக்கியான திவ்யஸூக்திகளுக்குக் காப்பாகத் தாம் அமைத்துப்பொறித்துள்ள விஷயம் இன்னதென்று ஒன்றையாயினும் எடுத்துக் காட்ட இயலுமோ? எங்ஙனே யியலும்? எதையெடுத்தாலும், பூருவர்கள் உரையிட்ட பாடம் தவறு; நான் காட்டும் திருத்தமே தமிழர் வழக்குகளுக்கு ஒத்தது என்று நிரூபிப்பதில் பரந்திருக்குமத்தனையல்லது வேறுண்டோ? உண்டாகில் எடுத்துக் காட்டலாமே. அங்ஙனம் ஒன்றிரண்டு காட்டினாலும் போதுமே. அப்போதன்றோ "அடியேன் பெரியோர்களை யடியொற்றியே பெரும்பாலும் நடப்பவன்" என்னத் தகுதியுண்டாம். பெரும்பாலுமென்ற ஐயங்கார் தமது உக்தியினாலேயே சிறுபான்மை பூருவர்களைத் தழுவாது செல்வது முண்டு என்று விளக்கி நிற்கின்றார். பூருவர்களைத் தழுவிச் செல்லுமது ஐயங்கார்பால் சிறு பான்மை காணப்படினும் போதுமே. ஆனால் "பெரியோர்களை யடியொற்றியே நடப்பவன்" என்ற விவாத வாசகத்தில் பெரியோர்களாகக் கருதப்பட்டவர்கள் நமது பூருவாசாரியர்களல்லாமல் வேறு சில தமிழ்மக்களாக இருக்கலாம். அங்ஙனாயின் இவரது கூற்று உண்மையே யெண்ணலாம்.

உண்மையில், பெரியவாச்சான் பிள்ளை போன்ற நம் பேராசிரியர் களைப் பெரியோர்களாகக் கொள்ளும் பாக்கியம் ஐயங்காருக்கு இல்லாமையை ஸ்ரீவைஷ்ணவ வுலகம் அறுதியிட்டிருப்பதால் இவர் எழுதியுள்ளதும் ஒருவாறு உண்மையே யென்னலாம்.

ஐயங்கார் தாமெழுதிய அருளிச்செயற் பாடங்கள் 25-ல் அடி யேனால் அங்கிகரிக்கப்பெற்றவை 4 என்றும், ஆக்ஷேபிக்கப்பட் டவை 4 என்றும், அவ்விரண்டுமில்லாமல் நெகிழவிடப்பட்டவை 17 என்றும் எழுதி விட்டு, "இவ்வாறு ஆக்ஷேபங்கட்கும் நெகிழ் வுக்கும் உள்ளான 21 பாடங்களும் அவற்றிற்கமைந்த பொருள் களும் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான விருத்தங்களென்றும் அவ்வியாக்யான விருத்தமான பாடங்களோ பொருள்களோ பொருத்தமாக இருந்தாலும் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டீ பஹிஷ்டம் என்றும் ஸ்வாமி திருவுள்ளம் பற்றுகிறார்" என்று எழுதியுள்ளார்.

இது வாஸ்தவமே. இதற்கு மேல் ஐயங்கார் செய்யவேண்டிய பணி யாதெனின்; உண்மையில் தாமும் பூருவாசாரியர்களை நெஞ் சாரப் போற்றுமவராயிருந்தால் "பெரியவாச்சான் பிள்ளை வியாக் கியானத்தைத் தழுவியே ஒவ்வொரு விஷயமும் நான் நிரூபித் திருக்கின்றேனேயன்றி அதற்கு முரணாக ஒரு விஷயமும் நிரூ பித்திலேன்" என்று பீடிகையிட்டு அதை உபபாதிக்கப் புகவேண் டும். இதுவன்றோ ப்ராமாணிக க்ருத்யம். இந்த வழியிற் செல்ல ஐயங்கார்க்கு ப்ராப்தியில்லை. ஏனெனில், பூருவாசாரியர்களுக்குத் தெரியாத பாடங்களைத் தாம் தெரிந்து வெளியிடுவதாக முன்னம் ப்ரதிஜ்ஞை செய்து அவ்வழியே யொழுகுகின்றாராதலால், பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியானத்தைத் தழுவியே ஒவ்வொன்றும் நிரூபித்துள்ளேனென்று வாய்திறக்கவும் வழியில்லையன்றோ. வேறு எந்த வழியிற் புகுந்தாரென்னில், "திவ்யப்ரபந்த திவ்யார்த்ததீ பிகை யுரையிட்ட அண்ணங்கராசாரியரும் பூருவ வியாக்கியானங் களில் இல்லாதவற்றையும் எழுதியுள்ளார்" என்றும் "பூருவர்களில் ஒருவரான வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயரும் பெரியவாச் சான் பிள்ளை கொள்ளாத பாடமொன்றைக் கொண்டிருக்கிறார்" என்றும் காட்டும் வழியிற் புகுந்துள்ளார். இவ்விரண்டையும் பற்றி விரிவாகவே யிங்கு விடையிறுக்கின்றேன்.

முன்னம் அவசியமான விஷயமொன்று எழுதவேண்டியுள்ளது. ஐயங்கார் பூருவாசார்ய வியாக்கியானத்தை அலக்ஷியஞ்செய்து ஸ்வதந்திரமாக எழுதியதை முதன் முதலாக அடியேன் கண்டது எவ்விஷயத்திலோ அவ்விஷயத்தை மிகவும் அபத்தமென்று நன்கு நிரூபித்து ஆராய்ச்சியில் காட்டியுள்ளேன். நான்முகன் திருவந்தாதியில் "விரித்துரைத்த வெந்நாகத்துன்னை" என்றவிடத்து விஷயம் அது. இப்போது விமர்சனமருளா நின்ற ஐயங்கார் அதைப்பற்றி ஒன்றும் வாய்திறவாமல் வேறு சில எழுதியுள்ளார். "இருள் துயக்கு மயக்கு மறப்பென்பனவை மானிடர் யாவர்க்கும் பொதுவாதலால் அவற்றால் ஐயங்கார் காட்டும் சில திருத்தங்கள் மறுக்கத் தக்கனவேயாம்" என்று அடியேன் ஆராய்ச்சியில் எழுதியிருந்தது ஊர்ஜிதமாயிற்றென்று உலகம் உணரவேணும். அப்பாசுரத்தில் பெரிவவாச்சான் பிள்ளை கொண்ட பாடமும் கூறிய பொருளும் பொருந்த வழியில்லையென்று தாம் ஒரு அஸங்கதத்தைக் காட்டிக் கிளர்ந்த ஐயங்கார் அடியேனது ஆராய்ச்சியை வாசித்த பின்பு அவ்விஷயத்தில் எவ்வகையான முடிவு கொண்டிருக்கின்றாரென்பதை அடியேனுணர ஆசைப்படாதிருக்க வொண்ணுமோ? நிற்க.

வாதிகேஸரி ஜீயர் பெரியவாச்சான் பிள்ளையின் ஸாக்ஷாத் சிஷ்யராயிருந்தும் தம் ஆசாரியரால் எழுதப்படாத பாடமொன்றைக்காட்டி அதையும் பாடாந்தரமாகக் கொண்டருளினர் (திருவாய்மொழி 1-5-1, 2ல்) என்பதை ஐயங்கார் பன்முறையும் எழுதுகிறார். இதனால் இவர்க்கு லாபமொன்றுமில்லை யென்பதை நன்குணர வேண்டும். வாதிகேஸரி ஜீயர் திறத்தில் நம் மணவாள மாமுனிகளின் திருவுள்ளம் எத்தகைத்தென்பதை ஸம்பிரதாயம் வல்ல பெரியார் நன்கறிந்துள்ளார். உபதேச ரத்தினமாலையில் வாதிகேஸரிஜீயருரையைப்பற்றி யருளிச்செய்த * அன்போடழகிய..........என்னும் பாசுரத்தில் "தம் பெரியபோதமுடன்" என்றருளிச் செய்ததன் ஆழ்பொருளைப் பெரியாருடைய உபதேச பரம்பரையிற் பெறவேணும். அடியேன் வெளியிட்டுள்ள (நித்யாநுஸந்தானவுரையில்) உபதேசரத்தினமாலை வியாக்கியானத்தில் அப்பாட்டின்கண் செவ்வனே காணலாம். அவ்விடத்துள்ள அடியேனது வாக்கியங்கள் இவை காண்மின்;—

"* தம் பெரிய போதமுடனென்ற விடத்து ஆழ்ந்த கருத்து ஒன்றுண்டு; அதாவது—வாதிகேஸரி ஜீயர் நம்பிள்ளையினுடைய சிஷ்ய பரம்பரையிலே படிந்து கேட்டவராயிருந்தும் சில சில விடங்களில் பூர்வாசார்ய வியாக்கியான நெறிக்கு மாறாக எழுதியிருப்பது முண்டு; திருவாய்மொழிக்குப் போலவே திருவிருத்தத்திற்கும் இவர் ஒரு சிறிய வியாக்கியானம் இயற்றியுள்ளார்; இரண்டிலும் இங்ஙனே ஸ்வதந்திரமாகச் சில அர்த்தங்களை இவர் எழுதியிருப்பது கொண்டு 'தம் பெரிய போதமுடன்' என்ன வேண்டியதாயிற்று. ஆசார்யக்ருபாதீனமான போதமன்றிக்கே, தம் போதம்—ஸ்வதந்திரமான ஞானம் என்றபடி. மேலே * முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு * என்கிற பாசுரமருளிச்செய்துள்ள மணவாளமாமுனிகளின் திருவுள்ளம் சிறிது கன்றும்படியாக இவ்வாசிரியர் உரையிட்டிருந்ததனால் இங்ஙனே யருளிச் செய்ய நேர்ந்ததுபோலும். இந்த வாதிகேஸரியும் ஒரு மஹாநுபாவர் என்பது நிச்சயமாதலால் இங்ஙனே யருளிச்செய்கையாலே இவர்க்கு ஒரு குறை கூறினதாகவும் இருக்கவொண்ணாதென்கிற திருவுள்ளமும் மாமுனிகளுக்கு இருந்ததனால் மேலே 'ஏதமில்' என்கிற விசேஷணம் கொடுத்து ஒருவாறு தழுவிக் கொள்ளுகிறாரென்க."

என்று முன்னமே யெழுதி வெளியிட்டிருக்கின்றேன்.

மணவாளமாமுனிகள் இங்ஙனேயான திருவுள்ளத்தோடே யருளிச் செய்திருப்பாரா வென்று சிலர் சங்கிக்கவுங் கூடும். அன்னார்க்குத் தெளிவு பிறக்குமாறு ஒரு சிறு விஷயங்காட்டுகின்றேன்.

ஆசார்யஹ்ருதயம் முதற்பிரகரணத்தில் (50) "பண்ணார் பாடல் பண்புரை யிசைகொள் வேதம்போலே" என்பது மூலம். இதனை மாமுனிகள் வியாக்கியானித்தருளுமிடத்து இங்ஙனே அருளிச் செய்கிறார்;—

"வியாக்கியானங்களில் * பண்புடை வேதம் * என்றொழிய *பண்புரை வேதம்* என்ற பாடமும் * இசை கொள் வேதம் * என்கிறதுக்கு ஸாமவேத பரத்வமும் கண்டதில்லையே யாகிலும் ஆப்ததமரான இவர் இப்பிரபந்தத்திலே இப்படியருளிச்செய்கையாலே இப்படியும் கொள்ளவேணும்" என்று.

இங்கு விஷயமின்னதென்பதை நன்கு விளக்குகின்றேன். திருவாய்மொழியில் (6-6-5) * பண்புடைவேதம் பயந்தபரனுக்கு* என்றே பாடமிருக்க ஆசார்யஹ்ருதயகாரர் 'பண்புரை வேதம்' என்று பாடங்கொண்டு ஸாதித்திருக்கிறார்; தவிரவும் *இசைகொள் வேதநூல்* என்கிற பெரிய திருமொழிப் (5-3-2) பாசுரத்திற்கு ஸாமவேதமென்று பெரியவாச்சான் பிள்ளை அர்த்தமருளிச் செய்யாதிருக்க, இவர் (ஆசார்ய ஹ்ருதயகாரர்) அவ்வர்த்தங்கொண்டு ஸாதித்திருக்கிறார். முன்னோர்களின் வியாக்கியானங்களில் இல்லாத இவ்விரண்டும் எங்ஙனே பொருந்துமென்று சங்கித்துக் கொண்டு மாமுனிகள், இவ்வாசார்யஹ்ருதயகாரரும் நம்பிள்ளை முதலானோரைப் போன்று ஆப்ததமராகையாலே இவர் கொண்ட பாடமும் பொருளும் ஆதரிக்கத் தக்கவையேயென்று நிகமித்தருளினாராயிற்று. இதைக்கொண்டு நாம் தெரிந்து கொள்ளவேண்டியது என்ன என்பதை இன்னமும் நாம் விளக்கவேணுமோ? ஒரு ரேகா மாத்திரமும் மாறுபடுத்த நம்போல்வார்க்கு அதிகார லேசமுமில்லையென்று காட்டுவதே மாமுனிகளுக்கு விவக்ஷிதம். வாதிகேஸரி ஜீயர் மாறுபடுத்தின விடங்களைக்கண்டு மாமுனிகள் திருவுள்ளம் நொந்தவரே யென்பதில் ஐயமில்லை. பூருவர்களின் பாடங்களைப் பேணும் விஷயத்தில் மாமுனிகளுக்குண்டான ஜாகரூகதை அவரது ஸ்ரீஸூக்திகளை அக்ஷரந்தோறு மூன்றி நோக்குவார்க்கு அறியவெளிதாம். நம்பிள்ளையின் கடாக்ஷமே யடியாகத் திருவவதரித்தருளின ஆசார்யஹ்ருதயகாரர்க்கும் வாதிகேஸரி ஜீயர்க்கும் பர்வத பரமாணு வோட்டை வாசி போருமென்றன்றோ மாமுனிகள் அறுதியிட்டிருப்பது. ஆகவே வாதிகேஸரி ஜீயரை ஐயங்கார் உபஜீவிக்கப் பார்ப்பது நிஷ்பலமேயாம்.

மேலும் மஹாஜ்ஞாநாதிகரும் பூருவர்களில் ஒருவருமான வாதிகேஸரி பாடாந்தரமோ அர்த்தாந்தரமோ காட்டினாரென்றால் அது கொண்டு நேற்று இன்று தோன்றும் நம் போல்வாரான அல்பஜ்ஞர்களும் யதேச்சமாகப் பாடங்களையும் பொருள்களையும் மாறுபடுத்த அதிகாரம்பெற்றாராவரோ? கனவிலும் இது அஸம்பாவிதம்.

பெரிய திருமொழியில் (1-4-8) * தவம் புரிந்துயர்ந்த மாமுனி கொணர்ந்த கங்கையின் கரைமேல் * என்றவிடத்து வியாக்கியானத்தில் பெரியவாச்சான்பிள்ளை நெஞ்சையுருக்குவதோர் ஐதிஹ்யம்

அருளிச்செய்துள்ளார், கண்ணுடையீர் காண்மின். நாமும் நமது திவ்யார்த்த தீபிகையில் அதனை யெடுத்துக் காட்டியிருக்கின்றோம்; இங்கும் விளக்குகின்றோம். மாமுனி கொணர்ந்த கங்கை யென்பதற்கு பகிரத முனிவனால் கொண்டுவரப்பட்ட கங்கை யென்று எளிதாகப் பொருள் கூறி விடலாமாலும் * தவம்புரிந்துயர்ந்த மாமுனி* என்றுள்ள அடைமொழியின் அமைதியை நோக்கிப் பூருவர்கள் அருளிச்செய்த பொருளாவது—விச்வாமித்ரன் க்ஷத்ரியனாயிருக்கச் செய்தேயும் தவம்புரிந்து ப்ரஹ்மர்ஷித்வமாகிற உயர்த்தி பெற்றானகையாலே தவம்புரிந்து உயர்ந்த மாமுனி யென்று விச்வாமித்ரனைச் செல்லுகிறது; அவன் கொணர்ந்த கங்கை யென்றது—ஸ்ரீ ராமலக்ஷ்மணர்களைத் தன்னுடைய யஜ்ஞரக்ஷணார்த்தமாக அழைத்துக்கொண்டு போனபோது கங்கையின் வரலாறுகளைச் சொல்லிகொண்டே கங்கைக்கரைமேல் அழைத்துக்கொண்டு போயினனாதலால் தவம்புரிந்துயர்ந்த அந்த மாமுனியினால் (ஸ்ரீ ராமலக்ஷ்மணர்களைத் தன் கரைமீது) கொண்டு செல்லப்பெற்ற கங்கை—என்பதாம். இப்பொருள் கொள்வது அரிய வழி யென்றெண்ணின ஸ்ரீ பராங்குச தாஸரென்பவர் "மாமுனி புகன்ற கங்கையின் கரைமேல்" என்று பாடத்தைத் திருத்திக்கொண்டால் நன்றாகுமே என்றாராம். அதை நம்பிள்ளை கேட்டருளி 'உள்ள பாடத்திற்கு நாம் பொருளுரைக்கக் கடமைப் பட்டிருக்கிறோமே யன்றி இல்லாததொரு பாடத்தைக் கற்பிக்கவல்லோமல்லோம்' என்றருளிச்செய்தாராம். இவ்வைதிஹ்யத்தை யருளிச்செய்கின்ற பெரியவாச்சான் பிள்ளை அங்குச் செய்தருளியிருக்கின்ற ஸ்ரீஸூக்தி விந்யாஸம் அவசியம் காணத்தக்கது. உள்ள பாடத்தைத் திருத்தும்படியான பலம் தமக்கில்லையென்று நம்பிள்ளை யருளிச்செய்ததாக நன்கு வரையப்பட்டுள்ளது. இங்ஙனே நம்பிள்ளை, தமக்கு பலம் போராதென்று கைகூப்பின பாடத் திருத்த விஷயத்தில் நமது ஐயங்கார் பரிபூர்ண பலம் பெற்றாராகத் தம்மை யபிமானிப்பதொன்றே வியப்பு. மிக்கஸாஹஸம்.

திருவாய்மொழியில் (1—5—1) * எந்தாயென்பனிநின்று நைந்தே * என்ற விடத்து வாதிகேஸரிஜீயர் ஐயங்கார்க்கு ஆதாரமாக என்ன எழுதிவிட்டாரென்பதையும் சிறிது விமர்சிப்போம். ஆழ்வார் திருவாக்கில் அவதரித்த வாசகம்*எந்தா யென்பனிநின்று

நைந்தே * என்பதுதான். இதனில் ஒரு ஆசிரியர்க்கும் வைமத்ய மில்லை. இங்கு 'இணைந்து' என்று பதம் பிரித்தாலும் 'நிணைந்து' என்று பதம் பிரித்தாலும் ஸந்தி யொக்கும். 'என்பனிணைந்து' என்ற மூலம் இருவகையான பத விபாகத்திற்கும் பொதுவானது. இந்த மூல ஸந்நிவேசத்தை வாதிகேஸரிஜீயர் அணுவளவும் மாற்ற வில்லை. இணைந்து என்று சிலர் பதம் பிரிப்பதாக ஒரு வரி யெழுதி வைத்திருப்பது உண்மையே. "இணைந்து என்று சொல்லுவாரு முளர்" என்று ஒரு பக்ஷாந்தரத்தை யெழுதிவைத்த வளவால் ஐயங்கார் என்ன பேறு பெற்றாராயினர்.

அர்த்த ஸ்வாரஸ்யத்தில் நோக்கின்றிக்கே வெறும் சப்தத் திலேயே நிற்கும் தமிழர் பூருவாசாரியர்களின் காலத்திலுமிருந் தார்கள். அன்னவர்கள் நம்பிள்ளை காலக்ஷேப கோஷ்டியில் அடிக் கடி அந்வயிப்பதுண்டு. அவர்கள் தங்களுக்குத் தோன்றின சில நிர்வாஹங்களையும் திருவடிகளில் விண்ணப்பஞ் செய்வதுண்டு. அவற்றில் சிலவற்றைக் கண்டித்துத் தள்ளுவதும் சிலவற்றை கிடக்கட்டுமென்று உபேக்ஷித்திருப்பதும் நம் ஆசாரியர்களிடத்துக் கண்டது. இது ஈடு முதலிய வியாக்கியானங்களில் அதிக பரிசயம் பண்ணினார்க்குத் தெரியவரும். திருவாய்மொழியில் (6—5—1) *நின்று நின்று குமிறுமே* என்ற விடத்து–நின்று நின்று, குமி றும் என்று பதம்பிரித்து நம்பிள்ளை உபந்யஸித்தருளினார். இதைக் கேட்ட தமிழர்கள் 'நின்று நின்று உகும் இறும்' என்று பிரித்தும் பொருள் சொல்லலாமென்று ஏதோ கூறினார்கள். அதை நம்பிள்ளை கேட்டு மறுத்தருளினாரென்பது முப்பத்தாறாயிரத்திலும் இருபத் தினாலாயிரத்திலும் ஏறிக்கிடக்கிறது. வாதிகேஸரி ஜீயரது பன்னீ ராயிரத்திலோ வென்னில், "உகும் இறும்......என்றும் சொல் லுவர்" என்றிவ்வளவே யுள்ளது. அநுவதித்தவர் கண்டனங்கூறா மையினால் அந்தப் பதவிபாகம் இவர்க்கு அபிமதம் என்று நினைக் கவும் இடமுண்டு; கேசித்பக்ஷமாக எழுதிவைத்திருப்பதால் அநபி மதமேயென்று நினைக்கவுமிடமுண்டு. இங்ஙனே பல விடங்களை அடியேன் நன்கு குறிக்கொண்டவன்.

* எந்தாயென்பனிணைந்து நைந்தே *என்றவிடத்து இணைந்து என்ற பதவிபாகம் வாதிகேஸரி ஜீயர்க்கு அபிமதமே யென்று ஸமர்த்திக்க வழியில்லை. மோனையின்பம் நோக்கி அது ஆழ்வார்க்

கும் அபிமதமான பாடமாக இருக்கலாமேயென்று சிலர் நினைக்கக் கூடும். மோனையின்பம் குன்றுது குறையாது கவிபாடவேணு மென்று குறிக்கொண்டு ஆழ்வார் பாசுரமருளிச்செய்பவராயிருந் தால் அங்ஙனே நன்கு நினைக்கலாம். * நினைந்து நைந்துள் கரைந் துருகி இமையோர்* என்ற விடத்து இனைந்து என்ருக்கி மோனை யின்பம் ஸம்பாதித்துக்கொண்டாலும் அந்தப் பாசுரந்தன்னிலேயே மூன்றுமடி * நினைந்த வெல்லாப் பொருள்களுக்கும் வித்தாய் முதலிற் சிதையாமே* என்றிருப்பதில் மோனையில்லாததற்கு என் செய்வது? வித்தாய் என்பதை நித்தாய் என்றே நேத்தாய் என்றே திருத்திவிடுவதா?

இவையெல்லாம் நன்கு ஆராய்ந்த நம் ஆசாரியர்கள் பொருட் சுவையையே நிதியாகக் கொண்டு, மோனையின்பம் முதலியவற்றை நோக்கி ரஸாபாஸப்படுத்தாமல் அழகாக வியாக்கியானஞ் செய் தருளினர்கள். இங்கு 'நினைந்துநைந்து' என்ற பாடத்தில் ஆசாரி யர்கள் ஊட்டியிருக்கும் அர்த்த ரஸத்தை வெறுந் தமிழன் சிறி தேனும் அறியமுடியுமோ? திருக்குருகைப்பிரான் பிள்ளான் சுருக்க மாக அருளிச்செய்த ஆறுயிரந்தன்னிலும் இங்கு நினைந்தென் பதற்கு எவ்வளவு சுவை பொருந்திய பொருள் பணிக்கப்பட்டிருக் கின்றதென்பதை ஆழ்ந்தறியப் பிறந்திலரே ஐயங்கார் போல்வார். எதுகை, மோனை, சந்தம், பந்தம் என்று இவற்றிலேயே உழன்று கொண்டிருக்கப் பிறந்தார்க்குப் பொருளின்பம் தெரிய வழியேது? பொய்யிலாத புந்தி பொலிந்த மணவாள மாமுனிகள் * தெள்ளாரு ஞானத்திருக்குருகைப்பிரான் பிள்ளான் எதிராசர் பேரருளால் உள் ளாருமன்புடனே மாறன் மறைப்பொருளை யன்றுரைத்தது இன்ப மிகு மாறுயிரம்* என்று போற்றியருளின ஆறுயிரப்படியிற் காணும் பாடம் எம்பெருமானர் தாம் ஸாக்ஷாத்தாகச் சோதிவாய் திறந்து பணித்ததென்பதில் ஐயமுண்டோ? * தமிழ்மறைகளாயிர மும் மெய்ம்பால் வளர்த்த விராமானுசன் * என்று ப்ரஸித்தரான எம்பெருமானர் ஆதரித்த பாடமென்றால் அது எவ்வளவு கௌர வம் பெற்றதாயிருக்குமென்பதைச் சிந்திக்கவேண்டாவோ? * ஈன்ற முதல்தாய் சடகோபனும் கடக்க நிற்கவேணுமே. இனைந்து என் கிற பாடத்திலும் பொருட்சுவை குன்று தென்று கூறியிருக்கின்ற ஐயங்கார் என்ன சுவை யறிந்தாரென்பதறிகின்றிலோம்.

அருளிச்செயல்களில் எதுகை, மோனை முதலியன இல்லை யென்று எமது கருத்தன்று. அவை என்னைக்கொள் என்னைக்கொள் ளென்று தன்னடையே வந்து மிடைந்தமையுண்டு. அவை ஸம்ப வியாத விடங்களில் நம்முடைய ஸ்வாதந்திரியத்தைக்கொண்டு ஊஹாபோஹங்கள் செய்யப்பார்ப்பது அஸமஞ்ஜஸம்.

பாடவமைதியில் ஐயங்கார் எழுதியுள்ளார்—"திவ்யப்ரபந்தங் கள் யாவும் சொற்பொருள் மரபுகளாலும் வழக்கு வரலாறுகளா லும் தமிழ்வரம்பைச் சிறிதும் கடந்தனவல்ல. இவற்றிற் குறை பாடு காணப்படுமாயின், அங்கே ஏதோ திருத்தமேனும் பாடபேத மேனும் உண்டு என்றே சொல்லலாம்" என்று. ஸத்ஸம்ப்ரதாய நிஷ்ட ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியில் ஏற்கத்தகாததான இந்தக் கொள்கை அடியேனுக்கும் சிலநாள்வரையில் இருந்ததுண்டு. ஸதா சார்ய கடாக்ஷவிசேஷத்தால் அது தொலையப்பெற்றேன். பூருவா சாரியர்களின் வியாக்கியானங்களிலுைல் தெளிவுபெற முடியாத விடங் களில் நம்முடைய தமிழறிவைச் செலுத்தி ஏதேனும் செய்யலா மானாலும், அவர்களது அருமருந்தன்ன வியாக்கியானங்களினுல் கல்வெட்டாகத் தேறிநின்ற பாடங்களின் மீது விச்வாமித்ரஸ்ருஷ்டி பண்ணப் புகுவது பொருந்தாது பொருந்தாது பொருந்தாது.

ஆசாரியர்களின் வியாக்கியானங்களிலும் பாடங்களைப்பற்றின விமர்சங்கள் ஆங்காங்குச் சில காணப்படுகின்றன. பெரிய திரு மொழியில் (8-10-3) * மற்றுமோர் தெய்வமுளதென்றென்கிற பாட்டின் ஈற்றடியின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செய்கிருர் காண்மின்;—"கீழும் கண்ணபுரத்துறையம் மானே யென்று போருகையலே இதுவும் அப்படி நடத்தப்பார்க்கு மன்று அக்ஷரமேறிவரும். அதுக்காக 'கற்று நான் வல்லது கண்ண புரத்தானே' என்னுதல். அன்றிக்கே ரீதிபேதம் பிறவாமைக்காக 'கண்ணபுரத்துறையம்மானே நின் திருவெட்டெழுத்தும் கற்று நானுற்றதும் உன்னடியார்க் கடிமை' என்ருவது" என்பது அவ் விடத்திற் காணும் ஸ்ரீஸூக்தி. இங்கே விகல்பமாக அருளிச்செய் திருந்தாலும் ஆசார்ய பரம்பரையில் ஒரு மிடருக ஸேவித்து வரும் பாடம் ஒன்றேயாயிருக்கும். இங்ஙனேதான் பாடமென்று ஒன்றை நிஷ்கர்ஷித்து அருளிச் செய்யாமல், அப்படியாவது இருக் கலாம் இப்படியாவது இருக்கலாம் என்று இரண்டுபட அருளிச்

செய்ததேன்? என்று நாம் ஆராயவேண்டும். இதைப்பற்றி அடியேனுள்ளத்திலுள்ளதை யெல்லாம் விடாது விரிவாக வரையப் புகின் அது ஒரு பெரிய நூலாகும். அது நிற்க. இங்கு "அக்ஷர மேறிவரும்" என்றுள்ளதை மாத்திரம் ப்ரக்ருதம் எடுத்துக்கொள்வோம். அருளிச் செயல்களில் இலக்கணக் கட்டுப்பாடு முளதென்பதைப் பெரிய வாச்சான்பிள்ளையும் இசைந்துள்ளா ரென்கைக்கு இது சான்று. திருவிருத்தத்தில் வாதிகேஸரி ஜீயரும் *தீவினைக்கு* என்ற பாட்டினுரையில் இங்ஙனே யெழுதியுள்ளார். இவற்றால், அருளிச் செயல்கள் இலக்கண வரம்புக்கு உட்பட்டவையென்பது பெறப்பட்டாலும் * விதயச் சவைதிகாஸ் த்வதீய கம்பீரமநோநுஸாரிண: * என்று ஆளவந்தாரருளிச் செய்த கணக்கிலேயான புடைகளும் பலவோசிலவோ உள்ளனவென்றும் நம் ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றியேயுள்ளார்கள். இதைப்பற்றி மற்றொருகால் விரிவான சர்ச்சை கொள்வோம்.

இனி, "லோகோபகாரமாக ஸ்வாமி (அண்ணங்கராசாரியர்) எழுதியருளிய திவ்வியப் பிரபந்த திவ்யார்த்ததீபிகையிலே" என்று தொடங்கி ஐயங்கார் நான்கு இடங்களை யெடுத்துக் காட்டியுள்ளார். தமக்கு நேர்ந்த குற்றம் அடியேனுக்கு முண்டென்று மூதலிக்க முயல்கின்றார்.

இது உலகவஞ்சனையே யன்றி உண்மை யுரையன்று. அடியேனது தீபிகை ஓலையேட்டுப்புத்தகமாக இல்லை. நன்கு அச்சிடப் பெற்று நகரந்தோறும் அக்ரஹாரந்தோறும் திருமாளிகைதோறும் திகழா நின்றது. ஐயங்கார் எடுத்துக்காட்டியுள்ள விடங்களில் சிறிதளவு குற்றமும் அடியேன்பால் ஏறாதென்பதை யாவரும் எளிதினுணரலாம்; அடியேனும் விவரிக்கின்றேன்.

1. திருவெழுகூற்றிருக்கையில் * கற்போர் புரிசெய்* என்று பெரியவாச்சான் பிள்ளை கொண்டருளிய பாடத்துக்கு முற்றும் மாறாக, (பேரில்லாத எதோ) ஒரு சிறிய வியாக்கியானம் காட்டிய புரிசை என்ற பாடத்தையும் பொருளையும் பக்ஷாந்தரமாகக் கொண்டதாக முதற்குற்றம். அந்தோ! இஃது என்னே! பெரிய வாச்சான்பிள்ளை கொண்ட பாடத்தையே மூலத்தில் பதிப்பித்துப் பதவுரையில் விளக்கி விசேஷவுரையிலும் விவரித்திருக்கிறேன்.

மற்ரெரு சிறிய வியாக்கியானமும் காலக்ஷேப பரம்பரையிலுள்ள தாதலால் அதிற் கொண்ட பாடத்தையும் காட்டியிருக்கிறேன். இதில் என்ன பிசகு? அச்சிறு வியாக்கியானம் அடியேன் அச்சிட்டதன்று; முன்ஞேர்களால் அச்சிடப்பெற்றது. பொருட்சுவையுமுண்டதில். இங்ஙனே யொரு பாடம் அதில் காண்கிற தென்று எழுதினவளவால் பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளில் அடியேன் அபசாரப் பட்டதாக ஆகுமோ? பேதையரு மிங்ஙனம் நினைக்கில்லார். இங்கு அடியேனுடைய ஸ்வாதந்திரியம் சிறிதேனும் இடம் பெற்றுளதோ?

கற்போர் புரி,—செய்கனகமாளிகை என்றே பெரியவாச்சான் பிள்ளைக்குத் திருவுள்ளமென்று அஸங்கத டிப்பணி யொன்று எழுதியுள்ளார். இது வேறு விஷயம். இவரது கொள்கைப்படியேயாஞலும் பெரியவாச்சான்பிள்ளையின் திருவுள்ளத்தை அடியேன் நன்கு அறியப்பெறுதவன் என்ருே விபரீதமாக க்ரஹித்தவன் என்ருே குறை கூறலாமே யல்லது பெரியவாச்சான்பிள்ளையின் ஸ்ரீஸூக்தியை உல்லங்கனஞ் செய்து உரையிட்டதாகக் குற்றமேற்ற ப்ரஸக்தி லேசமுமில்லையே.

2. பெரிய திருவந்தாதி 24-ஆம் பாசுரத்தில் பெரியவாச்சான் பிள்ளை கொண்ட (மீண்டு) என்ற பாடத்துக்கு எதிராக ஈண்டு எனப் பிரித்து உரை செய்ததாக இரண்டாவது குற்ற மேற்றுகின்ருர். இதுவும் உலக வஞ்சனையே. அடியேனது பெரிய திருவந்தாதி திவ்யார்த்த தீபிகையில் (72, 73 பக்கங்களில்) செவ்வனே காணலாம். ஈண்டு என்று பிரித்து மூலம் பதிப்பிக்கவில்லை. பதவுரையில் 'மீண்டு' என்றே ஸ்பஷ்டமாக வெடுத்து அதற்குள்ள பொருளை யுரைத்திருக்கின்றேன். விசேஷவுரையின் முடிவில், ஈண்டு எனப் பிரித்தல் மோனையின்பத்திற்குச் சேர்ந்திருக்குமென்று எழுதியிருப்பதில் ஐயங்கார் மருள்கின்ருர். உடனே என்ன எழுதியுள்ளேனென்பதைக் கண்ணுடையார் காணகில்லாரோ? "மீண்டு என்று பிரித்தலிற் பொருட்சுவையிருப்பது கொண்டு பெரியவாச்சான் பிள்ளை மீண்டெனப் பிரித்தெடுத்துரைத்தருளினர்" என்றல்லவோ எழுதியிருக்கின்றேன். மோனையின்பத்தை நோக்கி ஈண்டென்று பிரிக்கலாமாஞலும் பொருட்சுவைக்கு மீண்டென்று பிரிப்பதே மிகப் பொருத்தமென்று அடியேனது கருத்தை இன்ருக விளக்க வேண்டிய குறை அங்கில்லையே.

3. பெரிய திருமொழி (6-10-3) 'தறுகண்வேழம்' என்ற தொடர்க்குப் பெரியவாச்சான் பிள்ளையருளிய வியாக்கியானத்திற்கு விருத்தமாக வேறோர் உரையை அர்த்தாந்தரமாக எழுதியுள்ளே னென்று மூன்றாவது குற்ற மேற்றுகின்றார். அடியேனது பெரிய திருமொழிதீபிகை பக்கம் (866ல்) நன்கு காணலாமே. "தறு கண்-வட்டமான கண்களையுடையதுமான" என்றே பதவுரை யிட்டிருக் கின்றேன். மேலே விசேஷவுரையில் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான ஸ்ரீஸூக்தியையும் உதாஹரித்துக் காட்டியுள்ளேன். அதற்குப் பிறகு ஸம்ப்ரதிபந்நமான வொருபொருளையும் காட்டி யிருப்பது ஆசார்யாபசாரமாக வழியுண்டோ? அடியேனைப் போலவே ஐயங்காரும் நாலாயிரத்திற்கும் உரையெழுத விழிந்து பூருவாசாரியர்கட்கு அபிமதமான அர்த்தங்களை முந்துற வெழுதி, தாம் கண்டபொருளைப் பின்னே காட்டி நின்றாராகில் இவரைப் பழிப்பாரார்? ஆசாரியர்கள் கொண்டபாடமும் பொருளும் பொருந்தா தென்றே வன்மையாகக் காட்டித் தமது அற்பமான பிடிவாதத்தை விஷயந்தோறும் விளக்கி நிற்குமிவர் தலையிலுள்ள குற்றம் நம் தலையிலெட்டிப் பார்க்கவும் முடியாதன்றோ. பக்ஷாந்தரப்பொருளை ஸர்வாத்மநா காட்டவே கூடாதென்று யாரிட்ட கட்டளை? எவ்வள வும் காட்டலாம். ஆதரிக்கவேண்டிய பொருளில் அநாதரமும் தூஷ ணமும் செய்து, உபேக்ஷிக்கவேண்டிய பொருளில் அபிநிவேசாதி சயம் காட்டி நிற்குமிவர் தமது குற்றமின்னதென்பதைத் தாமு ணராரோ? இத்தகைய குற்றம் சிறிதேனும் என்பால் இருந்தாலன் றோ (அல்லது) நிரூபிக்க முடியுமானாலன்றோ இவர் ஸம்ப்ரமிக்கலாம்.

4. பெரிய திருவந்தாதி 13-ஆம் பாசுரத்தில் பெரியவாச் சான்பிள்ளை கொள்ளாதபொருளை அடியேன் கற்பித்ததாக நான்கா வது குற்றமேற்றியுள்ளார். அந்தப் பாசுரமாவது— * வழக்கொடு மாறுகொளன்று * என்பதாம். இதற்குப் பெரியவாச்சான்பிள்ளை யிட்டருளின வியாக்யானம் அடியேனது அற்ப புத்திக்கு அவகா ஹிக்கவில்லை; பல பெரியார்களையும் பணிந்து கேட்டேன்; "அநந் விதமாயிருக்கிறது, அச்சுப்பிழையிருக்கும் போலும்" என்றே அவர்கள் கூறினர். பிறகு அடியேன் என் செய்வது? பாசுரத்தின் பொருளை ஒருவாறு தேறி உரையிட்டேன். அவ்வுரையின் முடிவில்-

"இப் பாட்டுக்குப் பெரியவாச்சான்பிள்ளை யருளிய வியாக்கியானத்தில் சிறிது வேறுவகையான பொருள் கொள்ளப்பட்டிருப்பது போல் தெரிகிறது. அப்பொருளை வல்லார்வாய்க் கேட்டுணர்க" என்று எழுதியுமிருக்கிறேன். கம்பீரமான வியாக்கியான ஸ்ரீஸூக்தியை அவகாஹித்துக் கொள்ள சக்தியில்லாமையை இங்கு அடியேனை வெளியிட்டிருக்க, வசைகூறுவதற்கு விஷயமேது? பெரியவாச்சான் பிள்ளை பணித்த பொருள் பொருந்தாதென்று எழுதிற்றிலேன். நானெழுதும் பொருளே பொருள் என்று முரைத்திலேன். உள்ளதை உள்ளபடியே வெளியிட்டிருக்கிறேன். இவர் தாம் ஸதாசார்ய பரம்பரையிற் கேட்டுணர்ந்த புலவராயின் 'பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் தேறின பொருள் இன்னது' என்று முன்னம் அழகாக நிரூபித்து விட்டுப் பின்னையன்றோ நம்முறையின் தீமை கூறப் புகவேண்டும். பிராமாணிக ஸரணியிற் படிந்திருக்குமடியேனை இவர் தம்மினத்தில் கூட்டிக்கொள்ள முயல்வது எங்ஙனே பலிக்கும்.

மேற் குறித்தவாறு நான்கு குற்றங்களை ஐயங்கார் வரைந்திட்டு உடனே யெழுதுகின்றார்—"ஸ்வாமி (அண்ணங்கராசாரியர்) அருமையாகக் கண்ட மேற்குறித்த பாடாந்தரங்களும் அர்த்தாந்தரங்களும் சிறிதும் விருத்தமானவை யல்ல; பாடத்தாலும் பொருளாலும் சீரியவைகளே......பரம ரஸிகர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களால் அங்கீகரிக்கத் தக்கவையே" இத்யாதி. இந்தப் புகழுரை எதற்காக வாயிற்றென்றால், இவ்வண்ணமாகவே தாம் காட்டும் பாடாந்தரங்களையும் சீரியனவாகவே கொண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள் உகக்கவேணுமென்கைக்காக. இதைத் தாமே வெளிப்படையாக வரைந்துமுள்ளார்— "இம்முறையில்தான் அடியேன் பாடங்களும் அமைந்துள்ளன" என்று.

ஆரியர்காள்! 'இம்முறையில்தான்' என்று ஐயங்கார் எழுதுவது பொருந்துமோ? எமது முறைக்கும் தமது முறைக்கும் உள்ள நெடுவாசியைக் கண்டறியாதாரோவிவர்? பூருவர்கள் அருளிய பாடங்களையும் அர்த்தங்களையும் முக்கியஸ்தானத்தில் வைத்து சிற்சில விடங்களில் அவற்றோடு கூட பக்ஷாந்தரங்களையும் காட்டுவது அடியேனதுமுறைமை. இங்ஙனேயன்று இவரது. அவற்றைத் தள்ளித் தம்முடையவற்றை மேம்படுத்துவதே இவரதுமுறைமை.

இவரைப்பற்றி அடியேனெழுதும் வியாஸங்களுக் கெல்லாம் இவ்விஷயமொன்றே உயிரானது. இவர், தம்முடைய உக்திகள் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டீ பஹிஷ்கிருதமாகாமைக்காக இவ்விஷயத்தை மறுக்க முயல்கின்றார். பெரியவாச்சான் பிள்ளையைத் தாமும் பின்பற்றியே செல்பவராக வரைகின்றார். மற்றவிஷய விமர்சனங்களை விட்டிட்டு 'இவ்விஷய முண்மைதானா' என்கிற விமர்சமொன்றே முக்கியமாகச் செய்யத்தக்கது.

பூருவாசாரியர்களைக் கிள்ளுக்கீரையாக நினைத்து, அவர்களது வியாக்கியானங்கள் இலக்கண விலக்கியங்களோடு பொருந்ாதவை யென்றும், பொருந்துமாறு பணிப்பவர் தாமே யென்றும் ஸ்பஷ்டமாகக் காட்டி நிற்கின்ற விவர் பொரிபுறந்தடவின சொற்களால் சில பாமரர்களை வஞ்சிக்கலாமே யல்லது விஷயவுண்மை தெரிந்தவர்களையா வஞ்சிக்கப் பார்ப்பது? இவரது வியாஸங்கள் ஆசார்யாபசார புஞ்ஜ கதம்பக மென்னுமிடத்தை மூதலிக்க அருமையுண்டோ? இவருடைய ப்ரதிஜ்ஞையே இதுதானே.

ஐயங்கார் எழுதுகின்றார்—"நீ அநதிகாரி; நாமே எதுக்கும் கடவோமெனின் ஸ்ரீவைஷ்ணவலோகந்தான் அதனைத் தீர்மானிக்க வேண்டும்" என்று.

இஃது அர்த்தமற்ற பேச்சு. பூருவாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளையே சேமநிதியாகக் கொண்டவனடியே னென்பதை இன்னமும் விரித்துரைக்க வேண்டுமோ? இரவும் பகலும் அவற்றையே நினைந்துநைந்துள் கரைந்துருகி நிற்பவனடியேன். ஓரக்ஷரமும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளை மீறி எழுதினவனல்லேன், எழுதுபவனல்லேன். அடியேன் இயற்பாவுக்கு திவ்யார்த்த தீபிகை யெழுதினபோது மிகவும் பரிச்ரமப்பட நேர்ந்தது. அதில் நான்முகன் திருவந்தாதி யுரை முடிந்தவுடனே 'உரைகாரர் விண்ணப்பம்' என்றொரு விஜ்ஞாபனம் பதினைந்தாண்டுகட்கு முன்னம் உலகங்காண வெளியிட்டுள்ளேன். (அதில் பக்கம் 172ல்) காண்மின்;—

"ஆசாரியர்கள் திருவடிகளில் குனிந்து கேட்டவற்றையே கைம்முதலாகக்கொண்டு பெரியவாச்சான்பிள்ளையின் ஆழ்ந்த திருவுள்ளத்தைக் கூடுமானவரை கண்டறிந்து பெரியோர்க்கும் சிறி

யோர்க்கும் ஒருங்கே பயன்படுமாறு இவ்வுரை வரையப்பட்டது. சில விடங்களில் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானப்படி பொருளுரைத்தால் அதனை மந்தமதிகள் க்ரஹித்துக்கொள்வது அருமைப்படுமென்றெண்ணி ஸுலபமான வேறுவகையில் பொருளுரைத்துள்ளேன். அப்படிப்பட்ட இடங்கள் மிகவும் ஸ்வல்பங்களேயாம். மற்றுஞ் சில விடங்களில் பெரியவாச்சான்பிள்ளையின் ஆழ்ந்த திருவுள்ளம் அடியேனுக்கு எட்டாமையாலும் பல பெரியோர்களை அடிபணிந்து கேட்டு முணரப் பெறாமையாலும் ஆங்கும் ஸ்வதந்த்ரமாக எழுதியுள்ளேன். இவற்றைக் குறையாகவேனும் குற்றமாகவேனும் பெரியோர் கருதலாகாது. பூருவாசாரியர்களின் திருவுள்ளத்தையே சேமவைப்பாகக் கொள்பவனடியேன்.''

என்றெழுதியிருக்கின்றேன். ஆகவே ஐயங்கார் அடியேனோடு தோள்தீண்டியாவதற்கு ஔசித்ய லவலேசமுமில்லை யென்பதை ஸ்ரீவைஷ்ணவ வுலகம் ஏற்கனவே யறிந்து தீர்மானித்தேயிருக்கும்.

இன்னமும் ஒன்று தீரமாக விஜ்ஞாபிக்கின்றேன். புத்தி பூர்வமாகப் பூருவர்களின் ஸ்ரீஸூக்திகளைக் கடந்து எழுதினதில்லை. என்னையுமறியாமல் கடந்தெழுதிற்றுண்டாகில் அது ஆசாரியர்களின் திருவுள்ளத்திற்குப் பரமபோக்யமேயாகும். இவ்விடத்தில் "ப்ரேம்ணாத தாமபரிணமஜுஷா பபந்த" என்கிற கூரத்தாழ்வான் ஸ்ரீஸூக்தியை அநுஸந்திப்பது. கண்ணபிரானை யசோதைப்பிராட்டி தாம்பினால் கட்டியடித்தாளென்றால் அது ஆஸுரப்ரக்ருதிகள் கட்டியடிக்குமதோ டொக்குமோ? *தாயைக் குடல் விளக்கஞ் செய்த தாமோதரனை* என்று புகழும்படியாகவன்றோ விருப்பது. அபிஸந்தி சுத்தியொன்றேயன்றோ ஆராயத்தக்கது. சிரமப்பட்டு ஆராய வேண்டிய நிலைமையில்லைகிடீர் நமது நண்பர்பால்.

இந்த ப்ரகரணத்தில் ஒரு விஷய முணர்த்துகின்றேன். பெரிய திருமொழியில் (10-2.1) *அரக்கராடழைப்பாரில்லை* என்றவிடத்து வியாக்கியானத்தில் பெரியவாச்சான்பிள்ளை ஒரு ஐதிஹ்யமருளிச் செய்கிறார்; ஆடழைப்பாரில்லை யென்பதற்கு ஆடு போலே கூப்பிடக் கடவாரில்லை யென்று பட்டரருளிச் செய்ததாக நஞ்சீயரருளிச் செய்தாராம். அதை நம்பிள்ளை கேட்டு, இந்த ஒரு அர்த்தமே சொல்லவேணுமென்று நிர்ப்பந்தமில்லையே. வேறுவகை

யாகவும் சொல்லலாமன்றோ என்றாராம். சொல்லிக் காணாய் என்று ஜீயர் பணிக்க, "ஆடு என்று வெற்றி; இந்த ராக்ஷஸ ஜாதியில் வெற்றி சொல்லக் கடவாரில்லை" யென்று நம்பிள்ளை பணித்தாராம். அதைஜீயர் கேட்டு இதுவேதான் இங்குப் பொருளென்று மிகவும் ஆமோதித்தாராம். இங்ஙனே மற்றுஞ் சில விடங்களிலும் ஐதிஹ்யங்களுள்ளன. ஆசார்ய திவ்யஸூக்திகளைப் பொன்னேபோல் போற்றுகின்றவர்கள் தாங்கள் புதிதாகவொருபொருள் பகர்ந்தாலும் அதுவும் பரிக்ராஹ்யமே யென்பது இதனால் காட்டிற்றாகிறது. பூருவாசாரியர்களையே பரதெய்வமாகக் கொண்ட அடியேன் அவர்களருளிச்செய்த பொருளோடு கூட இன்னமுமெத்தனை பொருள் சொன்னாலும் அது வழுவற்றதேயாம். ஆசார்ய தூஷணைக்கென்றே காப்புக் கட்டிக்கொண்டுள்ளவர்கள் ஸ்வதந்திரமாகப் பேசுமது எங்ஙனே பரிசு பெறும்.

ஐயங்கார் "வேதஸ்தானத்திலுள்ள அருளிச் செயல்களுக்கு ......இந்த ஸாம்யங்களைக்கொண்டு நம் திராவிட வேதத்துக்கு யாவும் அமைந்து விட்டனவென்று மகிழ இடமில்லை." என்றெழுதுகிறார். ஸ்ரீவைஷ்ணவராய்ப் பிறந்து, அதிலும் தென்னாசார்ய ஸம்ப்ரதாயஸ்தராயிருந்து இப்படி கூசாமலெழுதுவது தான் ஆச்சரியம். திவ்யப்ரபந்தங்களில் இவ்வளவு மாச்சரியங் கொண்டவரென்பது இச்சொற்றொடரொன்றிலேயே நன்கு புலனாகின்றது. இவர் தமது நெஞ்சில் மகிழ்ச்சிக்கு இடம் பெறாதது கொண்டு அந்தோ! மகிழ்வாருடைய மகிழ்ச்சியையும் தவிர்க்கப் பார்த்தால் தவிருமோ? ஆசார்யஹ்ருதயத்தில் * உதாத்தாதி பதக்ரம...... ......லக்ஷணங்களொக்கும் * என்பது முதலான சூர்ணிகைகளும் அவற்றுக்கு நம் மணவாள மாமுனிகள் இட்டருளின வியாக்கியானமும் ஸேவித்திருந்தால் இங்ஙனே யெழுத ஸாஹஸம் தோன்றியிராது. எல்லாவற்றிலுமே அப்ரதிபத்தியும் விப்ரதிபத்தியும் மலிந்துள்ளன போலும்.

"வேதங்கட்குப் போல அருளிச் செயல்கட்குப் பதப்பிரிப்பு சொற்சோதனை முதலியன செய்து வரம்புகட்டிய சாஸ்த்ரம் ஒன்றுமே கிடையாது" என்கிறார். இங்குத் தினவடங்க விடையளிப்போமாக. வடமொழி வேதத்தில் ஸம்ஹிதா என்று வழங்கும் பாகத்திற்கு மாத்திரமே பதபாடமும் சொற்சோதனையும் அவதரித்

திருக்கின்றனவே யன்றி ப்ராஹ்மண பாகங்களுக்கு ஒன்றுமே அவதரித்ததில்லை. அப்படிப்பட்ட ப்ராஹ்மண பாகங்களே அநந்தங்கள். அவற்றுக்குச் சில பாஷ்யங்கள் தோன்றியிருக்கின்றன. அந்த பாஷ்யகாரர்கள் மதாந்தரஸ்தர்களாதலால் அவர்களுக்கு ப்ரமம் ப்ரமாதம் விப்ரலிப்ஸை முதலிய மனமாசுகள் உள்ளனவென்று கருதியிருக்கின்ற ஸ்ரீவைஷ்ணவாசார்யர்கள் அந்த பாஷ்யங்களில் யுக்தமாகத் தோன்றுமவற்றைக் கைக்கொண்டு அயுக்தமாகத் தோன்றுமவற்றைத் தள்ளுகிறார்கள்.

ஒன்று பாருங்கள்; "உபயாமக்ருஹீதோஸி" என்று உபநிஷத்தில் ஒரு வாக்யம். இது ஸம்ஹிதையிலும் பன்முறையும் வருகின்றது. அங்கு "உபயாமக்ருஹீத இத்யுபயாம—க்ருஹீத:" என்று வேஷ்டநம் பதபாடத்தில் ஓதப்பட்டு வருகிறது. அங்கு யார்க்கும் வைமத்யமில்லை. உபநிஷத்தில் பதபாடமில்லாமையாலே இதர பாஷ்யகாரர்கள் ஸம்ஹிதையிற் போலவே உபயாமக்ருஹீத: என்பதை ஒரு பதமாகவே கொண்டு பாஷ்யம் செய்திருக்கச் செய்தேயும், ஸ்ரீவைஷ்ணவாசார்யர் 'உபயாம, க்ருஹீத:' என்று இரண்டு பதமாகப் பிரித்து [உபயாம என்பதை க்ரியாபதமாகக் கொண்டு] வியாக்கியானம் செய்திருக்கிறார். அவ்வாசிரியரிடத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் அவர் காட்டிய வழியே வழியென்று துணிந்து அதையே கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இது யுக்தமா அயுக்தமா வென்று விமர்சித்து யுக்தமாகத் தோன்றுவதைக் கொள்வோமென்கைக்கு அதிகாரிகள் இலர். ஸ்ரீவைஷ்ணவாசார்யர்களின் பாஷ்ய மில்லாத விடங்களிலும் அந்த பாஷ்யத்தினால் தெளிவு பெற முடியாத விடங்களிலும், வித்வான்களாகவுள்ளவர்கள் தமது விவேசந சக்தியை எவ்வளவும் செலுத்தலாம். உப, யாம், அக்ருஹீத: என்று மூன்று பதமாகப் பிரிக்கிறேனென்றாலும் கேள்வியில்லை.

நமது வேதம் நாலாவது காண்டத்தில் ப்ராஜத்ருஷ்ட்ய: என்றொருபதம் வருகிறது. இதற்கு "ப்ராஜத்ருஷ்டய இதி ப்ராஜத்—ருஷ்டய:" என்று வேஷ்டநம் பதபாடத்தில் அமைந்துளது. அப்படியிருந்தும் வேத பாஷ்யகாரரான வித்யாரண்ய ஸ்வாமிகள் ஏதோ ப்ரமாதத்தால் * ப்ராஜ — த்ருஷ்ட்ய: * என்கிற விபாகத்தை மனத்திற்கொண்டு அதற்குச்சார்பாக அர்த்தமெழுதி விட்டார்.

அதைப்பிழை யென்றே ஒதுக்குகிறோம். இங்ஙனே பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளில் பிழை யென்று ஒதுக்கக்கூடியவை யிருப்பதாக ஸர்வஜ்ஞ ஸார்வபௌமரான நம் மணவாளமாமுனிகள் திருவுள்ளம் பற்றவில்லை.

"நம் பூருவர்களின் வியாக்கியானங்கள் அருளிச்செயல்களில் பதப் பிரிப்பு சொற்சோதனைகளை விசாரிப்பதில் இறங்கவில்லை" என்கிறார் ஐயங்கார். காப்பு என்கிற சொல்லை யெடுத்துக்கொண்டு, இதில் கா—பகுதி; பு—விகுதி என்று பெரியவாச்சான் பிள்ளை எழுதவில்லை யென்கிறார் போலும். இது உண்மையே. இப்படிப் பட்ட சொற்சோதனையில் நம் பூருவர்கள் இறங்கவில்லை தான். வடமொழி வேதத்திலுங்கூட இத்தகைய சொற்சோதனையில் மஹர்ஷிகள் இறங்கவில்லை. அதனாலென்ன? ஆசாரியர்கள் கொண்ட பாடங்களையும் பொருள்களையும் அங்யதாகரிக்க இவரார் கொல்? ஆசாரியர்களின் வியாக்கியானங்களினால் வ்யக்தமாகாத இடங்களில் இவர் ஏதேனும் கை வைத்திருக்கிறாரோ? அஃதில்லை. பாடங்களும் பொருள்களும் ஸுவ்யக்தமாகக் காணு மிடங்களிலன்றோ இவர் கை வைத்துக் கள்ளர் பள்ளர் சொற்களைக்கொண்டு திருத்தங்கள் காட்டுகிறார். இதற்கு இவர் அநதிகாரி யென்று அடியேன் பறைசாற்றுவதில் எந்நாளும் வெற்றியே யல்லது ஒருநாளும் தோல்விவாராது.

"ஸ்ரீவைஷ்ணவ அத்யாபக ஸ்வாமிகள் ஓதிவரும் பாட முறைகளிலே அசை சீர் தொடர் தளை முதலியன பற்றி அமைந்த தவறுகளைத் தம் திவ்யார்த்த தீபிகையில் மிகுதியாகக் காட்டித் திருத்தங்கள் செய்துள்ளார் ஸ்வாமி (அண்ணங்கராசாரியர்); அவற்றையெல்லாம் தவறுகள் என்று கொள்ளவேண்டியதேனோ?" என்று வரைகின்றார் ஐயங்கார். இதற்குச் சொல்லுகேன் கேண்மின். அடியேனது தீபிகையில் மேற்சொன்ன திருத்தங்கள் மிக மிகக் காட்டியிருப்பது உண்மையே. ஆனால் அடியேன் சுதந்திரமாக ஒரு திருத்தமும் செய்திருக்கவில்லை. அருளிச்செயல்களின் சுத்தமான பாட பரம்பரை அடியோடு லோபித்து விடவில்லை. ஆங்காங்குப் பெரியார்கள் சுத்த பாடங்களைப் பரம்பரையாக உபதேசித்தும் வருகின்றார்கள். அவ்வழியிற்பெற்ற திருத்தங்களையே

அடியேன் பூருவர்களின் வியாக்கியானங்களுக்குச் சிறிதும் விரோத மின்றியும் அவற்றோடு இணங்கும்படியாகவும் காட்டியுள்ளே னத்தனை. யாரேனும் சில சதுரர்கள் (அல்லது) பிராமாணிகர்கள் "எமக்கு இப்படித்தான் சுத்த பாட பரம்பரை வந்திருக்கின்றது; நீ செய்த திருத்தம் ஒவ்வாது" என்று உபபத்திகளுடன் நிரூ பித்தால் நன்றே. இன்றளவும் அப்படிச் சொல்ல ஒரு திசையி லிருந்தும் ஒருவரும் எழுந்திலர். அபத்தமாக ஸேவித்து வருகிற சில அத்யாபக ஸ்வாமிகளும் அடியேனது தீபிகையில் திருத்தங்களைக் கண்டும் கேட்டும் உவந்து என்ன ஸாதித்து வருகிறார்களென்றால்; 'அடியோங்களுக்கு ஏதோ பால்யபாடம் ஒருவிதமாக வந்துவிட்டது; சந்தை சொல்லிக்கொடுப்பவர்கள் நல்ல விவேகிகளாகக் கிடைக்காத குறையினாலும், நாங்களும் ச்ரத்தையுடன் சொல்லிக் கொள்ளாத குறையினாலும் பல தவறுகள் ரூடியாய்விட்டன; இப்போது தீபிகையில் அர்த்தங்களை யநுபவிக்கும்போது திருத்தங்களைக் கண்டு எவ்வளவோ ஆனந்திக்கிறோம். இதன்படியே திருத்திக் கொண்டு ஓதவேணுமென்று ஆசை கொண்டாலும் அபத்த பாடங்கள் ரூடமூலமாக ஆய்விட்டபடியாலே மறதியின் மிகுதி யினால் மீண்டும் நாலைந்து நாளைக்குள் பழைய அபத்தமே வந்து புகுகின்றதே! என் செய்வோம்!' என்றிப்படியேதான் இருபது ஸம்வத்ஸரமாக எங்குமுள்ள ஸ்வாமிகளும் ஒருமிடறாக வுரைக்கக் கேட்டு வருகிறேன். "அந்தப் பரம ஸாதுக்களான ஸ்வாமிகள்" என்று தொடங்கி ஐயங்கார் எழுதியுள்ளபடி இதுகாறும் ஒருவர் வாக்கிலும் வந்ததில்லை, வரப்போகிறதுமில்லை. அவிவேகிகளான சிலர் விஷயமின்னதென்றே தெரிந்துகொள்ள மாட்டாது கேவ லம் துராக்ரஹ வசத்தால், எங்கேனும் என்றேனும் அடியேனது திருத்தங்களை க்ஷேபிக்கக் கூடுமென்றே வைத்துக் கொள்வோம். அதனால் அடியேனுக்குச் சேதமென்ன? அன்னவர்கள் நம் பூரு வாசாரியர்களையே க்ஷேபிப்பவர்களாகவன்றோ முடிந்து நிற்பர்கள்.

அடியேன் காட்டியுள்ள பலபல திருத்தங்களுள் ஈண்டு ஒன்றை யெடுத்துக்கொண்டு பேசுகிறேன். பெருமாள் திருமொழி யில் (1—7) * மறந்திகழு மனமொழித்து வஞ்சமாற்றி ஐம்புலன் களடக்கி * என்று அத்யாபகஸ்வாமிகள் ஸேவித்து வருகிறார்கள்; அச்சுப்பதிப்பிலும் இங்ஙனே காண்கிறது. இங்கு 'ஐம்புலன்கள்'

என்னக்கூடாது, 'வன்புலன்கள்' என்ன வேணுமென்று அடியேன் திருத்தம் காட்டியிருக்கிறேன். இலக்கணரீதியில் மோனையின் பத்திற்கு இணங்க வன்புலன்களென்றே யிருக்க வேணுமென்று இந்த ஒரு காரணம் மாத்திரமே அடியேன் கூறுபவனல்லேன்; மோனையின்பத்தை ஆழ்வார் விவக்ஷியாமலிருக்கவுங் கூடுமாதலால். பின்னை முக்கியமாக எதைக்கொண்டு திருத்தங் காட்டுகின்றே னென்றால், பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் இங்கு "வன்புலச் சேக்களைப் பட்டிபுகாமே கட்டி" என்றருளிச் செய்திருப்பதனால் அந்த ஸ்ரீஸூக்தியையே முக்கியமாகக் கொண்டு என்க. திருச்சந்தவிருத்தத்தில் *மறந்துறந்து வஞ்சமாற்றி ஐம்புலன்கள்" என்றவிடத்திலும் இப்படியே திருத்தவேண்டியிருந்தும் அடியேன் திருத்தாதது அங்குப் பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானம் கைகொடுக்கவில்லை யென்பது பற்றியே.

இங்ஙனே ஒவ்வொன்று மெடுத்துக் காட்டவேணுமோ? கல்வெட்டாகச் சொல்லுகேன் கேண்மின். ஐயங்காருடைய திருத்தங்கள் வழிப்போக்கர்களான சில பள்ளர்களுடைய சொற்களையே மூலமாகக்கொண்டு தோன்றியவை; அடியேனுடைய திருத்தங்கள் அங்ஙனன்றிக்கே பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளையே நிதானமாகக் கொண்டவை. தலைகிழாக நின்று தவம் புரிந்தாலும் ஐயங்கார் இந்த நிஷ்கர்ஷத்தை மாற்றகில்லார். ஆகவே தமது திருத்தங்களுக்கு ஆன கதியே எனது திருத்தங்களுக்குமாக வேணுமென்று இவர் பாரிப்பது ஊமனார்கண்ட கனவிலும் பழுதாயொழியுமத்தனை.

பெரியவாச்சான் பிள்ளையின் வியாக்கியானங் கொண்டு நிஷ்கர்ஷிக்க முடியாத சில திருத்தங்களும் அடியேன் வெளியிட்டிருப்பதுண்டு. அப்படிப்பட்டவற்றுள் ஒன்றிரண்டு காட்டுகிறேன். பெரிய திருமொழியில் (5-1-1,) *குறிய மாணுருவாகிய* என்று பலர் ஸேவித்துவருவதை *குறிய மாணியுருவாய* என்று திருத்துவதும்; சிறிய திருமடலில் *அன்றியும் பேர்வாமனாகிய காலத்து* என்றவிடத்து 'வாமனாகிய' என்று திருத்துவதும் முதலியன கொள்க. இலக்கணம் பற்றிய இத்திருத்தங்களுக்குப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்திலிருந்து ஆதாரம் காட்ட முடியாதாயினும் இவை அடியேன் சுதந்திரமாகச் செய்த திருத்

5

தங்களல்ல வென்றும், கசடறக்கற்ற பெரியாருடைய பரம்பரையில் வந்த சுத்தபாடங்களை யெடுத்துக் காட்டினவளவே யென்றும் திண்ணமாகக் கொள்க. ஏற்கனவே விவேகிகள் பரிசோதித்துப் பதிப்பித்த திவ்யப்ரபந்த ஸ்ரீகோசங்களில் இந்த சுத்த பாடங்களைப் பெரும்பாலும் காணவுங் கூடுமாதலால் ஐயங்காரைப்போலே அடியேன் தான் தோன்றியாகத் திருத்துமவனல்லேனென்பதை எந்த ஸதஸ்ஸிலும் கல்வெட்டாக்கி வைப்பேன். உட்புகுந்து ஒன்றையும் பாராத சிலர் "அண்ணங்கராசாரியர் எதையும் திருத்தி விடுகிறார்" என்று சொல்லவுங்கூடும். அன்னவர்களை ஐயங்கார் இனி ப்ரோத்ஸாஹப் படுத்தக்கூடும். அதனாலடியேன் தளர்வேனல்லேன், ஒரு ஹானியுமடைவேனல்லேன். கீழே விவரித்தவாறு பூருவர்களின் வியாக்கியானங்களையோ சுத்தப் பிரதிகளையோ ஆதாரமாகக் காட்டி அடியேனுடைய ப்ராமாணிகத்வத்தை ஸ்தாபித்துக் கொள்ளச் சிறிதும் இடையூறு நேராது. ஐயங்கார் தமது திருத்தங்களை இவ்வழியில் நின்று ப்ராமாணிகமென்றுகாட்ட வருஷசதமானாலும் ஆகாது. அருணாசலப் புலவரும் சோணாசலப்புலவரும் போன்ற சிலர் சொல்லிவைத்த சொற்களைத் திருப்பித் திருப்பிப் பாடுவதொன்றே இவர்க்குத் தஞ்சமாகும்.

ஐயங்கார் எழுதுகின்றார்— "புறச்சமயியான பவணந்தி போன்ற நேற்றைத் தமிழனிடந்தானே ஸ்வாமியும் (அண்ணங்கராசாரியரும்) புகலடைய வேண்டியிருக்கிறது. அருளிச் செயல்களில் உள்ள சொற்பொருள் வழக்குக்களுக்குப் பிரமாணங்களாக வழிப்போக்கர்களின் தமிழ் நூல்களை ஸ்வாமி தம் உரைகளில் அபரிமிதமாக எடுத்தாளவேண்டிய அவசியம் என்னே?" என்று.

இதற்கும் இனவடங்கச் சொல்லுகிறேன். அடியேனது தீபிகையில் இலக்கண இலக்கிய மேற்கோள்களை அபரிமிதமாக எடுத்தாண்டிருப்பது உண்மையே. உள்ளதற்கு ஸம்வாதமாக எதையும் எடுத்தாளும் முறைமை வேதபாஷ்யம் முதற்கொண்டு எந்த வியாக்கியானங்களிலும் திகழும். வேதபாஷ்யத்தைப்பற்றி பிறகு பேசுவோம். ஸ்ரீராமாயணத்தையும் அதன் வியாக்கியானங்களையும் எடுத்துக் கொள்வோம். ஸ்ரீராமாயணம் அவதரித்து எத்தனை யுகமாயிற்றென்று அறுதியிட முடியாமலிருக்கின்றது. (ஆனால் ஐயங்கார்

தாமொரு சாசனம் கண்டதாகக்கூறி கி. பி. இத்தனையாவது நூற்றாண்டில் ஸ்ரீராமாயணம் தோன்றியதென்று எழுதிவிடுவர், எழுதியுமிருப்பர். அது கிடக்கட்டும்.) உலகமெங்குமுள்ள வைதிக வரிஷ்டர்கள் ஸ்ரீ ராமாயணத்தை வேதத்தோடொப்பவே கொண்டிருக்கிறார்கள். அதிப்ராசீநமான இந்நூலுக்கு வியாக்கியான மெழுதப் புகுந்த ஸ்ரீகோவிந்த ராஜப்ரப்ருதிகள் பவணந்தியின் தாயாதியான அமரஸிம்ஹன் சொன்னவற்றையும் நேற்றின்று தோன்றிய கவிகள் கூறினவற்றையும் அபரிமிதமாக எடுத்தாண்டிருக்கக் காணுகின்றோம். இதனால் இந்த உக்திகளைக் கண்டே வான்மீகி முனிவர் ஸ்ரீராமாயணம் வகுத்தாரென்று யாரேனும் நினைப்பதுண்டோ? அமரன் முதலானோருடைய இந்த உக்திகளைக்கொண்டு மூலத்தைத் திருத்தியிருக்கிறார்களா? என்பதொன்றே பார்க்கத்தக்கது. அதுஎங்குங்காணக்கிடைக்காது. ஆகவே, உள்ளதற்கு ஸம்வாதமாகஎந்தமேற்கோளைக்காட்டினாலும் குறையொன்றுமில்லையென்க.

நம்பிள்ளையும் ஈட்டில் ஓரிடத்தில் திருவாய்மொழிச் சந்தைக்குக் கம்பராமாயணச் செய்யுளொன்றை மேற்கோளாகக் காட்டியருளியுள்ளார். இதனால் நம்மாழ்வார் கம்பராமாயணத்தைப் பார்த்துக் கவி பண்ணினாரென்று நம்பிள்ளை திருவுள்ளம் பற்றினதாக ஆய்விடுமோ?

நமது க்ருஷ்ண யஜுர்வேதத்திற்கு பட்டபாஸ்கரர் வித்யாரண்யர் என்ற இருவர் பாஷ்யம் செய்துள்ளார்கள். வித்யாரண்யர் பெரும்பாலும் பொருளை மாத்திரம் விவரித்துப்போவர். பட்டபாஸ்கரர் பெரும்பாலும் வியாகரண ஸூத்ரங்களை காட்டிப்போருவர். அந்த ஸூத்ரங்களை மூலமாகக்கொண்டு வேதம் தோன்றியது என்று அவருடைய கருத்து? பொருந்துகிற விடங்களிலே மேற்கோள்களைக் காட்டுவோமென்பதே அவரது கருத்து. இங்ஙனம் வியாகரணம் காட்டுகின்ற அவர், பிறர் யாரேனும் வியாகரணம் காட்டி மூலத்தைத் திருத்தவந்தார்களாகில் அவர்களைக் கண்டித்தே தீருவர். அவரை நோக்கி "நீர் மாத்திரம் என் அபரிமிதமாக வியாகரணம் காட்டிப் போருகிறீர்?" என்று ஒரு விவேகியும் கேட்க விரும்பான்.

"நேற்றைத் தமிழனிடந்தானே ஸ்வாமியும் புகலடைய வேண்டியிருக்கிறது." என்ற ஐயங்காருக்கு இன்னமும் சொல்லுகின்

றேன். "ஆகஸ்த்யஃமஹாத்" என்கிற ஆசார்யஹ்ருதய ஸூக்தியின் படி வடமொழியோடொப்ப அநாதியாக விளங்கிவரும் தமிழ் மொழியிலும் அபரிமிதமான இலக்கண இலக்கியங்கள் ஸூர்ய சந் திரர்கள் உள்ள காலம் முதலாகவே இந்நிலவுலகில் உண்டு. வட மொழியில் பட்டோஜி தீக்ஷிதர்செய்த ஸித்தாந்த கௌமுதியை யே பெரிய வியாகரணமாக இக்காலத்தவர்கள் வழங்கிவருகிறார்கள். இவர் சில நூற்றாண்டுகட்கு முன்னம் தோன்றினவரென்பது நிர் விவாதம். இவர்க்கு முன்னே யிருந்தவர்கள் இதுபோன்ற வொரு க்ரந்தத்தை ஜீவாதுவாகக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு காலத்தி லே ஒவ்வொரு நூலுக்கு ப்ரசார பாஹுள்யம் ஏற்படுகின்றதென் பது அறியத்தக்கது. வடமொழியில் ஸித்தாந்த கௌமுதிபோல, தென்மொழியில் தற்காலம் நன்னூல் பிரசாரம் பெற்றிருப்பத னால் படிப்போருடைய அவகாஹந ஸௌகரியத்திற்காக நாமும் பிறரும் நன்னூல் முதலியவற்றிலிருந்து மேற்கோள்களை அருளிச் செயலுரைகளில் காட்டினவளவால் இவ்விலக்கண விலக்கியங்க ளுக்கு ஆழ்வார் ஸ்ரீஸூக்திகள் கட்டுப்பட்டு விட்டதாமோ? கட் டுப்பட்டிருப்பதாகக் காணுமிடங்களிலே அவற்றுக்குப் பொருத்த மான இலக்கண விலக்கியங்களை மேற்கோள்கொடுத்து வாசகர்களை இன்பப்படுத்துகிறோம். இதில் க்ஷேபிக்க வழியேது?

இலக்கண விலக்கியங்களைக்கொண்டு, உள்ள பாடங்களைத் திருத்துகிறோமென்று கிளர்ந்தால், ஸர்வஜ்ஞரான நம் பூருவர்கள் செய்தருளாத இக்காரியம் நமக்குத்தகாது என்பதே அடியேனு டைய விண்ணப்பம். நாலாயிரத் தனியன்களிலே வியாக்கியானங் களை மீறியும் நாம் திருத்தங்கள் காட்டியிருப்பதுண்டு. இது எத னாலே யென்னில், தனியன் வியாக்கியானம் பூருவாசாரியர்கள் பணித்ததன்று. மணவாள மாமுனிகளுக்குப் பிற்பட்டவர்களிடத் திலே பூருவாசாரியர்களிடத்திற்போல ப்ரதிபத்திகொள்ளப் ப்ராப் தி இல்லாமையாலே அங்கு நாம் நமது ஆராய்ச்சி வல்லமையைக் காட்டக்குறையில்லை. ஜ்ஞாநாநுஷ்டானங்களாலே உலகத்தை யெல் லாம் திருவடிகளிலே வணக்கி ஆண்டருளின நம்பிள்ளை, பெரிய வாச்சான் பிள்ளை, மணவாள மாமுனிகள் போல்வாரான மஹா சார்யர்கள் கொண்டதாக நமக்கு நிச்சயமாய்த்தெரியும் பாடங்களைச் சில அல்பஜ்ஞர்களின் வாக்குக்களை நம்பித் திருத்துவதும், அங்

னம் திருத்தியே யாகவேண்டுமென்று ஆக்ரஹிப்பதும் ஸ்ரீவைஷ்ணவஸந்ததியிற் பிறந்தார்க்கோ தகுவது.

ப்ரஹ்மஸூத்ரத்திற்கு நம்மிராமானுசன் பாஷ்யமிட்டருளியிருக்கிறார். ஒரு ஸ்ரீவைஷ்ணவ பண்டிதன் கிளர்ந்து, பாஷ்யகாரர்க்குக் கிடைக்காமலிருந்து தவறிப்போன பாடங்களை நான் ஆராய்ந்தறிந்து கண்டுபிடித்துக் காட்டுகிறேன் காணுங்கோள் என்று கூறி 'அந்த ஸூத்ரம் அப்படியிருக்கவேணும், இந்த ஸூத்ரம் இப்படியிருக்கவேணும், என்று திருத்தப் புகுந்தால் அவனுக்கு இங்குமங்குமெங்கும் என்ன கதியென்பதை நாமுரைக்கவேணுமோ? ஐயங்கார் தாமறியாரோ?

"இனி, ஸ்வாமியால் ஆக்ஷேபிக்கப்பட்ட பாடவமைதிகள் நான்கையுங் கவனிப்போம்" என்று தொடங்கி ஐயங்காரெழுதியுள்ளவற்றைப் பொருள் படுத்தி அவற்றுக்கு விரிவாக மறுப்பெழுதும் வீண் வம்புவேலையிலே அடியேன் இப்போது தலையிடுகின்றிலேன். பெரிய திருமொழி (10-2-4) * அஞ்சலோதி விஷயத்தையே இவர் முதலதாக எடுத்துக்கொண்டு ஏதோ எழுதுகிறார். பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானித்தருளின பாடம் 'அஞ்சலோதி' தான் என்பதை நிராக்ஷேபமாக இசைந்து விட்டு 'அஞ்சலோதிக்கு வேறு தமிழ்ப்பிரமாணம் இல்லை' என்றும், 'தமிழுலகம் நன்கறிந்த தொடர் அஞ்சிலோதியே' என்றும் ஆக்ரஹமே கொண்டெழுதுகின்றவிவர்க்கு என்னெழுதுவது? பட்டர் ஸஹஸ்ர நாம பாஷ்யத்தில் ஓரிடத்தில் "ந தே நிரஸநீயா:, அபிது சோசநீயா:" என்று ரஸமாக அருளிச்செய்கிறார். அதுவே இவர் திறத்திலு முரியது. * அஞ்சலோதிக்குள்ள விசேஷவுபபத்தியை நாம் ஆழ்வாரருளிச்செயல்கள் கொண்டே நன்கு நிரூபித்துக்காட்டியிருந்தும் பற்றினது விடாதிருக்கின்றவிவர்க்கு நாம் இனியும் அவற்றிற்கு உத்தரமுரைக்க விரும்புகின்றிலோம். பூருவர்களின் வியாக்கியானத்தோடு முரண்பட்ட பாடங்கள் என்கிற காரணத்தினாலேயே அவை தள்ளுண்டு தொலைந்தனவென்க. வியாக்கியான பாடங்களை யேற்றுக் கௌரவிப்பவராமிவர். புண்ய ஜநமென்று பேர்சுமப்பாருமுண்டிறே.

திருமங்கையாழ்வார் நளவெண்பாவும் நீதிநெறி விளக்கமும் நல்வழி நன்னெறி வாக்குண்டாலும் வாசித்தே இருந்தமிழ்நூல்

புலவராயினரென்று கருதி யெழுதுகின்ற இவ்வையங்காரது உக்தி களுக்கு நாம் விடையளிப்பதும் உசிதமன்று.

யாப்பருங்கல விருத்தி யுரையுள் காட்டப்பட்ட முதல் திருவந்தாதிப் பாசுரத்தின் (15) மூன்றுமடியில் [*பொருந்தாரிரணியனைப் பொரலுற்றரியாய் என்று அவர்கள் கொண்டதாகக் காட்டின பாடத்தில்] வெண்டளைபிறழ்ந்திருப்பதை முன்னம் ஆராய்ச்சியில் நாம் காட்டியிருந்தோம். அதற்கு ஐயங்கார் பதிலெழுதுகிறார் "பொரலுற்று என்று கைப்பிழையாக விழுந்திட்டது; கொல்லுற்று என்று அங்குள்ளது" என்று. அழகிய பாடங்களைக் கொல்லுற்றவாறு அழகியதே. வேறு கொலையும் வேணுமோ?

"ஆழ்வார்கள் திருவாக்குகளில் தமிழ் வளமில்லையென்றும் இலக்கணப் பிழைகள் காட்டியும் இழித்துக் கூறிவரும் புறச்சமயிகள் பலருளர். இவை ஸ்வாமி போல்வர்க்குத் தெரியவரின் அடங்காமனக்கொதிப்படையத் தடையில்லை" என்றெழுதுகின்றாரையங்கார். நாமறியாததன்றிது. * இளைய புன்கவிதையேலும் * என்று தொண்டரடிப் பொடியாழ்வார் நைச்சியமாகக் கூறினது உண்மையில் நாலாயிரத்திற்கும் அங்விதமாஞலுங் கூட * எம்பிராற்கினியவாறே* என்று அடுத்துக் கூறப்பட்ட அதிசயம் அதிதரஸாதாரணம். அத்தகைய அருளிச் செயல்களை எவர் எவ்வளவிழித்துக் கூறினாலும், "மனக்குற்ற மாந்தர் பழிக்கில் புகழ்" என்று அமுதனாருளிய கணக்கிலே புகழாகவே யெண்ணிப் பொங்கியிருப்போமத்தனை. அடங்கா மனக்கொதிப்புக்கு அவகாசம் ஈஷத்துமில்லை. ஸ்ரீவைஷ்ணவாசாரியர்களின் திரு வாக்குக்களைப் புறக்கணிப்பதினும் பெரிதோ புறச்சமயிகளினிகழ்வு.

முடிவில் ஸாரமாகவொரு விண்ணப்பம். மஹர்ஷிகளில் கச்யபர் என்பாரொருவரை அனைவருமறிவர். இந்தப் பெயர் எங்ஙனே வந்ததென்பதை நமது வேதம் ஓரிடத்தில் காட்டியுள்ளது. இவர்க்குப் பச்யகர் என்று உண்மையான பெயர் இருந்ததாம். எல்லாவற்றையும் நுட்பமாகப் பார்க்கிறவர் என்று அதன் பொருள். ஒருகால் ஒரு மஹான் இவரை "பச்யகர்' என்று வழங்கவேண்டியதற்குப் பிரதியாக வாய்தவறி கச்யபர் என்று வழங்கினாராம். அது தவறுதலாயிருந்தாலும் மஹானுடைய வாக்கில் தோன்றினதாக

லால் உலகில் அப்படியே (கச்யபரென்றே) அனைவரும் வழங்க வேணுமென்று தெய்வக் கட்டளை ஏற்பட்டு விட்டதாம். அதுபோல, நம் பூருவாசாரியர்கள் கொண்ட பாடங்கள் ஐயங்கார் கருத்தின் படி உருமாறினவை என்றே கொண்டாலும் அவர்களது திருவாக்கில் தோன்றியவை யென்கிற காரணத்தினால் அப்பாடங்களே கொள்ளற்பாலனவாகத் தெய்வக் கட்டளையெனக் கொள்க. பச்யகரென்பது முன்னிருந்த பெயருண்மை யென்பதை வேதமே தெரிவித்ததுபோல முன்னிருந்த பாடவுண்மையையும் வேத நிர்விசேஷமான வொரு திவ்விய நூல் காட்டியிருந்தாலொக்கும். இருள் துயக்குமயக்கு மறப்புகளே வடிவெடுத்த மானிடர் அதைக் காட்டுதற்கு ஸர்வாத்மநாஅநர்ஹரென்பது எற்றைக்கும்வெற்றிபெற்றே நிற்கும்.

இரண்டாவது வியாஸம் முற்றிற்று.

மூன்றாவது வியாஸம்

முடிவான விடையளிப்பு.

ஸ்ரீமத் ராவ்ஸாஹிப் மு. இராகவையங்காரவர்கள் நமது பூருவாசாரியர்களின் அரிய பெரிய வியாக்கியானங்களிற் காணாத பாடங்களைக்காட்டி 'இவையே ஆழ்வார் திருவாக்கில் அவதரித்திருக்க வேண்டும்' என்றெழுதுகின்றாராதலால் ஸர்வஜ்ஞர்களான பூருவாசாரியர்களுக்குத் தெரியவராத பாடங்கள் தமக்குத் தெரியவந்தனவாக வெளியிடுமிது அவைஷ்ணவக்ருத்யமாயிரா நின்றதே யென்று மனம் நொந்தவர்களில் அடியேனுமொருவன். அந்த மன நோவே யடியாகக் கீழிரண்டு வியாஸங்களினால் விரிவான பதிலுரைகளை வெளியிட்டுப் பலபல தத்துவார்த்தங்களைத் தெளிவிக்க நேர்ந்தது.

உண்மையில் அடியேன் ஐயங்காரவர்களிடத்தில் மிக்க கௌரவபுத்தி யுடையவனேயல்லது மாத்ஸரியம் ஈஷத்து முடையேனல்லேனென்பதை முந்துற முன்னம் வியக்தமாக வெளியிட்டிருக்கின்றேன். "ஐயங்கார் அப்ராமாணிகமாக எழுதுகிறாரென்று அடியேன் ஒருநாளும் கருதவில்லை; தாம் நம்பிய சில தமிழ் நூல்களை ஆதாரமாகக்கொண்டே யெழுதுகின்றாரிவர்" என்று முதல் வியாஸத்தில் வெளியிட்டிருப்பது காணலாம்.

"அறியாதார் பேசுகின்ற வார்த்தைகளைக் கேட்டு மருளாதே, பூருவர்கள் சீர்த்த நிலைதன்னை நெஞ்சே சேர்" என்று உபதேசரத்தின மாலையில் நம் மணவாள மாமுனிகளருளிய பாசுரத்தை அநவரதம் சிந்தை செய்யுமடியேன், பூருவாசாரியர்களின் ஸ்ரீஸூக்திகளோடு ஸம்பந்தமற இவரெழுதும் விஷயங்களைக்கண்டு அல்பஜ்ஞர்கள் மருளாதபடி செய்யக் கடமைப்பட்டவனாதலால் இவரது கட்டுரைகளை மறுத்தெழுதவேண்டிய அவசியம் நேர்ந்தது. இது மிக அவசியமான பணியே யென்று பணியாதாரில்லை.

அடியேனெழுதிய விஷயங்களின்மேல் மறுப்பெழுத ஐயங்காரவர்கட்கு அணுவளவும் விஷயமில்லாமையாலும், வாளா விருந்திட முடியாமையாலும் விலக்ஷணமான அநுக்ரஹம் நிரம்பிய நீண்ட கடிதமொன்றையெழுதி (14-9-43ல்) அடியேனுக்கனுப்பியுள்ளார். அதன் முடிவில் "ஒரு பஹிரங்க லிகிதம் என்ற தலைப்பெயரின் கீழ் இதனைத் தேவரீர் வெளியிட வேண்டும்" என்றொரு குறிப்பெழுதியுள்ளார்.

பெரிய லிகிதத்தில் ஆறேழுபக்கம் நிரம்ப எழுதினவதில் விவேகிகள் உவந்து வாசிக்கக்கூடிய விஷயங்களில்லாமையால் அடியேன் அதை வெளியிட விரும்பவில்லை. "இனிப் பாடவமைதிகளைத் தொடர்ந்தெழுதுவதன்றி இவ்வீண்வாதங்களிற் பிரவேசியேன்" என்று அதின் முடிவில் வரைந்தபடியே செந்தமிழ்ப் பத்திரிகையில் [தொகுதி 40, பகுதி 9ல்] ஸமீபகாலத்தில் வெளியிட்ட சில ஏடுகளையும் அடியேனுக்கனுப்பியுள்ளார். அதைப்பற்றி அவசியமாகத் தெரிவிக்கவேண்டிய சில விஷயங்களை எழுதுகின்றேன்.

பெரிய திருவந்தாதி 14-ஆம் பாசுரத்தில் (*சாயாற்கரியானை யென்பதில்) "பாம்பார்வாய்க் கைநீட்டல் பார்த்தி" என்று ஓதப்பட்டு வரும் பாடம். இதைப்பற்றி ஐயங்கார் எழுதுகையில் "திவ்யார்த்த தீபிகையாசிரியரான ஸ்வாமியும் இப்பாடத்தை ஏற்றுக்கொண்டே உரையிட்டருளினர். இதனால் வெண்பா வீறு 'பார்த்தி' என முடிவது தமிழ் விதிக்கு முற்றும் மாறானதென்பது அவ்வாசிரியர் அறிந்ததன்று என்றே தோற்றுகிறது." இத்யாதிகள் பல எழுதியுள்ளார்.

வெண்பாவின் இறுதியில் ஈரசைச்சீர் வந்தால் அது உகரவீற்ற தாகவே யிருக்கவேண்டுமென்பது தமிழ் விதி. இதனை அடியேன் அறியாதவனென்று சில சான்றுகள் காட்டியும் முடிவு செய்திருக் கின்றார். இதற்கு விடை கூறுகின்றேன். அடியேன் அறியாதவனே யாயினும் இந்தத் தமிழ் விதியை இவருணர்த்தி யுணரவேண்டிய நிலைமையில் இருந்திலேன். ஏற்கனவே இவ்விதியை நன்குணர்ந்த வனடியேனென்பதை உலகமறிய நிரூபிக்கின்றேன். அடியேனது வியாக்கியானங்களையும் வியாஸங்களையும் இரவும் பகலுமிடைவிடாது சிந்தனை செய்துவரும் இப்பெரியார் இதனை மறந்ததென்னோ?

10-9-1940ல் வெளிவந்த அம்ருதலஹரி யிதழில் **அருளிச்செயல் திருத்தங்கள்** என்ற மகுடம்புனைந்த வோர் வியாஸத்தில் நான்காவது விஷயம் (பக்கம் 248ல்) காண்க. ஆங்கு அடியேன் எழுதி (37 மாதங்களுக்கு முன்பு வெளியிட்டுள்ள பந்திகளை அப்படியே மீண் டெடுத்துக் காட்டுகிறேன்.

"இயல்சாத்தில் *நன்றுந்திருவுடையோ மென்கிற வெண்பா வில் "பிடித்தார் பிடித்தாரைப் பற்றி" என்றே யாவரும் ஓதி வருவது. இதில் கடைச்சீரில் இரண்டு வகையான குற்றம் தமி ழறிஞர்கள் அறிந்ததாகும். மோனையின்பம் குன்றினது ஒரு குற்றம். இதுவொரு குற்றமா என்று நினைத்துவிடலாம். இரண் டாவது குற்றம் கேண்மின். வெண்பாக்களில் கடைச்சீரானது ஓரசைச்சீராகவோ அன்றி ஈரசைச்சீராகவோ வரலாம். ஓரசைச் சீராயிருந்தால் எப்படியுமிருக்கலாம். ஈரசைச் சீராயிருந்தால் ஈற் றில் உகர மொன்றே இருக்கத்தகும். வேறு எந்த எழுத்தும் இருக்கலாகாதென்பது நியமம். இந்த நியமத்தை அருளிச் செயல் களில் ஒரு வெண்பாவும் கடந்ததில்லை. கதவு, குன்று, வாய்ந்து, நின்று, என்று, பண்டு, பரிசு—என்றிப்படிப்பட்ட உகர வீற்ற தான ஈரசைச்சீர் வந்ததுண்டே யல்லது வேறு வகை கிடையாது. இங்கே [பிடித்தார் பிடித்தாரை] பற்றி என்று இகர வீற்றதான ஈரசைச்சீர்காண்பது பிறழ்வாகவே யிருக்கவேண்டும்.

சில மாதங்களுக்கு முன் ஒருநாள் திருவல்லிக் கேணிக்குச் சென்றிருந்த போது அங்கே இயல் சாத்து ஸேவிக்கையில்

6

"பிடித்தார் பிடித்தாரைப் பற்றி" என்றே ஸேவித்தார்கள். அடியேனுக்குப் பரமாப்தரான ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமியும் அங்கே ஸேவை ஸாதித்தார். "தேவரீருடைய பாடமும் இப்படித்தானே" என்றேன். இப்படித் தான் என்று சொல்லிவிட்டு, "ஆனாலும் நீ கேட்ட படியாலே ஆலோசிக்கிறேன்" என்று ஸாதித்துவிட்டு, சற்றுப்போது ஆலோசித்து "பிடித்தார் பிடித்தாரைப் பெற்று" என்றிருக்கலாமோ? என்று ஸாதித்தார். 'அடியேனைக் கேட்க வேணுமோ? தேவரீரே நிஷ்கர்ஷிக்கலாகாதா?' என்றேன். பிறகு ரஸமான சிலவார்த்தைகள் நடந்தன.

—ப்ர. அண்ணங்கராசாரியன்."

என்பன அவ்விடத்துப் பங்திகள். ஆகவே இப்போதிவருணர்த்தும் வெண்பாவிதியை அடியேன் நெடுநாள் முன்னமே நன்குணர்ந்தும் உணர்த்தியும் போந்தவனென்பது வெளிப்படை.

அங்கே, "இந்த நியமத்லதை அருளிச் செயல்களில் ஒரு வெண்பாவும் கடந்ததில்லை" என்றும் எழுதிவிட்டு மேற்சொன்ன விதிக்கு மாறாகப் பெரிய திருவந்தாதிப் பாசுரத்திற் பாடங்கொண்டு உரையிட்டது ஏன்? சொந்தமாக இயற்றிய வெண்பாவிலும் இந்த விதியைக் கடந்தது ஏன்? என்பது அடுத்தபடியான கேள்வியாகும்.

கேண்மின்; அடியேனுடைய திருப்பாவையுரைத் தொடக்கத்தில் உள்ள வெண்பாவின் ஈற்றடி "அடியேனுக் காரினிநே ராவார்" என்றிருப்பதாக எடுத்துக் காட்டியிருப்பது உண்மையே. இது தமிழ் விதியைக் கடந்ததென்பதும் உண்மையே, உண்மையில் இதில் இனி என்கிற சொல் அடியேனெழுதியதன்று. "அடியேனுக் கார்நேரா வார்" என்றே அடியேனெழுதியிருப்பேன். அடியேன் வஸிப்பது கச்சியில். தீபிகை யச்சிட்டது சென்னையில். அங்கு அச்சுக்கூடத்தில் திருத்தப்பணி செய்து வந்த ஒரு ஸாதாரண பண்டிதர் தாம் சொந்தமாகச் செய்த சில திருத்தங்களில் இதுவுமொன்றாயிருக்க வடுக்குமென்று இப்போது ஊஹிக்கிறேன். இங்ஙனமே, அடியேனியற்றிய மற்றொரு வெண்பாவிலும் "உருகாதா ரெவ்வுலகிலுண்டு" என்று நானெழுதியிருந்த ஈற்றடியை "உருகாதாரிவ்வுலகிலுண்டோ" என்று மாற்றி அச்சிடுவித்திருந்

ததை அடியேன் ஒருகால் காணநேர்ந்து அதற்குத் திருத்தமும் வெளியிட நேர்ந்தது. அங்ஙனம் இதற்கும் நேர்ந்திருக்கவேண்டும், அது இப்போது நேர்ந்துவிட்ட தென்க. அன்றி அடியேனே புத்தி பூர்வமாகவே தவறிவிட்டேனெனினும் இதுவொரு விஷயமன்று. தளையின் தத்துவத்தை நன்கு தெரிந்தவர்களுங் கூட தளை பிறழ்ந்த பாடல்களை ப்ராமாதிகமாகப் பாடிவிடுவது பெரும்பாலுங் கண்டதொன்றே. இவ்வையங்கார் தாமே முதற்றிருவந்தாதிப் பாசுரத்தை * பொருந்தாரிரணியனைப் பொரலுற்று * என்று தளைபிறழ்ந்த வகையில் எடுத்தாண்டதும் அதைப் பிறகு ப்ராமாதிக மென்றிசைந்ததும் இதற்குச் சான்றாகும். விரித்துரைப்பதேன்? இந்தத் தமிழ் விதியை அடியேன் ஏற்கனவே நன்குணர்ந்தவனென்பதை நிரூபித்தவளவு போதுமானது.

இனி, பெரிய திருவந்தாதிப் பாசுரத்திற் காட்டின பார்த்தி என்கிற பாடத்தைப் பற்றி விளம்புகின்றேன். 10—9—40ல் வெளிவந்த லஹரியில் அடியேன் வெளியிட்டிருப்பதாகத் தெரிவித்த வியாஸத்தின் முதலில் எழுதியுள்ள சில வாக்கியங்களையும் காண்மின்;- "மஹர்ஷிகளுக்கும் மேம்பட்டவர்களான ஆழ்வார்களின் பாசுரங்களே சந்தச் சாஸ்த்ரவிதிக்கு இணங்கியிருக்கும்போது ஆசாரியர்களால் அருளிச்செய்யப்பட்ட தனியன் முதலானவற்றில் சந்தோபங்கம் நேர்ந்திருக்கக் காரணமில்லை யென்பது கைமுதிக ந்யாய ஸித்தம். சந்தோபங்கம் காணப்பட்டதேயானால் அது பிற்பட்டகாலத்தில் நேர்ந்த பிறழ்வாகவே கொள்ளக்கடவதாகும்" என்பன அவை. இங்ஙனே அடியேனெழுதியிருப்பதை ஐயங்கார் குறிக்கொண்டிருப்பரேல் இதைத் தமக்குப் பெரிய ஆதாரமாகத் தமது பாடவமைதியின் முகவுரையில் தழுவியிருப்பர் ஏதோ தவறிவிட்டார். அது நிற்க. சந்தோபங்கம் காணப்பட்டதேயானால் அது பிற்பட்ட காலத்தில் நேர்ந்த பிறழ்வேயென்று அடியேன் அங்கு எழுதியிருப்பது ஆழ்வார்களின் ஸ்ரீஸூக்தி விஷயத்திலன்று; பிற்பட்ட ஆசாரியர்கள் இயற்றிய தனியன்கள் திறத்தில் என்பது வெளிப்படை. ஆழ்வார்களின் பாசுரங்கள் சந்தச்சாஸ்த்ர விதிக்கு இணங்கியிருப்பதாக அதற்கு முன்னே மிகவிரிவாகவே எழுதியுள்ளேன். 'பெரும்பாலும்' என்பது எங்கும் இணங்கும். இது சப்பைக் கட்டு என்று ஸஹஸா சொல்லிவிடுவர் ஐயங்கார். இதைப்பற்றி மத்யஸ்

தர்களான விவேகிகள் ப்ராமாணிகமாகத் தெளியும் வண்ணமெழு துகின்றேன்.

ஐயங்கார் பெரிய திருவந்தாதிப் பாடத்தை ஆக்ஷேபித்துத் திருத்தியிருப்பது போலவே திருவிருத்தத்திலும் நாற்பதாம் பாட்டின் ஈற்றடியை ஆக்ஷேபித்துத் திருத்தியுள்ளார். அங்கு 'என்று கொலோ' என்றிருப்பது கூடாதென்றும், என்று சொலே என்று திருத்த வேண்டுமென்றும் வலிதாக எழுதியுள்ளார்.

கீர்த்திமூர்த்தியான வை. மு. சடகோப ராமாநுஜாசாரியர் ஸ்வாமியைத் தமிழுலகமும் ஸ்ரீவைஷ்ணவ வுலகமும் இற்றைக்கும் எற்றைக்கும் போற்றுமென்பது நிர்விவாதம். அந்த மஹான் இலக்கண விலக்கியங்களை நன்கு பயின்றவர், வடமொழியும் விசேஷமாகக் கற்றவர் என்கிற இவ்வளவேயன்று அவர்க்கு ஏற்றம். அருளிச் செயல்களை சுத்த பரம்பரையில் ஓதி நம் ஆசாரியர்களின் வியாக்கியானங்களை நல்லாசிரியர் திருவடிகளிற் பலகாலம் பணிந்து குனிந்து கேட்டவரென்பதே அவர்க்கு விசேஷித்த பெருமை. அத்தகைய சிறப்புகளில் ஏகதேசமும் பெறுததுதான் மற்றையோர்கள் ஆசார்ய ஸ்ரீஸூக்தி விச்வாஸமின்றிக்கே தாந்தோன்றிகளாய் மனம்போன போக்கெல்லாம் எழுதி வருவதற்கு மூலம்.

அடியேனுக்கு ஸாக்ஷாந்மாதாமஹரும் ஜகத்ப்ரஸித்த ஜகதாசார்யரா யெழுந்தருளி யிருந்தவருமான ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீகாஞ்சீ அழகியமணவாள ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி திருவடிகளில் அடியேன் இலக்கணவிலக்கியங்கள் வாசித்துக் கொண்டிருந்த போது ஜீயர்ஸ்வாமி யாத்திரையெழுந்தருள நேர்ந்தது. அப்போது வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமி காஞ்சீபுரத்திற் கெழுந்தருளி (ஸ்வஸம்பந்திக்ருஹத்திலும் மாமனூரகத்திலும்) சில மாதங்கள் தங்கியிருக்க நேர்ந்தது. அப்பொழுது அவரிடத்திலும் சில தமிழ் நூல்களை வாசிக்க அடியேனுக்குப் பாக்கியம் வாய்த்தது. ஜீயர்ஸ்வாமி ஸன்னிதியில் தமிழ் வாசித்து ப்ரஸித்தரான புன்னை ஸ்ரீநிவாஸாசாரியர் பக்கலிலே வை. மு. ச. ஸ்வாமி வாசித்து விளக்கில் கொளுத்தின தீவட்டியாக விளங்கினவர். இங்ஙனே ஜீயர் ஸ்வாமி ஸம்பந்தமும் அவரிடத்தில் இருந்ததனால் அடியேன் மிக்க ப்ரதிபத்தியோடு அவரிடம் வாசிக்க நேர்ந்தது. அந்த மஹானுக்கு

நம் ஆசார்ய ஸ்ரீஸூக்திகளில் இருந்த ஒப்புயர்வற்ற பிரதிபத்தியை அடியேன் அப்போது கண்டு வியந்தேன். அந்த ப்ரதிபத்தி அவரது திருவருளாலேயே அடியேனுக்குச் சிறிதளவு வாய்த்ததென்றும் உள்ளபடி கூறுவேன். சில மாதங்கள் அடியேன் அவரிடத்தில் வாழ்ந்து கேட்டிருந்திலேனாகில் ஐயங்கார்க்கும் மேலாக நானும் ஒரு தான்தோன்றியாயிருந்திருப்பேனென்பது திண்ணம். அடிக்கடி அவரது திருவருளை ஸ்மரிப்பவனடியேன். அந்த மஹானோடு பழகும்போது அவர் ஒருநாள் அடியேனுக்கு நியமித்தார்—'ஆசாரியர்களுடைய ஸ்ரீஸூக்திகளைநாம் எடுத்துக்காட்டும்போதும்அச்சிடுவிக்கும்போதும் நமது அற்பஞானத்தைக் கொண்டு லேசமாத்திரமும் மாறுபடுத்தலாகாது' என்று. [இப்படி நியமிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது.] அப்போது ஆசார்ய ஸ்ரீஸூக்திகளில் ஒன்றையெடுத்துக் காட்டினார்; தன்னடையே என்கிற ஒரு சொல் ஆசாரியர்களால் அடிக்கடி பிரயோகிக்கப்படுகிறது. இது திருத்தமான சொல் அன்றென்றும் 'தன்னடைவே' என்றிருக்கவேணுமென்றும் கருதிச் சில புல்லறிவாளர்கள் மாறுபடுத்துவதுமுண்டு. இப்படிப்பட்ட அபசாரங்களில் தலையிடாதேயென்று நியமித்தார். அது இப்போதடியேனுக்கு ஞாபகத்திற்கு வரும்படி ஐயங்கார் செய்திருக்கின்றார். செந்தமிழில் பக்கம் 277ல், பெரியதிருமொழி 9. 5. 7-ஆம் பாசுரத்தின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்திகளை உதாஹரிக்குமிவர் 'தன்னடைவே போய்க் கொடு நின்றது' என்றெழுதியுள்ளார். தன்னடையே யென்பதுதான் பல்லாயிரமுறை நம் ஆசாரியர்கள் பணித்திருப்பது. முமுக்ஷுப்படியில் 'தன்னடையே சொல்லிற்றாகாதோ வென்னில்' என்பது அநாதிபரம்பரையாய் எங்கும் கண்டஸ்தமாய் வழங்கும் பாடம். இங்ஙனே மாறுபாடுகள் செய்வது ஐயங்கார் பணியென்பதும் அந்த மஹானுக்கு [வை. மு. ச. ஸ்வாமிக்கு] இது சாலவும் அஸஹ்யமென்பதும் இங்கு ப்ரஸங்காத் விஜ்ஞாபிக்க வேண்டியதாயிற்று.

அந்த மஹான் அருளிச் செயல்களில் திரு விருத்தத்திற்கு உரையெழுத அவசியம் பெற்றார். அவரிட்ட உரை உலகமெல்லாம் பரவியுள்ளது. பள்ளிக்கூடங்களிற் பாடமாக வைக்கப்பட்டவது உலகம் நிறைந்த புகழுடைத்து. இப்போது ஐயங்கார் திருவிருத்தத்தில் எந்தப் பாசுரத்தில் ஆக்ஷேபமும் திருத்தமும் செய்துள்

ளாரோ இதே விஷயத்தில் அந்த மஹான் ஆராய்ச்சி செலுத்தாமலில்லை. அவரைப் போன்ற ஆராய்ச்சியாளர் இனி உலகில் தோன்றப்போவதில்லை. அங்கு அவர் ஆராய்ந்து என்ன எழுதியுள்ளாரென்பதைக் கண்ணுடையார் காணவேணும். அவ்வுரையைப் பெரிதும் ஆதாரமாகக்கொண்டே அடியேன் (திருவிருத்தத்திற்கு) உரையிட்டேனாதலால், பொன்னேபோல் போற்றத்தக்க அம்மொழிகளை விடாது அடியேனும் அப்பாட்டினுரையில் விவரித்துள்ளேன்.

"கட்டளைக் கலித்துறையிலமைந்த செய்யுட்களெல்லாம் ஏகாரவீற்றதாய் முடிதல்வேண்டுமென இலக்கண மிருப்பது கொண்டு இப்பாசுரத்தின் முடிவை 'என்று கொலே' என்று சிலர் திருத்தப் பார்ப்பர்; அது வேண்டா. மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார் இங்ஙன மருளிச் செய்திருத்தலால் கட்டளைக் கலித்துறைக்கு ஓகார வீற்றதாதலும் சிறுபான்மை இலக்கணமா மென்பது அறியத்தக்கது. "இலக்கியங்கண்டதற் கிலக்கணமியம்பலின்" என்றன்றோ நன்னூலிற் சொல்லப்பட்டது. அன்றியும் வடமொழியில் வால்மீகி வ்யாஸர் முதலிய மஹர்ஷிகளுடைய கவிதைகளில் ஏதேனும் இலக்கணமாறுபாடு காணுமிடத்து "ஆர்ஷத்வாத் ந தோஷ:* ரிஷிவாக்யமாதலால் குற்ற மில்லை" என்று அதனை வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளல் ஆன்றோர் மரபாதலால், அவர்களினும் ஞானங்கனிந்து நலங்கொண்ட ஆழ்வார்களின் அருளிச் செயலை அங்ஙனம் அமைத்துக் கொள்ளத் தட்டில்லை யென்க. மேலும் வடமொழி வேதத்தின் பிரயோகம் மற்றை வழக்குக்குச் சிற்சில விடத்தில் வேறுபடுதல்போலத் தமிழ் வேதமாகிய இத்திவ்ய ப்ரபந்தத்துக்குங் கொள்க. சிறுபான்மையாகிய இதற்கு இலக்கணமும் இலக்கியமும் வந்த விடத்துக் கண்டுகொள்க. இங்ஙனன்றிக்கே 'என்று கொலே' என ஏகாரவீறாகத் திருத்துதல் அஸம்ப்ரதாயமென்பதும் சொல்நிலைக்குச் சிறவா தென்பதும் உணரத்தக்கது" என்றிருப்பன காணலாம்.

மிகத் தூய்மை பெற்ற இவ்வபிப்பிராயமே இலக்கண விலக்கிய ஞானத்தோடு ஸதாசார்ய ஸேவாபாக்யமும் ஸத்ஸம்ப்ரதாய சுத்தியுமுள்ள மஹநீயர்களெல்லார்க்கு முள்ளது. அருளிச் செயல்

கள் சந்தச்சாஸ்த்ர விதிக்கு இணங்கியவையேயென்று வை. மு. ச. ஸ்வாமியெழுதினாலும் அடியேனெழுதினாலும் மற்றும் எந்த ஆஸ்திகர் எழுதினாலும் அது * பேரும்பாலுமென்ற கருத்தில் தான் அமைந்ததாகும். இது சப்பைக்கட்டன்றென்பது தெள்ளியார்க்குத் தெளிவாகும். சடகோப ராமாநுஜாசாரியர் ஸ்வாமி ஒரு விஷயம் நிர்ணயித்தாரென்றால் அது பெரியவாச்சான்பிள்ளையின் திருவாக்கோடொப்ப மதிக்கத்தக்கதென்பதில் ஐயமுண்டோ? அவரைச் சிறிதளவேனும் அநுகரிக்க ஐயங்கார்க்குப் பாக்கியமில்லையே. அவருடைய கல்வியும் ஆராய்ச்சியும் உலகமெல்லாம் புகழ நிற்றற்கும் ஐயங்கார் போல்வாரது படிப்பும் பரிசீலனைகளும் இகழ நிற்றற்கும் காரணமின்னதென்பதில் புநருக்தி வேணுமோ?

ஐயங்கார் 'என்று கொலோ' 'என்று கொலே' என்கிற இரண்டு பாடங்களையும் தள்ளி மூன்றாவதான பாடம் 'என்று சொலே' என்று கல்பிக்கின்றாரே; இதில் இவருடைய உள்ளமாவது ஸந்துஷ்டியடையுமோ? திரு விருத்தத்திற்குப் பல வியாக்கியானங்களன்றோ அமைந்துள்ளன. இவர் தாம் மிக மெச்சும் வாதிகேஸரி ஜீயரும் ஒரு வியாக்கியானமிட்டருளி யுள்ளாரன்றோ. அவர்க்கும் தெரியாதபாடம் தமக்குத் தெரிந்துவிட்டதாக வெளியிடுதற்கு வெள்காதிருப்பதும் வியப்பன்றோ. இங்கு 'தன்கிளியைச் சொல்லே என்று' திருமங்கை மன்னன் அருளியதும் ஒப்பிடுகவென்கிறாரையங்கார். அது எந்தவகைக்கு ஒப்போ? இவருள்ளமே யறியவேணும். சொல் என்கிற சொல் உலகில் இல்லையென்றாவது, அது ஏவல் வினைமுற்றாக வாராதென்றாவது சிலர் ஆக்ஷேபித்தனர்போலும்.

இப்பாட்டில் நேரிழையீர்! என்ற பன்மைவிளிக்கேற்ப 'சொல்லுமினே' என்று பன்மையாகவே வினைமுற்று இருக்கவேண்டியிருக்க 'சொல்லே' என்று ஒருமையாக இருக்கத்தகுமோவென்று ஐயங்கார் தாமே சங்கித்துக்கொண்டு "......பேசில் நங்காய், மாமாயனென்மகளைச் செய்தனகள் மங்கைமீர் மதிக்கிலேனே (பெரிய திரு 5-5-4) என்ற இடங்களிற்போல ஒருமை பன்மை மயக்கமாகக் கொண்டு அமைத்துக் கொள்ளத்தகும்" என்று ஸமாதானங் காட்டியுள்ளார். அந்தோ! இதென்ன விலக்ஷண் பாண்டித்யம்!. இவரெடுத்துக் காட்டிய கலியன் பாசுரத்தில் நங்காய்! என்ற விளிக்கோ மங்கைமீர் என்ற விளிக்கோ இணங்காதபடி வினைமுற்று உள்ளதோ?

அங்கு அடியேனுடைய திவ்யார்த்த தீபிகையையும் இவர் சிந்தனை செய்திருப்பரே. "எம்பெருமானால் தன் மகளுக்கு நேர்ந்த நிலைமைகளை முதலில் ஒருத்தியோடே சொல்லத் தொடங்கி நங்காய் என ஒருமையாக விளித்துச் சொல்லிக் கொண்டிருக்கையில் க்ரமேண பல மாதர் வந்து கூடி நின்றமையால் **மங்கைமீர்!** எனப் பன்மையாக விளித்து முடித்தாள் திருத்தாய்" என்று தீபிகை. அது எப்படியாயினுமாகுக. அப்பாசுரம் பிரகிருதத்திற்கு எப்படி உவமையாகும்? இப்படிப்பட்ட அஸம்பத்தங்களை நாம் எனைநாள் கண்டு கொண்டிருப்பது.

'என்று சொலே' என்றிருந்த பாடம் என்றுகொலே என்று மாறினதற்கு ஐயங்கார் நிரூபிக்கும் காரணம் மிகவழகியது. "எட்டெழுத்தில்......" என்று தொடங்கி ஏதோ எழுதியுள்ளார். காலஞ்சென்ற மஹாமஹோபாத்யாய. சாமிநாதையரவர்கள் ஒரு சங்க நூலைப் பதிப்பித்து அதற்கு விரிவான முகவுரை யெழுதியுள்ளார். அதில், பிராசீன பாடங்கள் மாறுபடுதற்கான காரணங்களைப் பலவாறு ஊஹித்து வரைந்துள்ளார். அதைக்கண்ட ஐயங்கார் தாமும் அவரைப் பின்பற்றுகிறார். ஓலையேடுகளைப் பார்த்துப் பாடஞ்செய்ததனால் ஒன்றுகிடக்க வொன்று வந்து விட்டதென்கிற வாதத்தை ஐயங்கார் பல காலுமெழுதுகிறார். பெரியதிருமொழியில் 1-4-6 ஆம் பாசுரத்தில் 'கடும்புனல் தகைத்த' என்று ஏட்டுப் பிரதிகளில் இருந்த பாடம் 'கடும்புனல் கயத்த' என்று திரிந்து வந்திட்டதென்று விவரிக்கிறார்.

இங்கு இவர்க்கு நாம் பல சொல்லவேண்டியதுண்டு. வடமொழி வேதம் எழுதாமறையாய் அநாதி ப்ரவசந பரம்பரையிலேயே வருவதுபோல, தமிழ் வேதமும் ஸ்ரீமந் நாதமுனிகள் காலந்தொடங்கி ப்ரவசந பரம்பரையிலேயே வருகின்றதேயன்றி ஏடு பார்த்துப் பயில்வார் ஆருமில்லை. இவர் படித்த நூல்களும் சாமிநாதையர் பதிப்பித்த நூல்களுமே அத்தகையன.

ஆசார்ய ஹ்ருதயத்தில் (37) "அத்யயந ஜ்ஞாநாநுஷ்டானங்களாலே ப்ராஹ்மண்யமாகிறாப்போலே சந்தங்களாயிரமு மறியக் கற்று வல்லாரானால் வைஷ்ணவத்வஸித்தி" என்ற சூர்ணைக்கு வியாக்கியான மிட்டருளா நின்ற மணவாள மாமுனிகள்—

*ஸ்வாத்யாயோத்யேதவ்ய: * என்கிறபடியே ப்ரதமம் வேதத்தை ஆசார்யோச்சாரண முகேந அக்ஷராசிக்ரஹணம் பண்ணுகையாகிற அத்யயநத்தைப்பண்ணி...... ப்ராஹ்மண்யம் ஸித்திக்குமாபோலே *சந்தங்களாயிரம்* என்கிறபடியே சந்தோரூபமாய் ஸஹஸ்ர சாகையாயிருக்கிற திருவாய்மொழியை *அறியக்கற்று வல்லார் வைட்டணவர்* என்கிறபடியே......ஆசார்யோச்சாரண அநூச்சாரண முகேந அப்யஸிக்கையாகிற அத்யயநத்தைப் பண்ணி உபதேச முகத்தாலே ததர்த்தஜ்ஞானம் பிறந்து தததநுரூபமாக அநுஷ்டிக்கவும் வல்லாராய்த்து வைஷ்ணவத்வம் ஸித்திப்பதென்கை."

என்றருளிச் செய்திருக்கிறபடியே ஆசார்யோச்சாரண அநூச்சாரணக்ரமேணவன்றோ அருளிச்செயற் பரம்பரை வந்திருக்கின்றது. ஏடுபார்த்துப் பாடஞ்செய்வதும் அதனால் பாடம் திரிந்ததென்பதும் அருளிச்செயல் விஷயத்தில் பேச அதிமாத்ரம் அப்ரஸக்தம். ஸ்ரீவைஷ்ணவர்கள் பேசும் பேச்சன்றிது.

முதன் முதலாக நாலாயிர திவ்யப்பிரபந்தத்தைப் பதிப்பித்த வொருவர் சொற்களைப் பிரிக்காமலும் ஒரு பரிஷ்காரமும் செய்யாமலும் அச்சிட்டிருந்தார். பெரிய திருவந்தாதியில் *மாண்பாவித்தஞ்ஞான்று மண்ணிரந்தான் மாயவணஞ், சூண்பாவித்துண்டானது* என்று பதிப்பித்திருந்தார். இதில் பிழை சிறிதுமில்லை. ஆனால் சொற்பிரிப்பின்றியே பதிப்பித்திருக்கின்றதென்பதொன்றே. இதைக்கண்ட தமிழ்ப் புலவரொருவர் இப்படியே பாடஞ்செய்துகொண்டு 'மாயவணம் என்றுலென்ன? சூண்பாவித்தலாவது என்ன?' என்று பலரையும் கேட்டுக்கொடுதிரிந்தாராம். அங்கு 'மாயவள் நஞ்சு ஊண்பாவித்து' என்று பூதநா ஸ்தந்யபானஞ் சொல்லுகிறதென்பதை அவர் அறியப் பெற்றிலர். இங்ஙனம், ஆசார்யரை யடிபணிந்து கற்க இருய்த்துப் புத்தகம் பார்த்தே சிந்திப்பார் சிலருளர். அவர்களைப்பற்றி நமக்கென்ன?

நம் ஐயங்கார் திருப்பல்லாண்டு கூட குருமுகமாக ஓதியறியார். திருப்பல்லாண்டு தனியனே குருமுகமநதீத்யதானே. ஏடுபார்த்தாவது பாசுரங்களை முகபாடஞ் செய்திருக்கிறாரோவென்னில் பெண்டிரும் பேதையருமறிந்த பாசுரங்களைக்கூட அறியாரென்று

சபதஞ் செய்வேன். இப்படிப்பட்டவர்கள் இத்தமிழ் வேதத்தின் அருகு வருவதற்கும் அர்ஹதையுடையரல்லர். "நிர்மூல காலக்ஷேபம், அந்யாய வேதாந்தம்" [அதாவது, மூலம் கற்காமலே வியாக்கியானங்கள் காலக்ஷேபஞ்செய்வது, நியாயம் பயிலாமலே வேதாந்தம் கற்பது] என்கிற பழமொழியின்படி மூலந்தானில்லையானாலும் ஓராசிரியர் பாடேயிருந்து சில ஸ்ரீகோசங்களை அவிழ்த்துக் கட்டியாவது காலக்ஷேபஞ் செய்தற்றதாக வுண்டோவென்னில், அதற்கென்ன குறையென்று பொய்யாகவும்சொல்லத் துணியாரென்று நம்புகிறேன். அப்படி ஓராசிரியர் ஏற்பட்டிருந்தாலும் அவர்க்கு ஒன்றிரண்டு நாளிலேயே பரிபூர்ண ஸம்பாவனை தந்திருப்பரென்பதில் ஐயமின்று.

இங்ஙனே அடியேனெழுதுவது அதிகப்ரஸங்கமென்று தோற்றவுங்கூடும். எங்ஙனே தோற்றினும் தோற்றுக. உள்ளதுரைப்பாரை உலகம் பகைத்தே தீரும். அறிவோமிதனை. நிற்க. ஐயங்காரெழுதியுள்ளபடி ஏடுபார்த்துத் தவறுதலாகக் கற்றதனால் அநாதிகாலமாகவே பாடம் திரிந்ததென்கிற வார்த்தை ஆசார்யஹ்ருதயமும் தத்வ்யாக்யாநமும் நடையாடும் நாட்டிலே ஸ்ரீவைஷ்ணவர்கள் செவி புதைக்கத்தக்கது.

ஆசார்யோச்சாரண அநூச்சாரண பரம்பரையால் வந்த பாடமாயின் பாடபேதங்களுண்டாகக் காரணமென்ன? என்கிற கேள்வி அடுத்து நிற்கும். கேண்மின். ஓலைப்படா ப்ரமாணமென்று எண்டிசையும் புகழ்பெற்ற வடமொழி வேதத்திலும் அக்ஷரபேதங்களும் பதபேதங்களும் வாக்யபேதங்களும் ஸ்வரபேதங்களும் பல பல விளைந்திருப்பது வேதமோதினார்க்குத் தெரியும். த்ராவிட பாடம் ஆந்த்ரபாடமென்று பாஷ்யகாரர்களே குறிப்பிடுகிறார்கள்.

நம் வேதத்தில் மூன்றாவது காண்டத்தில் மூன்றாவது ப்ரச்நத்தில் (17-ஆம்பஞ்சாதியில்) ***புநரிமம் லோகம் ப்ரத்யவரோஹந்தி*** என்றொரு வாக்கியம். இதில் 'ப்ரத்யவரோஹதி' யென்று ஏகவசநமாகச் சிலர்க்குப்பாடம். (ந்தி) என்று பஹுவசனமாகப் பலர்க்குப் பாடம். இருவகுப்பினரும் ஒன்று சேர்ந்து ஓதுங்காலே நாளைக்கும் கோஷம் மிகுவதுண்டு. இங்ஙனே பல விடங்களுள. இதனால், "பழைய தமிழ்நூல்களெல்லாம் சுவடிகளினின்றே பெயர்த்தெழு

திப் பதிப்பிடப் பெற்றவை" என்று தொடங்கி ஐயங்கார் எழுதியிருக்குமதுஇங்கு ஸர்வாத்மநா அஸங்கதமென்று மூதலிக்கப்பட்டதாயிற்று. இந்த ஊஹாபோஹங்களெல்லாம் இவர்க்குத் தனமான சுவடிகளளவிலே நிற்க.

இனி ப்ரக்ருதவிஷயம். இவரெடுத்த பெரியதிருவந்தாதிப் பாசுரத்தில் பார்த்தி என்ற பாடம் தமிழ் விதிக்கு மாறுயிருக்க, இதை 'பார்த்து' என்று உகர வீற்றதாகத் திருத்தி ஏன் தீபிகை யெழுதவில்லை யென்று கேட்பார்க்குச் சொல்லுகிறோம். பார்த்து என்று வினையெச்சமான பாடம் பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம்பற்றினதாக அணுவளவும் புலப்படவில்லை. அப்பிள்ளையருளிய உரையில் பார்த்தி என்கிற வினைமுற்றான பாடமும் அதற்குரியபொருளும் ஸுஸ்பஷ்டமாகவேயுள்ளது. பிள்ளை லோகஞ்சீயர் முதலானோரைப் போலன்றிக்கே மணவாள மாமுனிகளுக்கு நேரே திருவடியாயிருந்த அப்பிள்ளைகொண்ட பாடம் நம் ஆசாரியர்கள் கொண்ட பாடமாகவே மதிக்கத்தக்கதாதலால் அதில் ஒரு அநுபபத்தியைக்காட்டி, ஒரு நாளும் காதில் விழாத புதிய பாடமொன்றைக் கல்பனை செய்ய அடியேனுக்கு அவசியம் தோன்றவில்லை.

தென் மொழியிற்போலவே வடமொழியிலும் யாப்புவிதிகள் பலவுண்டு. ஒருச்லோகத்திற்கு நான்கு பாதங்களுள்ளன. ஒரு பாதத்தில் பல பதங்கள் இருக்கும். பாதத்தின் முடிவில் வரும் பதமானது அந்த பாதத்திலேயே முடியவேண்டுமேயல்லாது அந்த பதத்தின் சில எழுத்துக்கள் அடுத்த பாதத்தோடு சேரக்கூடாதென்பது விதி. உலகிற்காணும் எந்த ச்லோகத்தை யெடுத்துக்கொண்டாலும் இந்த விதி ஓரிடத்திலும் மீறப்பட்டிராது. மஹாவித்வத்வரேண்யரான ஸ்ரீபட்டர் பலபல ச்லோகங்களருளிச் செய்திருக்கிறார். மேற்சொன்ன விதியைத் தழுவியே எல்லாமருளிச் செய்தவர் ஒருச்லோகத்தில் மாத்திரம் இந்தவிதியை மீறியுள்ளார். கேண்மின்;

ஸ்ரீரங்கராஜஸ்தவம் பூர்வசதகத்தில் (91) கிரீட சூடாத்ந ராஜி: என்கிற ச்லோகம் காண்மின். *முடிச்சோதியாயுனது முகச்சோதி மலர்ந்ததுவோ* என்கிற திருவாய்மொழியொன்றுக்கு இந்த ச்லோகம் மொழிபெயர்ப்பாயுள்ளது. இதில் பாதந்தோறும்

எட்டெழுத்துக்கள். முதல் பாதத்தின் முடிவில் ராஜி: என்கிற பதம் எப்படி அமைந்திருக்கிறதென்று காணவேணும். ரா என்னு மெழுத்தை முதற்பாதத்தின் முடிவில் வைத்து ஜீ என்னு மெழுத்தை இரண்டாம் பாதத்தின் ஆதியில் வைத்திருக்கிறுரென்பது ஸ்பஷ்டம். இது வடமொழி யாப்புவிதிக்கு மாருயது. அதற்காக நாம் க்வசித் இப்படியு முண்டென்று கொள்ளவேணுமத்தனை. அன்றி, அதைத் திருத்தவாவது, அவ்வண்ணம் நாமும் கவி பண்ண நினைக்கவாவது கூடாது. இதுபோன்றதே பார்த்தி யென்கிற இவ்விட்டமும்.

இது தமிழ்விதிக்கு மாருயிருக்கிறதென்கிற ப்ரஸ்தாவமும் நாம் செய்யாதது, ஏற்கனவே திருவிருத்தவுரையில் "எம்மை நோக்குவதென்று கொலோ" என்றவிடத்து விரியவுரைத்த நியாயம் இங்கு மொக்குமென்ற நினைவினுலேயே. அப்பாசுரமும் இப்பாசுரமும் வெகு ஸமீபஸ்தமாதலால் உபேக்ஷிக்க நேர்ந்தது.

அடியேன்து தீபிகையில், தளை தட்டுகின்றதென்கிற காரணங்காட்டிப் பாடங்களைப் பரிஷ்கரித்திருக்குமிடங்களில் விவேகிகள் ஊன்றி நோக்கவேணும். 'தளை தட்டுகையாலே பாடத்தைத் திருத்தவே வேண்டும்' என்று அடியேனுக்குக் கொள்கையிருந்ததுமில்லை, அங்ஙனம் எழுதினதுமில்லை. இரண்டுவகையான பாடங்கள் காணுமிடத்து இலக்கண விதிக்கு உரியபாட மொன்றைக் கொண்டு, மற்றதைக் கைவிட்டு, கொண்ட பாடத்திற்கு உபபத்தி காட்டுமதே அடியேன் பணி.

இதை நன்கு மூதலிக்கிறேன். முதல் திருவந்தாதியில் (15) *முதலாவார் மூவர் அம்மூவருள்ளும்* என்கிற பாடமும் 'மூவரே' என்கிற பாடமும் ஆக இரண்டும் வழங்குபவை. இதற்குப் பழைய அச்சுப் புத்தகங்களே சாக்ஷி. இங்கு அடியேனுடைய தீபிகை காண்மின் ;—

"*முதலாவார் மூவர் என்றே பெரும்பான்மையாகப் பாடம் வழங்கிவருமாயினும் அதில் தளை தட்டுதலாலும் பெரியோர்களின்

பாடமன்றாகையாலும் மூவரே யென்ற பாடங் கொள்ளப்பட்டது. சிலர், மூவர் என்றே பாடங்கொண்டு 'அம்மூவருள்ளும்' என்ற விடத்து 'அம்மூவரினுள்ளும்' என்று கொண்டால் வெண்டளைக்குச் சேர்ந்துவிடுகிறதென்பர்; ஆன்றோரருளிச் செயல்களில் நம்முடைய ஸ்வாதந்திரியத்தை உபயோகித்தல் உரியதன்றென்றுணர்க." என்றெழுதியுள்ளே னென்பது ப்ரஸித்தம். இதில் கடைசி வாக்கியமே ஐயங்காருள்ளத்திலூறக்கடவது.

மற்றோரிடமுங் காட்டுகிறேன்; நான்முகன் திருவந்தாதியில் (28) *இது விலங்கை யீடழிய* என்கிற பாட்டின் தீபிகையில்—

"வீழ்த்ததுவும் என்று சிலர்க்குப் பாடமாம்; அப்பாடத்தில் வெண்டளை பிறழும்" என்றெழுதியுள்ளேன். இங்கு 'வீழ்த்தது' என்கிற பாடம் நாலாயிரப்பதிப்புக்களிற் பெரும்பான்மையாகவும், வீழ்த்ததுவும் என்கிறபாடம் சிறுபான்மையாகவும் காண்பதனால் சிலருடைய பாடத்தை இலக்கண விதிகாட்டி மறுத்தது பொருத்தம். ஒரு பதிப்பிலும் காணாத பாடத்தை அடியேனாகக் கல்பித்த விடம் கிடையாது. கிடைக்குமானால் அங்குப் பூர்வாசார்ய வ்யாக்யாந ஸம்வாதம் அவசியம் காட்டப் பெற்றேயிருக்கும். இத்தகைய விரதத்தின் கீழ் உரையிட்டு வருமடியேன் பெரிய திருவந்தாதி விவாதஸ்தலத்தில் 'பார்த்து' என்று பாடத்தை மாற்றவோ ப்ரஸ்தாவம் செய்யவோ ப்ராப்தியற்றவனென்பது புநருக்தம். பல தமிழறிஞர்கள் பரிசோதித்துப் பதிப்பித்த நாலாயிரப் பதிப் பொன்றிலும் பார்த்தென்கிற பாடம் பார்த்திலேன்.

பூர்வாசார்ய வியாக்கியான விருத்தமாக இவர் திருத்திக்காட்டும் பாடங்கள் ஸ்ரீவைஷ்ணவகோஷ்டீ பஹிஷ்டங்களேயென்று பல கால் நாம் வற்புறுத்தி யெழுதிவிடவே, இப்போது ஐயங்கார் தாம் திருத்தும் பாடங்களைப் பெரியவாச்சான்பிள்ளைக்கும் அபிமதமாக எழுதிவரத் தொடங்கியுள்ளார். உண்மையில் பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திக்கும் இவர் திருத்தும் பாடத்திற்கும் ஸம்பந்தமேயில்லை யாயினும் ஸம்பந்த ஆரோபணமாவது செய்கிறவளவுக்கு நாம் உவக்கின்றோம். ஆனால் இது இவருடைய உபக்ரமப்ரதிஜ்ஞைக்கு

மிகவும் விரோதமானதென்பதை உலகம் உணரவேணும். பூருவாசாரியர்களின் காலத்தில் பயிலாத [அவர்களுடைய புத்திக்குக் கோசரியாத] பாடங்களைப்பற்றியே தாம் எழுதப் புறப்படுவதாகவும், மற்றவகையான பாடங்களைப்பற்றித்தாம் ஒன்றும் பேசப்போகிறதில்லையாகவும் முகப்பில் ஸ்பஷ்டமாக வரைந்துள்ளாரென்பதை உலகமறியும். அப்படியிருக்க இப்போதிவர் வேறு வழியில் இழிந்திருப்பது உலகவஞ்சனையே யாகுமென்பதை யுணர்ந்துகொள்ளச் சிரமமுண்டோ?

பெரிய திருமொழியில் (1-4-6) *காரணந்தன்னால் கடும்புனல் கயத்த * என்று உலகமெங்கும் பரவியதும் பதிப்புகளிலெல்லாமேறியதும் ஸங்கதமுமான பாடத்தை இவர் 'கடும்புனல் தகைத்த' என்று மாற்றி, இதுவே பெரியவாச்சான்பிள்ளை காலத்துப் பாடமென்று மெழுதிப்போருகிறார். இங்ஙனே பாடம் தேறும்படியாகவே பழைய ஸ்ரீகோசங்களில் எழுத்துக்கள் அமைந்திருப்பதைப் பொதுவாகக் காணலாமென்கிறார். அப்படி யொரு ஸ்ரீகோசத்தை இவர் காட்டியருளினால் காணத் தடையென்? கடும்புனறகயதத என்றிருப்பதாகக் காட்டுவர் போலும். அப்படியே காட்டி விட்டதாக வைத்துக்கொள்வோம். அதிலிருந்து தகைத்த என்ற பாடம் இவர்க்கு நேரே கிடைக்க வழியில்லை. அவ்வெழுத்துக்களைப் பார்த்துப் பாடம் பண்ணினவர்கள் தவறுதலான பாடங்கொண்டு விட்டார்களென்றும் அப்படி யெழுதினவர்கள் தாமும் 'கடும்புனறகைதத' என்றெழுதவேண்டியதை 'கடும்புனறகயதத' என்று தவறுதலாக எழுதிவிட்டார்களென்றும் பல தவறுகளை இவர் சாதிக்கின்றார். இது சிறிதும் பொருந்தாது. இவ்விடத்தில் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில், புனல் என்பதற்கு 'ஜலத்தை யுடைத்தான' என்று பொருள் ஸ்பஷ்டமாக அருளிச்செய்யப்பட்டிருப்பதைக் காணலாம். இவர், 'புனல் தகைத்த' என்று பாடம் வைத்து ஜலத்தைத் தடுத்த என்று பொருள் எழுதுவது மல்லாமல் இதுதான் பெரியவாச்சான்பிள்ளை கொண்டபாடம் என்றும் ஸாதிப்பது மிகுந்த ஸாஹஸமல்லவா?

இங்கு அடியேன் மத்யஸ்த புத்தியுடன் எழுதுகின்றேன். இவரெழுதியுள்ளபடியான ஸம்பவங்கள் ஓலையேடுகளில் அஸம்பாவிதங்

களல்ல, ஸூதராம் ஸம்பாவிதங்களே. அடியேனும் பல ஓலை ஸ்ரீ கோசங்களைப் பார்த்திருப்பவனே. கண்டபர்டத்தில் வாராமல் புத்தகத் தளவிலேயே நிற்கிற க்ரந்தங்களின் விஷயத்தில் இவை கொண்டு ஸாத்யாம்சங்களுண்டு. வடமொழி வேதமும் தமிழ்வேதமும் அநாதிபரம்பரையாகக் கண்ட பாடத்திலே வருமவை. அச்சுக்கூடங்கள் ஏற்பட்ட பின்பு வேதங்களும் அச்சிடப்பட்டு வித்யார்த்திகள் சந்தை சொல்லிக்கொள்ள ஆரம்பிக்கும்போதே புத்தகத்தைக் கையிற்கொள்ளுகிற வழக்கம் இக்காலத்திலிருந்தாலும் சென்ற நூற்றுண்டு வரையில் இவ்வழக்கம் ஓரிடத்திலும் கிடையாது. உபய வேதங்களையும் அதிகாரிகள் அத்யயந-அத்யாபந பரம்பரையிலேயே கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படியிருக்க, ஐயங்கார் நிரூபிக்கிற ரீதியில் தவறுகள் தமிழ்வேதத்தில் வந்து புக அவகாசமுண்டாவென்று விவேகிகள் விமர்சிக்கவேணும்.

வடமொழி வேதம் போல ஸ்வரநிர்ப்பந்த மில்லாததான அருளிச்செயலை ஏடுபார்த்தும் சிலர் அதிகரிக்கலாம். தகுந்த ஆசாரியர்கள் கிடைக்காத விடங்களில் புத்தகத்தைப் பார்த்தே சிலர் பாடம் பண்ணிவிடுவது ஸம்பாவிதம். அவர்க்குத் தவறுன பாடம் நேரவுங்கூடும். அதுவே உலகமெங்கும் பரவி விட்டதென்றால் இது ஏற்கத் தக்கதாமோ? பூருவர்களின் காலத்திலேயே இத்தகையதவறுகள் ஸம்பவித்து விட்டனவென்றும் அவற்றை அவர்கள் அறிந்திலரென்றும் இவர் கருதுவது மிகவும் ஹேயம்.

பெரிய திருமொழியில் * செம்பொன் மதிள் சூழ் தென்னிலங்கைக் கிறைவன் சிரங்கள் ஐயிரண்டும் * என்பது ஒரு பாசுரம். ஆசார்யமுகமாக க்ரஹியாமல் புத்தகம் பார்த்துப் பாடம் பண்ணுமொருவர் இப்பாசுரத்தைப் புத்தகத்திற் கண்டபடியே பாடம் பண்ணி "செம்பொன் மதிள்சூழ் தென்னிலங்கைக் கிறைவன் சிரங்களை—யிரண்டும்" என்று உருப்போட்டு அப்படியே ஸேவிக்க ஆரம்பித்தார். புத்தகத்தில் "சிரங்கள் ஐயிரண்டும்" என்று பிரித்து இல்லை. சிரங்களையிரண்டும்' என்றிருந்ததனால், இராவணன் தலை ஐயிரண்டு—பத்தல்லவோ என்கிற அர்த்தத்தின் ப்ரதிஸந்தானமின்றிக்கே 'சிரங்களை இரண்டும்' என்று பிரித்துக்கொண்டு ஸேவித்தார். கோஷ்டியிலுள்ளார் சிரிக்கப் புகுந்தார்கள். புஸ்தக பாடமோ

வென்று ஏசினர்கள். உடனே அநுதபித்துத் திருத்திக்கொண்டார். இங்ஙனே சில கதைகள் கேட்டிருப்பதுண்டு. இப்போது ஐயங்கார் எழுதுவதோ ஸர்வாத்மநா அஸம்பாவிதமான விசித்திரமே.

செந்தமிழில் இவர் எதையாவது எழுதிக்கொள்க. இனி நாம் அவற்றைக் கண்ணுறக் கருதுகின்றிலோம். அருளிச்செயல் மூலத்தையும் அர்த்தத்தையும் க்ரஹிப்பதில் ஆசார்யாச்ரயணமில்லாதவர்கள் ஸ்வதந்திரமாகச் செய்யுமாராய்ச்சிகளைக் * 'கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோ தான்.'

முடிவான விடையளிப்பு முற்றிற்று

தமிழுலகுக்கு ஓர் முக்கியமான அறிவிப்பு.

தமிழறிந்த அன்பர்காள்!, மு. ராகவையங்காரவர்கள் செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிட்டு வரும் கட்டுரைகள் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டீ பஹிஷ்டமென்பது கல்வெட்டாகி முடிந்தது. ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் அபிமான மற்ற சாதாரணத் தமிழர்களுக்காவது அந்தக் கட்டுரைகள் மகிழ்ச்சியைத் தருமோ வென்னில், அந்தோ! அதுவுமில்லை யென்பது தான் செந்தமிழ்ப்பத்திராதிபர் முதலான மஹான்களால் நன்கு அறியத்தக்கது. சென்ற ஆவணி மாதத்துச் செந்தமிழில் * கண்டுகொள் கிற்குமாறு * என்ற திருமழிசைப்பிரான்பாசுரத்திலும் * பேராயிரமுடையானென்றாள் பேர்த்தேயும் * என்ற திருமங்கையாழ்வார் பாசுரத்திலும் வெண்டளை பிறழா திருக்கவும் பிறழ்ந்திட்டதாக மருண்டு திருத்தம் செய்து வெளியிட்டிருக்கின்ற ஐயங்காரவர்களுடைய தமிழறிவின் கனத்தையும் ஆராய்ச்சி வல்லமையையும் நாடு நகரமும் நன்கறிந்தேயிருக்கும்.

பண்டித. கிருஷ்ணஸ்வாமி.

ஆழ்வார்களின் கால ஆராய்ச்சிக்காரர்களுக்கு அறிவிப்பு.

(ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம். அண்ணங்கராசாரியர்.)

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் சிறந்த மெய்யடியார்களாகக் கொண்டாடப்படுகின்ற 'பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசையையன் அருள்மாறன் சேரலர்கோன் துய்யபட்ட நாதன் அன்பர்தாள் தூளி நற்பாணன் நன்கலியன்' என்னும் ஆழ்வார்கள் பிறந்து வளர்ந்தகாலம் எது? என்பதைப் பலர் ஆராயப்புகுந்து பல பல வகையாக வரைந்திருக்கின்றார்களென்பது இவ்வுலகில் பிரசித்தமானதே. இவ்வாராய்ச்சி விஷயமாகச் சிலருடைய கட்டுரைகள் அச்சாகி வெளிவந்துள்ளன; வேறு சிலருடைய கட்டுரைகள் அச்சிடப் பெறாது எழுத்தளவிலே நிற்கின்றன. இத்தகைய புத்தகங்களை நாம் பெரும்பாலும் பார்த்திருக்கின்றோம். ஒவ்வொருவர் எழுதியிருப்பதும் மிக மிக விசித்திரமாகவே யுள்ளது. ஆழ்வார்களினுடைய வரிசைக்கிரமம் பூருவாசாரியர்களால் அநுஸந்திக்கப்பட்ட விதம் மணவாளமாமுனிகளால் உபதேச ரத்தினமாலையில் "ஈதிவர் தோற்றத்தடைவாமிங்கு" என்று காட்டப்பட்டிரா நின்றது. புதிய ஆராய்ச்சியாளர்கள் இவ்வரிசைக் கிரமத்தையும் மாறுபடக் கூறுகின்றனர். ஆழ்வார்களெல்லார்க்கும் பிந்தியே நம்மாழ்வார் அவதரித்தாரென்றும், மதுரகவிகள் நம்மாழ்வார்க்கும் ஆசாரியரே யல்லது சிஷ்யரல்லர் என்றும், ஸ்ரீராமாநுஜரென்கிற உடையவருடைய காலத்திற்குப் பிறகும் சில ஆழ்வார்கள் தோன்றினர் என்றும் இப்புடைகளிலே அவரவர்கள் எழுதிவைத்திருப்பவை எடுத்துக் கழிக்கவும் தகாதவை.

சிலர், தாங்கள் மிகவும் பிராமாணிகமாக ஆராய்ச்சி செய்வதாகவும், தகுந்த சான்றுகள் காட்டுவதாகவும் கூறி, கி. பி. நாலைந்து நூற்றாண்டுகட்குப் பிறகே ஆழ்வார்கள் அவதரிக்க ஆரம்பித்தார்களென்றும், இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முன் ஒரு ஆழ்வாரும் இருந்ததில்லையென்றும் வரைகின்றார்கள். ஆங்காங்குச் சில சிலாசாசனங்களும் செப்பேடுகளும் மற்றுஞ் சில

ஆதாரங்களும் தங்கட்குத் துணைபுரிகின்றனவாகத் தெரிவிக்கின்றார்கள்.

இருளும் மருளுமே வடிவெடுத்த இவர்களது கட்டுரைகளை நேரிய நெறியிலே களைந்தொழிக்கவேணுமென்று பல பெரியார்கள் அடியேனுக்குப் பலகாலும் தெரிவிப்பதுண்டு. ஆனாலும் இந்த மறுப்புத் துறையிலே இறங்க எனது மனம் இசையவில்லை; ஏனெனின், ஆழ்வார்கள் எக்காலத்தில் அவதரித்தவர்களாயினுமாகுக; பல்லாயிரம் வருடங்கட்கு முற்பட்டவர்கள என்கிற காரணத்தினாலேயே ஒரு ஏற்றமும், சில நூற்றாண்டுகட்குள்ளாகவே தோன்றியவர்கள் என்கிற காரணத்தினால் ஒரு தாழ்வும் எண்ணுவாரில்லை. "புராணமித்யேவ ந ஸாது ஸர்வம் நசாபி காவ்யம் நவமித்யவத்யம்" என்றார் காளிதாஸ மகாகவி. உப்புக் கிணறொன்று நாலாயிரமாண்டுகட்கு முற்பட்டதெனினும் அதில் தண்ணீரருந்தார்கள்; அமுதக் கிணறு இன்று நேற்றே தோன்றிற்றெனினும் அதனை ஆதரிக்கப் பின்வாங்குவார் ஒருவருமிருக்கில்லார். வீடு பற்றுக்களுக்குக் குற்றமும் நற்றமும் காரணமேயல்லது பழமையும் புதுமையும் காரணமல்லவென்பது விவேகிகளுக்குத் தெரிவரிதன்று.

ஆனால் சிலர் சொல்லக்கூடும்; நூதனமாக அமைக்கப்படுகின்ற ஆலயங்களுக்குப் பெருமையில்லாமையும் புராதனங்களென்று புகலப்படுகின்ற ஆலயங்களுக்கே பெருமையிருப்பதும் காண்கின்றோம்; அதுபோல, திவ்வியப் பிரபந்தங்கட்கும் புராதனமென்கிற காரணத்தினால் பெருமையுண்டாகவேணுமென்று கருதியே சிலர் ஆழ்வார்களின் காலத்தை வெகு பண்டைக்காலமென்று காட்டப் புகுந்தார்கள்—என்று.

இந்த வாதமே பெரும்பாலும் நமது செவியில் விழுகின்றது. இதற்கு நாம் கூறும் விடையை நடு நிலைமையிலுள்ளவர்கள் குறிக்கொள்ளவேணும். ஆழ்வார்களுக்கும் அவர்களது திவ்வியப் பிரபந்தங்களுக்கும் பெருமை ஏற்பட்டிராத காலம் யாருடைய புத்திக்காவது புலப்படுகின்றதா? என்று பார்க்கவேணும். வடமொழிப் புலவர்களாக மிக்க பிரசித்தி பெற்றிருந்த ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்

தார் ஸ்ரீராமானுஜர் முதலான பூருவாசாரியர்கள் தாங்கள் உபநிஷத்துக்கள் முதலியவற்றால் போது போக்குவதை விட்டிட்டு திவ்வியப் பிரபந்தங்களையே ஓவாத வூணாகக் கொண்டிருந்தார்களென்பது ஒருவராலும் அபலாபம் செய்ய முடியாத விஷயம். உடையவர் காலம் இற்றைக்குச் சற்று ஏறக்குறைய ஆயிரமாண்டு ஆகிறது. அப்போது எழுந்தருளியிருந்தவரான ஸ்ரீபட்டர் [கூரத்தாழ்வான் திருக்குமாரர்] தாம் அருளிச்செய்த ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் முதல் சதகத்தில்—"பராங்குசாத்யாః ப்ரதமே புமாம்ஸః நிக்ஷேதிவாம்ஸோ தச மாம் தயேரந்" என்றருளியுள்ளார். இதனால், அக்காலத்திலேயே ஆழ்வார்கள் பதின்மர்க்கும் திருவரங்கம் பெரிய கோயிலில் விக்ரஹப் பிரதிஷ்டை நடந்து முடிந்திருக்கின்றதென்பது ஸ்பஷ்டமாகத் தெரியவருகின்றது. இப்போது ஒவ்வொரு ஆழ்வார்க்கும் தனித்தனி ஆலயம் காணப்படுவதுபோலன்றி அக்காலத்தில் பத்து ஆழ்வார்களும் ஓரிடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தார்களென்பது மேலெடுத்துக்காட்டிய சுலோகத்தினால் நன்கு விளங்குகின்றது. இந்த ஸந்நிவேசம் ஸ்ரீரங்கத்தில் நாளைக்கும் ப்ரத்யக்ஷஸித்தம். இதனால், ஆயிரமாண்டுகட்கு முந்தியே ஆழ்வார்கட்கு விக்ரஹப்ரதிஷ்டை நடைபெற்றிருக்கின்றமை விளங்கிற்று.

இனி ஆழ்வார்களுடைய திவ்வியப்பிரபந்தங்களுக்குத் தேவாலயங்களில் பாராயணம் எக்காலத்தில் ஏற்பட்டதென்று பார்ப்போம். கம்பரென்னும் கவிசக்ரவர்த்தியானவர் உடையவர்காலத்திற்கு மிகமிக முந்தியவர் என்பது விவாதமற்ற விஷயம். அப்படிப்பட்டவரான கம்பர் தாம் இயற்றிய சடகோபரந்தாதியில்

"அந்தமிலா மறையாயிரத்தாழ்ந்த வரும்பொருளைச்
செந்தமிழாகத் திருத்திலனேல் நிலத்தேவர்களும்,
தந்தம் விழாவுமழகுமென்னும் தமிழார்கவியின்
பந்தம் விழாவொழுகுங் குருகூர்வந்த வண்ணவனே."

என்று ஒரு பாசுரம் பாடியுள்ளார். ஆழ்வாரருளிச்செயல் அவதரியாதிருந்தால் ஸ்ரீவைஷ்ணவர்களின் கதி என்னாகுமென்றும், ஆலயங்க

ளில் நடைபெறும் உத்ஸவங்களின் கதிதான் என்னுகுமென்றும் உரு கிப் பேசுகின்றாரிதில். கம்பர் தாம் கண்கூடாகக் கண்ட விஷயத்தை யன்றோ வரைந்துள்ளார். அக்காலத்து ஸ்ரீவைஷ்ணவ பிராமணர்கள் ஆழ்வாரருளிச் செயல்கொண்டே பெருமை பெற்றிருந்ததும், தேவாலய உத்ஸவங்கள் தமிழ்வேத பாராயணத்தினுலேயே பெருமை பொலிய நின்றதுமாகிய உண்மைகளை நிஷ்பக்ஷபாதமாகக் கம்பர் காட்டியிருக்கின்றாராதலால், ஸ்ரீராமாநுஜர் காலத்திற்கு மிக மிக முந்தியே ஆழ்வார்களுடைய பெருமை உலகிற் பொலிந்து வந்த தென்பது தமிழுலகில் மறுக்கத்தகாத விஷயமாகும்.

திவ்வியப் பிரபந்தங்கட்குத் தமிழ்வேத மென்னும் சிறப்புப் பெயர் கம்பர் காலத்திலேயே நிகழ்ந்து வந்ததென்றால், அக்கம்ப ருக்கு மிக மிகப் பிற்பட்டவர்களான சில ஸ்ரீவைஷ்ணவாசாரியர்கள் ஆழ்வார்கட்கும் அருளிச்செயல்கட்கும் ஒரு பெருமையை ஸாதிக்க வேண்டி, புதிய காலத்தைப் பழைய காலமாக்கி யெழுதி வைத்திட் டார்கள் என்று வாதிப்பது சிறிதேனும் பொருத்தமுடைத்தோ ?

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஸ்ரீமந்நாத முனிகட்கு முன் ஒரு ஆசாரியரும் வீறுபெற்று விளங்கினராக நமக்குப் புலப்பட வில்லை. நம்மாழ்வார்க்கும் நாதமுனிகட்கும் இடையே வெகுகாலம் சென்றிருக்கின்றதென்பது ஸ்ரீவைஷ்ணவர்களின் கொள்கை. ஸ்ரீமத் வேதாந்த தேசிகரும் தாம் இயற்றியருளின குருபரம்பராஸாரமென் னும் ரஹஸ்ய நூலில் நாதமுனிகள் நம்மாழ்வாரை யோக தசையிலே ஸாக்ஷாத்கரித்து அருள் பெற்றதாகவே அருளிச்செய்துள்ளார். இதெல்லாம் பொய்யாக எழுதிவைத்தவை என்பது நவீன ஆராய்ச்சி யாளர்களின் ஆதாரமற்ற வாதம். இந்த நவீனர்கள் செல்லும் வழி யிலேயே நாமுஞ்சென்று பேசுகின்றேமிப்போது.

கம்பர் காலமும் ஸ்ரீமந்நாதமுனிகள் காலமும் ஒன்றேயென் பது ஸந்தேஹமும் விவாதமுமற்ற விஷயம். நாதமுனிகள் காலத் தில்தான் திவ்வியப் பிரபந்தங்களின் பிரசாரம் பிரபலப்பட்டதென் பது யாவருமிசைந்ததொன்று. நாதமுனிகளின் காலத்திற்குச் சில நூற்றுண்டுகட்கு முந்தியே பொய்கையார் முதலிய பதின்மரும்

அவதரித்தார்கள் என்றும், நாலைந்து ஆயிரமாண்டுகட்கு முன் அவர்கள் அவதரித்ததாகக் கூறுதல் பொருந்ாதென்றும் போராடுகின்ற புதுமக்கள், திவ்வியப் பிரபந்தங்களில் காணும் சில அரசர்களின் செய்திகளைப் பிடித்துக்கொண்டு, சாசனங்களின் உதவியையுங் கொண்டு தங்களுடைய ஆராய்ச்சியை ஆதாரமுடையதாகச் செய்யப் பார்க்கின்றனர்.

ஆதியந்த மற்றதாகப் பெரும்பாலோரால் இசையப்பட்டுள்ள வடமொழி வேதத்திலும் காண்கின்ற பல கதைகளைப் பற்றிக் கொண்டால் அந்த வேதமும் கி. பி. இத்தனையாவது நூற்றாண்டில் தோன்றியது என்று வாதிக்க இடமேற்படும் போலும். 'நமக்குத் தந்தை தாயர் இன்னார்' என்பதை ருஜுவான பிரமாணத்தினால் திண்ணமாகக் கண்டறிந்து நிஷ்கர்ஷிக்கமாட்டாதவர்கள் பலவகைகளாலும் அதீந்திரியமான விஷயங்களை அனுமானங்களாலும் குயுக்திகளாலும் நிர்ணயிக்கப் புகுவது ஸாஹஸமான காரியமாகும். இவர்கள் காட்டுகிற சாசனங்கள் முதலியன எவ்வளவு தூரம் நம்பத்தகுந்தவை யென்பதும் அவற்றில் இவர்களுடைய மருள்மயக்கங்கள் எப்படிப்பட்டவை யென்பதும் இவர்கள் தாங்களே ஒருவரையொருவர் மறுத்து எழுதும் கட்டுரைகளினால் நன்கு அறியத்தக்கன. அதையும் சிறிது ஈண்டு விவரிக்கின்றோம்.

"தஞ்சாவூர்—கரந்தைத் தமிழ்ச் சங்கம் வெள்ளி விழா நினைவு மலர்" என்று ஸ்ரீமான். த. வே. உமாமகேசுவரனவர்கள் (சங்கத் தலைவர்.) ஒரு புத்தகம் தயாரித்தார். அதில், திரு. கே. ஜி. சேஷையர் B. A. B. L. அவர்கள் (முன் உயர்நீதிமன்ற நீதிபதி. திருவனந்தபுரம்) எழுதிய கட்டுரையொன்று நம்மாழ்வார் காலவாராய்ச்சி. இதில் இப்பெரியார், ஸ்ரீமான் கோபிநாதராயர் என்பாரொருவர் 'ஸ்ரீவைஷ்ணவரின் சரித்திரம்' என்று ஒரு நூல் ஆங்கிலத்தில் எழுதியிருப்பதாகவும், அதில் ஆனைமலைச் சிலாசாசனமொன்றை ஆதாரமாகக்கொண்டு நம்மாழ்வார் கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தனராகக் காட்டப்பட்டிருப்பதாகவும் கூறி, அதற்கு மறுப்பு எழுதி வருகையில் அந்த கோபிநாதராயரவர்கள்

சிலாசாசனத்திலுள்ள வாசகங்களின் பொருளை உள்ளபடி உணரகில்லாது மருண்டு தவருக எழுதிவிட்டாரென்று நிரூபணம் செய்திருக்கின்ருர். *மயர்வற மதிநலமருளப் பெற்றவராகத் தம்மை நினைத்துக்கொண்டு "நம்மாழ்வார் காலம் கி. பி. ஆருவது நூற்ருண்டின் முற்பகுதியென்று கொள்ளுதல் தகும்" என்று நிகமனஞ் செய்கிருர் அப்பெரியார். திருவாளர் சிவஞானமூர்த்தியார் என்கிற மற்ருெரு பெரியார் அந்த சேஷையரவர்களது கட்டுரையையும் மறுத்து நம்மாழ்வார் காலத்தை இன்னும் இரண்டு மூன்று நூற்ருண்டுகட்கு முன்னே தள்ளலாம் என்றெழுதுகின்ருர்.

"முள்ளைக்கொண்டே முள்ளைக்களைவது" என்னும் பழமொழியும், வத்ஸாஸுரனைக்கொண்டு கபித்தாஸுரனை மோதி இருவரையும் தொலைத்த கண்ணபிரானது சரிதையும் நமக்கு நினைவுக்கு வருகின்றன.

இருள்துயக்கு மயக்கு மறப்பென்கிறவற்றுக்கெல்லாம் கொள்கலமாகிய நம் போலியர் தகர்க்குமளவிலே நிற்பதன்று உண்மைப் பொருள். ஆயினும் இவர்கள் சித்தாந்தம் செய்கிறபடியே ஆழ்வார்கள் மிகவும் பிற்காலத்தவர்களென்றே வைத்துக் கொள்வோம். கி. பி. ஆருவது நூற்ருண்டிலிருந்தவர் நம்மாழ்வார் என்கிருர்கள். பதினாருவது நூற்ருண்டிலென்றும் வைத்துக்கொள்வோம். நிகழும் நூற்ருண்டில் என்றும் வைத்துக்கொள்வோம். அருமருந்தன்ன திவ்வியப் பிரபந்தங்கள் "தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன் மாலைகள் சொன்னேன்" என்றபடி அநுபவரஸிகர்களுக்குத் தேனும் பாலும் நெய்யும் கன்னலு மமுதுமாக அமைந்திருக்கின்றமை அபலபிக்க முடியாத விஷயம். பதினாயிர மாண்டுகட்கு முற்பட்டவை யென்று வேறு சில நூற்கள் கிடைத்தாலும் அவற்றை ஒரு பொருளாக மதிப்பாரில்லை.

திருவாய்மொழியின் ஈற்றுப் பாசுரத்தின் வியாக்கியானத்திலே (ஈடுமுப்பத்தாருயிரப்படியில்) நம்பிள்ளை அருளியுள்ள ஒரு அற்புதமான ஸ்ரீஸூக்தி காண்மின்;

"ஆழ்வார்க்குப்பின்பு நூறுயிரம் கவிகள் போருமுண்டாய்த்து அவர்கள் கவிகளோடு கடலோசையோடு வாசியற்று அவற்றைவிட்டு இவற்றைப்பற்றித் துவளுகைக்கடி இவருடைய பக்தியபிநிவேசம் வழிந்து புறப்பட்ட சொல்லாகையிறே."

என்கிற இந்த ஸ்ரீஸூக்திகள் விலையுயர்ந்தவை.

இங்ஙனமாக நம்பூருவாசாரியர்கள் விசேஷித்து ஈடுபட்டிருத்தற்கு இலக்கான திவ்வியப்பிரபந்தங்கள் உபய விபூதிக்கும் பரம போக்யமாக அமைந்திருக்குமழகு வேறு எந்த நூலுக்கும் அமைய மாட்டாதது. இப்படிப்பட்ட திவ்வியப் பிரபந்தங்களும் இவற்றுக்கு வக்தாக்களான ஆழ்வார்களும் என்றைக்கு அவதரித்தாலென்ன?

ஆழ்வார்களுடைய அவதாரம் ஏற்கனவே மஹர்ஷிகளாலும் புராணங்களிலே காட்டப்பட்டிரா நின்றது. வடமொழிப் புராணங்களில் ஸ்ரீபாகவதமென்பது மிகவும் ப்ரஸித்தமாகவும் பெருமை பெற்றதாகவும் விளங்குகின்றது. அதில் பதினோராவது ஸ்கந்தத்தில் ஐந்தாவது அத்தியாயத்தில் 38. 39, ஆம் ச்லோகங்கள் ஸ்மார்த்தர் மாத்வர் வைஷ்ணவர் சைவர் என்னும் வாசியின்றி ஸகல ஜனங்களாலும் நிர்விவாதமாகப் பாராயணம் செய்யப்பட்டு வருகின்றன; அந்த ச்லோகங்களாவன ;—

"கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணாः
க்வசித் க்வசித் மஹாபாக த்ரமிடேஷு ச பூரிசः,
தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ
காவேரீ ச மஹாபுண்யா ப்ரதீசீ ஸுரவர்த்மகா,"

என்பனவாம்.

கலியுகத்திலும் ஸ்ரீநாராயணனையே உபாயோபேயமாகக்கொண்ட பரம பக்தர்கள் சிற்சில விடங்களில் அவதரிக்கப்போகிறார்களென்றும், தமிழ்நாடுகளிலே (அதாவது) தாமிரபர்ணி, க்ருதமாலை, பாலாறு, காவேரி முதலிய புண்ணிய நதிகள் பெருகுமிடங்களிலே விசேஷித்து பக்தர்கள் அவதரிக்கப் போகிறார்களென்றும் இந்த ச்லோகங்களில் கூறப்பட்டுள்ளது. மேற்கூறிய புண்ணிய நதிகளின் கரைகளிலே ஆழ்வார்கள் பதின்மர்தாம் அவதரித்துள்ளார்கள் என்பது கையிலங்கு நெல்லிக்கனி போன்றதாகும்.

இங்ஙனே மஹா முனிவர்களின் அகக்கண்ணுக்கு இலக்காகி நின்ற பேராசிரியர்கள் எக்காலத்தில் அவதரித்தவர்களானாலும் அவர்களது ஒப்புயர்வற்ற பெருமைக்கும் அவர்களது திவ்ய ஸ்ரீஸூக்திகளின் மஹிமைக்கும் ஒருவராலும் ஒருநாளும் ஒரு குறையும் சொல்லப்போகாதென்பது திண்ணம்.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகர் மிகச் சிறந்ததோர் வார்த்தையை அருளியுள்ளார். அதாவது, "ததாத்வே நூதநம் ஸர்வம் ஆயத்யாஞ்ச புராதநம்" என்பதாம். எதுவுமே தோன்றும்போது புதிதாயும் நாளடைவில் பழையதாயும் ஆய்விடுமென்பது இதன் கருத்து. இந்த ரீதியிலே நோக்குமவர்கள் காலவிசாரத்தில் சிறிதும் கைவைக்கமாட்டார்கள்.

முற்குறித்த திருவாளர் சேஷையரவர்கள் தமது கட்டுரையில் எழுதியுள்ள மற்றுஞ்சில விஷயங்களைப்பற்றித் தத்துவமுணர்த்துவோமிங்கு.

"நம்மாழ்வார் காலத்தில் சைவவைணவ சம்வாதமில்லை யென்பதற்குத் திருவாய்மொழியே சான்று பகரும்; அக்காலத்தில் வைணவரும் திருநீறிட்டு வந்தார் போலும்; "கரிய மேனிமிசை வெளிய நீறு சிறிதேயிடும்" (4-5-6) என்றும், நீறு செவ்வே யிடக்காணில் நெடுமாலடியாரென்றோடும்" (4-4-7) என்றும் நம்மாழ்வார் கூறியிருக்கின்றார்".

என்று ஐயரவர்கள் வரைந்துள்ளார். நமது திருவாய்மொழி திவ்யார்த்த தீபிகையுரையை, அல்லது பூருவாசாரியர்களின் வியாக்கியானத்தைச் சிறிதேனும் நோக்கி யிருப்பரேல் இங்ஙனம் எழுதத் துணிந்திரார்.

எமது தீபிகையுரை வாக்கியங்களை அப்படியே யிங்கெடுத்துக் காட்டுகின்றோம். "[கரியமேனி மிசை வெளிய நீறு சிறிதேயிடும்] இதற்குப் பலவகையாகப் பொருள் பணிப்பர்கள். மேலே * பெரிய கோலத் தடங்கண்ணன் * என்று திருக்கண்களின் ப்ரஸ்தாவமிருக்கையாலே கரியமேனிமிசை என்றது—திருக்கண்களில் கருவிழியினுடைய கறுத்த நிறத்தால் வந்த அழகுக்குமேலே என்றபடி. வெளியநீறு சிறிதேயிடும்—அஞ்சன சூர்ணத்தை மங்கலமாகச் சிறிது

அணிந்து கொள்ளுகிற என்றபடி. 'வெளியர் — அஞ்சனம்.' என்று பன்னீராயிரம். வேதாந்த தேசிகன் தாத்பர்ய ரத்நாவளியில் இப்பாசுரத்திற்காக * கர்ப்பூராலேப சோபே * என்றருளிச் செய்திருக்கக் காண்கையாலே, சாமளமான திருமேனியிலே பச்சைக்கருப்பூர தூளியை அணிந்து கொள்ளுகிற என்றும் பொருள் கொள்ளலாம். வெளிய என்றது வெள்ளிய என்றபடி. கரி அம்மேனிமிசை மேளிய, நீறு சிறிதேயிடும் என்றுகொண்டு, கரி-குவலயாபீட யானையானது, அம்மேனிமிசை-கண்ணபிரானது அந்தத் திருமேனியிலே, வெளிய — சிறிப்பாய்ந்தவளவிலே, சிறிதே- க்ஷணகாலத்திற்குள், நீறு இடும்- அந்த யானையைப் பொடிபடுத்தின, என்றுனும் ஒரு தமிழன்."

இனி, * நீறு செவ்வேயிடக்காணில் * என்றவிடத்தும் எம்முடைய தீபிகையுரை வாக்கியங்களை யெடுத்துக்காட்டுகின்றோம்;—

"நீறு செவ்வேயிடக்காணில் நெடுமாலடியாரேன்றேடும்— திருமாலடியார்களுக்கு பஸ்மதாரணம் சாஸ்த்ர நிஷித்தம் என்னுமிடம் ஆழ்வாரறியாததன்று; நீறு இடுமவர்களை நெடுமாலடியாரென்று பிரதிபத்திபண்ண ப்ரஸக்தியில்லை; அப்படியிருக்க இங்கு அருளிச் செய்வதற்குக் கருத்து என்னென்னில்; இங்கே ஆறுயிரப்படி யருளிச்செயல்— 'த்ரவ்யம் ஏதேனுமாகிலும் ஊர்த்த்வமாக இடக்காணில் நெடுமாலடியா ரென்றேடும்' என்பதாம். இதனை அடியொற்றியே மற்ற வியாக்யானங்களுமுள்ளன. பஸ்மதாரணம் பண்ணினவர்களேயாயினும் அந்த பஸ்மத்தைக் குறுக்கே பூசாதே நெடுக இட்டால் 'ஊர்த்வபுண்ட்ரதாரிகளிவர்கள்' என்று அவ்வளவுக்காக ப்ரதிபத்தி பண்ணுமென்றபடி. ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் அருளிச்செய்த ஸச்சரித்ர ரக்ஷையில் ஊர்த்வ புண்ட்ரதாரண விதிப்பகுதியில் * நநு ஸமஸ்தபாகவத ஸார்த்த ஸங்க்ருஹீத...... * என்று தொடங்கி அருளிச் செய்யப்பட்டிருக்கும் விஷயங்களும் குறிக்கொள்ளத் தக்கவை. (அவற்றின் சுருக்கம் வருமாறு;) ஸகல பாகவதர்களாலும் சிரமேற்கொள்ளப்பட்ட தமிழ் வேதமாகிய திருவாய்மொழியில் 'நீறு செவ்வேயிடக் காணில் நெடுமாலடியா ரென்றேடும்' என்கிற பாசுரத்தினால் பகவத் பக்தர்களுக்கு பஸ்மதாரணம் லக்ஷணம்போல் தெரிவிக்கப்பட்டிருக்கிறதே, இது எப்படி? என்று

க்ஷேபித்துக் கொண்டு சில ஸமாதானங்கள் அருளிச் செய்யப்பட்டுள்ளன; கீழே நாம் காட்டிய வகையிலே ஒரு ஸமாதானம். மற்றொரு ஸமாதானமாவது நீறு என்னுஞ்சொல் பஸ்மத்தையே சொல்லும் என்கிற நியதியில்லை; ஆழ்வார்தாமே 'மாயன் தமரடி நீறு கொண்டு அணிய முயலில்' என்று வேறோரிடத்தில் அருளிச் செய்திருக்கையாலே பாகவதர்களின் திருவடிப் பொடியையும் பொருளாகக் கொள்ளலாமென்பதாம்.

பஸ்மதாரணம் பண்ணுகிறவர்கள் குறுக்கே பூசக் காண்பதொழிய ஊர்த்த்வமாக இடுவது முண்டோவென்று சிலர் முற்காலத்திலேயே சங்கித்தார்கள்; அதற்குப் பரிஹாரமும் நம்பிள்ளை யருளிச் செய்தார். ஈட்டு ஸ்ரீஸூக்தி காண்மின்;—'அவர்கள் செவ்வேயிடுவர்களோ வென்னில், அதுவுமன்றிக்கே இதுவுமன்றிக்கே மசகப்ராயரா யிருப்பவர்கள் தரிப்பர்களிறே.' (அதாவது) இரண்டுங் கெட்டான் என்று சொல்லப்படுகிற சிலர் பஸ்மத்தையே ஊர்த்வ புண்ட்ரமாகவும் தரிப்பார்கள் என்றபடி.''

மேற்குறித்த இரண்டு விஷயங்களிலும் இன்று நாம் புதிதாக எழுத வேண்டியது ஒன்றுமில்லை யென்று நிற்கின்றோம்.

நம்மாழ்வார் தமது திருநெற்றியில் விஷ்ணு பாதாகாரமான திருமண்காப்பையே தாம் அணிந்து கொண்டிருந்தமையைத் திருவாய் மொழியிலேயே * நெற்றியுள் நின்று என்னை யாளும் நிரைமலர்ப்பாதங்கள் சூடி * என்கிற பாசுரத்தினால் ஐயந்திரிபறக் காட்டியிருக்க, அபார்த்தங்களுக்கு அவகாச லேசமுமில்லை யென்றுணர்க. சிவபிரான் முதலான தெய்வங்களுங்கூட விஷ்ணு பாதாகாரமான திவ்யோர்த்வ புண்ட்ரத்தையே அணிந்து கொண்டிருந்ததாக நம்மாழ்வார் அப்பாசுரத்தில் காட்டியிருக்கின்றாரென்பதையும் அறிவுடையார் கண்டு தெளிக.

(மற்றது பின்வரும்-)

ஸ்ரீ:

பார்மலி நற்புகழாளராய் ஸேவை ஸாதித்துவரும் இராமநாதபு

ஸேது ஸம்ஸ்தான மஹாவித்வான்

ஸ்ரீ. உ. வே. ரா. இராகவையங்கார் ஸ்வாமியின்

திருவாக்கு வருமாறு:—

"...ஸ்ரீகாஞ்சீநகரத்து ஸ்ரீ வைஷ்ணவ பரமாசார்ய குலதிலகரா வும் உபய வேத வேதாந்த வித்வத் சிகாமணியாகவும் விளங் கின்ற ஸ்ரீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகளால் இனிது இயற்றப்பெற்றுள்ள திவ்யார்த்த தீபிகையென்னும் பெரிய நூலை யான் பலநாளாகப் படித்துப் பார்த்துள்ளேன். நம் பூருவா சாரியர்கள் அருளிச்செய்த வியாக்கியானங்கள் அறிதற் கரியன வாய் அதிக வடமொழிக் கலப்புடையனவாயிருத்தலை நோக்கி நம் தமிழ்மக்கள் எளிதினுணர்ந்து கொள்ளும் வண்ணம் இனிய தமிழ் நடையில் நூற்பொருளை நன்கு விளக்கி இவ்விரிவுரை நிற்றலைக்கண்டு நாடோறுங் களிபேருவகை யடையா நின்றேன். இவ்வாசிரியரது உரை நடை வடமொழி தென்மொழிகளில் இ கட்குள்ள அரிய பெரிய பயிற்சியையும் நுணுகிய ஆராய்ச்சியின் திறத்தையும் நன்கு புலப்படுத்துகிறது. தமிழ் வல்லுநர் ப இவ்விரிவுரையைக் கற்று மிகவும் அன்புகூர்ந்து பாராட்டுதல் யான் பலவூர்களிற் கண்டுளேன். இவ்வினிய தமிழ் விரிவுரைய பெருந்தகுதியை நோக்கி இவரை திவ்யப்ரபந்தப்பேராசிரியர் என்றே சிறப்பித்துக்கூறுவேனெனின், அது கற்றூர் பலர்க்கும் உடன்பாடே யாம். இருமொழிப் புலமையும் நூற்கடலாழ் பொருள்களைப் பிறர்க் கெடுத்துரைக்கும் வன்மையும் பாஷ்யம் போல நூல்கட்கு விரி வுரையெழுதுந் திறனும் கவியியற்றும் பெற்றியும் இவ்வாசிரியர் பால் நிறைந்து விளங்குகின்றன. ....

இவர்கள் செய்துவரும் இவ்வரிய வித்யாதானத்திற்குப் பெரு நன்றி பாராட்டுதல் கடப்பாடேயாகவும், அங்ஙன மில்லாது பொறா மையால் ஏலாத குறைகளை யேற்றி இழிக்கப் புகுவாருளராயின் அச்செயல் அவர் உள்க்குறைபாட்டைப் புலப்படுத்துவதன்றி வேறாகாது. இத்தகைய பெரியார் இன்னும் பல அறிவுவிளக்க நூல்களை இயற்றி உலகிற்கு உபகரித்து நீடூழி வாழுமாறு பர தெய்வத்தின் திருவருளைப் பிரார்த்திக்கிறேன்.